# வரலாறு புரண்ட கதை

இஸ்லாத்தின் எதிரிகள் அதன் காவலர்களான உண்மை வரலாறு



அஷ்ஷெய்க் அஷ்கர் அரூஸ் (நளீமி) B.A

இஸ்லாமிக் புக் ஹவுஸ்

# வரலாறு புரண்ட கதை

## இஸ்லாத்தின் எதிரிகள் அதன்
## காவலர்களான உண்மை வரலாறு

தொகுப்பாசிரியர்
அஷ்கர் அரூஸ் (நளீமி)

B
இஸ்லாமிக் புக் ஹவுஸ்

நூல் : வரலாறு புரண்ட கதை
ஆசிரியர் : அஷ்கர் அரூஸ் (நளீமி)
பதிப்புரிமை : ஆசிரியருக்கே
இரண்டாம் பதிப்பு : 2014

B
வெளியீடும் விநியோகமும் : இஸ்லாமிக் புக் ஹவுஸ்
77, தெமடகொட வீதி, கொழும்பு 09
தொ.பேசி: 2684851, 2669197
பெக்ஸ்: 2688102
பக்கங்கள் : 97
விலை : 150.00

ISBN: 978-955-46-99-12-0 :

# வரலாற்றில் மக்கள் சாரிசாரியாக இஸ்லாத்தைத் தழுவிய சந்தர்ப்பங்கள் மூன்று

★ மக்கா வெற்றியின்போது

★ எகிப்து வெற்றி கொள்ளப்பட்டபோது

★ மங்கோலிய – தாத்தாரியர்கள் வெற்றி கொள்ளப்பட்டபோது

–மௌலானா அபுல் ஹஸன் அலி அந்நத்வி

## உள்ளே

| | |
|---|---|
| அணிந்துரை | VII-VIII |
| முன்னுரை | IX-X |
| சிரமப் பணி | 11-27 |
| காஷ்கர் நகர் நுழைவாயில் | 28-40 |
| தொடர் பயணம் | 41-42 |
| சிறைவாசலில் | 42-45 |
| மன்னன் முன்னிலையில் | 46-53 |
| மன்னனின் சதி! | 53-54 |
| மீளும் பாதையில் கார் மேகங்கள் | 55-56 |
| துயர வானில் | 57-61 |
| பாதையின் இயல்பு | 62 |
| மரணத்தின் விளிம்பில்... | 63-66 |
| எதிர்பார்த்த விளைவில் | 67-68 |
| கனவா? ...கானல் நீரா? | 68-73 |
| போர்க்களத்தில்... | 74-78 |
| இஸ்லாத்தின் வல்லமை | 79 |
| உசாத்துணைகள் | 80 |
| அடிக்குறிப்பு | 81-82 |

# பதிப்புரை

அருளாளனைப் புகழ்ந்து அவன் பெயர் கொண்டு ஆரம்பம் செய்கிறேன்; அவனது தூதர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!

வரலாறு புரண்ட கதை- இஸ்லாத்தின் எதிரிகள் அதன் காவலர்களான வரலாற்றை துல்லியமாக விளக்கும் இந்நூலை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். நடைமுறையில் இருந்த உலக ஒழுங்கை மாற்றி ஒரு புதுயுகத்தைப் படைப்பதற்காக அல்லாஹ் தனது இறுதித் தூதரை சத்திய மார்க்கத்தையும், நேர்வழியையும் கொடுத்து அனுப்பினான். நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் இந்த உலகிற்கு அல்லாஹ்வின் தூதைச் சுமந்து வந்தபோது அவர் எதிர்நோக்கிய சமூகத்தில் காணப்பட்ட அத்தனை பண்புகளையும் நாம் வாழும் நவீன யுகமும் கொண்டிருக்கிறது.

அன்றைய ஜாஹிலிய்ய சமூகம் கஃபாவை நிர்வாணமாக வலம் வந்தது. இன்றைய நவீன ஜாஹிலிய்ய சமூகம் அரைநிர்வாணமாக உலகை வலம் வருகின்றது. அன்றைய கல்நெஞ்சம் கொண்ட மனிதர்கள் தமது குழந்தைகளை உயிரோடு குழி தோண்டிப் புதைத்தார்கள். இன்றைய மனிதன் தாயின் கருவிலேயே சிசுவிற்கு சமாதி கட்டுகிறான். எனவே, நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் அன்று ஏற்படுத்திய சமூக மாற்றத்துக்கு நிகரான பாரியதொரு பிரயத்தனம் நவீன உலகிலும் தேவைப்படுகின்றது.

இஸ்லாமிய வரலாற்றில் மனிதர்கள் தமது இயற்கைப் (பித்ரா) பண்புகளை விட்டும் தூரமாகி, அல்லாஹ் ஏகன்; அவனைத் தவிர வணங்குவதற்கோ சட்டம் இயற்றுவதற்கோ நேசிப்பதற்கோ உதவி தேடுவதற்கோ யாரும் இல்லை என்ற அடிப் படையில் எழுந்த சமூக ஒழுங்கை மாற்ற முயற்சிக்கும்போதெல்லாம் அதனைப் பாது காப்பதற்காக அல்லாஹ் சில மனிதர்களைத் தோற்றுவித்தான். உமர் இப்னு அப்துல் அஸீஸ், இமாம் கஸ்ஸாலி, அப்துல் காதிர் ஜீலானி, இப்னு தைமிய்யா (ரஹிமஹுமுல் லாஹ்) எனத் தொடங்கி அறிஞர்களானஅப்துல் வஹ்ஹாப், இல்யாஸ், நத்வி, ஹஸனுல் பன்னா, மௌலானா மௌதூதி (ரஹிமஹுமுல்லாஹ்) என அப்பட்டியல் நீண்டு செல்கின்றது.

இத்தகைய இஸ்லாமிய சமூகத்தை அழித்தொழித்து, அதன் முதுசங்களை யெல்லாம் நீர்முலமாக்குவதற்கு முயற்சித்த கறைபடிந்த வரலாறு மங்கோலிய- தாத்தாரியர்களது வரலாறு. எமது பெறுமதிமிக்க முதுசங்களை அழித்த கவலைக் கிடமான அந்தக் காட்சிகளைப் பார்ப்பதற்கு என்னை என் தாய் பெற்றிருக்காமல்

இருந்திருக்கக் கூடாதா! என சமகாலத்து அறிஞர் இப்னு அதீர் அங்கலாய்க்கும் சோக வரலாறு அது. எனினும், அல்லாஹ் அவர்களைக் கொண்டே இந்த மார்க்கத்துக்குப் பாதுகாப்பளித்தான். இந்த பௌதிக விதிகளுக்கு முரணாக நடைபெற்ற இந்த அற்புத மான சமூக மாற்றம் எப்படி நடைபெற்றது என்பதனை மிக அழகாகச் சித்திரிக்கும் நூல்தான் வரலாறு புரண்ட கதை.

இந்த நூல் சமூக மாற்றத்துக்காக உழைக்கும் ஒவ்வோர் இஸ்லாமிய ஊழியனினதும் வீட்டு வாசிகசாலையை அலங்கரிக்க வேண்டும் என நாம் எதிர்பார் கின்றோம். எம்மைப் பொறுத்தவரையில், நாம் அனுபவ முதிர்ச்சியோ, ஆழமான அறிவுப்புலமையோ கொண்டவர்களல்ல. மாறாக, நடைமுறையில் இருக்கும் சமூகச் சீர்கேடுகளையும் அநீதிகளையும் அனாச்சாரங்களையும் கண்டு ஆதங்கப்படுபவர்கள். உலகுக்கு ஒளியூட்டி நீதியை வழங்கவென்றே அல்லாஹ்வால் முழு மனித சமூகத் துக்கும் என உருவாக்கப்பட்ட நடுநிலையான சமூகம் இத்தகைய சமூகச் சீர்கேடு களுக்கு முன்னால் சூடு சுரணையற்று கைகட்டி நிற்பதையிட்டு ரோஷமுற்றவர்கள். இத்தகைய உணர்வுகளின் வெளிப்பாடுதான் உங்கள் கரங்களில் தவழும் எமது முதற் பிரசவம். இந்த நூலை வாசிப்பதன் மூலம் சமூகத்தில் ஓர் அதிர்வேனும் ஏற்படு மேயானால் அதுவே எமது முயற்சியின் வெற்றியாகும்.

இறுதியாக இந்நூலை வெளியிடுவதற்கு உதிப்பையும் சக்தியையும் அருளாகப் பொழிந்த அல்லாஹ்வைப் பல்லாயிரம் முறை புகழ்கிறோம். இந்நூலின் இறுதிக்கட்ட அச்சுப் பிரதித் திருத்தத்தில் உதவிய ஓய்வு பெற்ற அதிபர் நிதார் ஆசிரியர் அவர்களுக்கும் சகோதரன் இன்ஷாப் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். இன்ஷா அல்லாஹ் சமூக மாற்றம் நிகழும் வரையில் சமூக மாற்றத்தை நோக்கிய எமது பயணமும் தொடரும்.

இந்நூல் வெளிவருவதற்கு காரணமாக அமைந்த அனைவரையும் நன்றியோடு நாம் நினைவுகூருகின்றோம். அல்லாஹ் எமது முயற்சிகளை அங்கீகரித்து அருள்புரி வானாக.!

-வஸ்ஸலாம்-

சமூக மாற்றத்தை ஆசிக்கும் இறை ஊழியன்
எம்.எப்.எம். ஹுஸைன்
14.02.2008

## அணிந்துரை

வெற்றி கொள்ளப்பட்டோர் எப்பொழுதும் வெற்றி கெண்டோரைப் பின்பற்றுவர். எந்தவொரு சமூகமும் தம்மை வெற்றி கொண்ட சமூகத்தை, அதன் மதத்தை, கலாச்சாரத்தை, பழக்க வழக்கங்களை ஏற்று பின்பற்றி வந் திருப்பதைக் காண முடிகின்றது. ஆயினும், இந்த வரலாற்று உண்மை ஒரு முறை பொய்ப்பிக்கப்பட்டது. அவ்வாறு குறித்த வரலாற்றுத் தத்துவத்தைப் பொய்ப்பித்த பெருமைக்குரியவர்கள் முஸ்லிம்களே. பல இலட்சம் முஸ்லிம் களைக் கொன்றொழித்து முஸ்லிம் சாம்ராஜ்யத்தைத் தமதாக்கிக் கொண்ட மங்கோலிய - தாத்தாரியர் இஸ்லாத்தைத் தழுவியதோடு அதன் காவலர் களாகவும் மாறினர். இது மனித இன வரலாற்றில் நடந்த ஓர் அதிசயமாகவே கருதப்படுகின்றது. இஸ்லாத்தின் பரம எதிரிகளாக விளங்கிய இவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பின்னணி என்ன? இவர்கள் இஸ்லாத்தைத் தழுவுவதற்குக் காரணமாக அமைந்தோர் யார்? இது இன்று வரை ஒரு மர்மமாகவே இருந்து வருகின்றது. மங்கோலியர் இஸ்லாத்தைத் தழுவிய பின்னணி பற்றிய முடிவான உண்மைகளை வரலாற்றில் கண்டு கொள்ள முடியாதுள்ளது.

இந்நிலையில் மங்கோலியர் இஸ்லாத்தைத் தழுவிய பின்னணியை எளிமையாக விளக்கும் ஒரு நூல் எமது கரங்களுக்குக் கிடைத்துள்ளது. முஹம்மத் ஹஸன் ஹிம்ஸி எழுதிய ‘அத்தீனுல் ஹக்’ எனும் நூலைத் தழுவி இது எழுதப்பட்டுள்ளது. எவ்வாறு மங்கோலியர் இஸ்லாத்தை ஏற்றதற்குப் பின்னணியில் வரலாறு சரியாகக் கண்டு கொள்ளாத சில தாஇகள் இருந்திருக் கின்றார்கள் என்பதை இந்நூல் உணர்ச்சிபூர்வமாக விளக்குகின்றது.

ஆயுதப் பலத்தால் சாதிக்க முடியாததை ஈமானிய பலத்தால் சாதிக்க முடியும் என்பதற்கு இவ்வரலாறு மிகப் பெரும் சான்றாதாரமாக அமைகின்றது.

இந்நூலில் பேசப்படும் வரலாற்றை மௌலாலா அபுல் ஹஸன் அலி நத்வி அவர்கள் தனது ரப்பானிய்யா லா ரஹ்பானிய்யா எனும் நூலில் மிகச் சுருக்கமாக குறிப்பிட்டுள்ளார். இக்கதையை வரலாற்றாசிரியர் ஆர்னோல்ட் குறிப்பிடுவதாகவும் மௌலானா கூறுகின்றார்.

இந்நூலின் தொகுப்பாசிரியர் ஜாமிஆ நளீமிய்யா எனும் பூங்காவனத்தில் மலர்ந்து கொண்டிருக்கும் ஒரு நறுமலர். இது அச்சுவாகனம் ஏறும் அவரது இரண்டாவது ஆக்கம். ஏலவே ஷெய்க் யூஸுப் அல்கர்ழாவி அவர்களின் ஒரு நூலை இவர் தமிழுக்குப் பெயர்த்து வெளியிட்டுள்ளார்.

சகோதரர் அஷ்கர் அரூஸின் இம்முயற்சி பாராட்டத்தக்கது. அவர் கிட்டிய எதிர்காலத்தில் சிறந்ததோர் இஸ்லாமிய அழைப்பாளராக உருப் பெறுவார் என நான் நம்புகின்றேன். அல்லாஹுத் தஆலா அவருக்கு நல்ல அறிவையும் தெளிவையும் இஸ்லாமிய உணர்வையும் வழங்கி அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத்
பிரதிப் பணிப்பாளர்,
ஜாமிஆ நளீமிய்யா,
பேருவளை.
14.02.2008

## முன்னுரை

அல்லாஹ்வுக்கே புகழனைத்தும், அல்ஹம்துலில்லாஹ். அவனது தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!

இன்றைய உலகில் ஆள்பலம், ஆயுதபலம் என்பவற்றுக்கு முன்னால் அமெரிக்காவுக்கு எதிராக நின்றிடும் மனநிலை எந்தவொரு சக்திக்கும் கிடையாது என்றதொரு கருத்து மனித உள்ளங்களில் தோன்றியிருக்கின்றது. ஆனால், எத்தனை பலமிக்க வல்லரசாக இருந்தாலும் அதனை எதிர்த்து நின்றிடும் நெஞ்சுரத்தை ஈமான் எனும் ஆழமான நம்பிக்கைக்கும், மறுமை ஈடேற்றத்தின் மீதான எதிர்பார்ப்புக்கும் தந்திட முடியும் என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது.

வரலாற்றில் வெல்ல முடியாதவர்கள் எனப் போற்றப்படுகின்ற மங்கோலியத் - தாத்தாரியர்கள் ஈவிரக்கமற்றவர்கள்; அவர்கள் முஸ்லிம்களின் மண்டையோடுகளில் பிரமிட்டுக்களைக் கட்டி எழுப்பினார்கள்; முஸ்லிம்களின் பிண மலைகளின் மேல் நின்று கொண்டு தங்கள் வீரத்தைப் பறைசாற்றினார்கள்.

எவ்வாறு இன்று அமெரிக்கா எந்தக் காரணமுமின்றி ஈராக், ஆப்கானிஸ்தான், சிரியா எனத் தனது பட்டியலைத் தயாரிக்கின்றதோ அவ்வாறே அன்று மங்கோலியத் - தாத்தாரியர்களும் புஹாராவிலிருந்து தொடங்கி பக்தாத், டமஸ்கஸ், கெய்ரோ எனத் தமது பட்டியலை நீட்டிக் கொண்டே சென்றார்கள்.

இன்றைய அமெரிக்காவை விடப் பன்மடங்கு பலம் பெற்றிருந்த அன்றைய மங்கோலிய - தாத்தாரியர்களை எதிர்த்திடும் நெஞ்சுரத்தை இஸ்லாம் பெற்றிருந்தது முஸ்லிம்கள் ஆயுத ரீதியாகவும் (ஜிஹாத்), சிந்தனா ரீதியாகவும் (தஃவா) அவர்களை எதிர்த்துப் போரிட்டார்கள். ஆயுதப் போராட்டத்தை விடவும் சிந்தனைப் போராட்டம் மங்கோலிய தாத்தாரியர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இஸ்லாத்தை அழிப்பதற்காக வாளேந்திய அவர்கள் இஸ்லாத்தின் காவலர்களாக மாறினார்கள். மங்கோலிய - தாத்தாரிய சாம்ராஜ்யமே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது - வரலாறு புரண்டது.

அரசியல் முனையில் முஸ்லிம்கள் பின் நின்ற இடங்களிலெல்லாம் இஸ்லாம் தனது ஆத்ம பலத்தால் வென்றது. எந்நிலையிலும் இஸ்லாமே வென்றது. எதிர்காலமும் இஸ்லாத்திற்கே, இன்ஷா அல்லாஹ்.

உண்மையில், நான் இந்த நூலை ஒரு கதையாகவோ, நாவலாகவோ அன்றி நம்பகமான வரலாற்றுத் தகவலாகவே உங்களிடம் முன்வைத் திருக்கிறேன். 2004ம் ஆண்டு ரமழான் விடுமுறையின்போது எழுதிமுடித்த இந்நூல் 2008ம் ஆண்டு வெளிவருகின்றது. அல்ஹம்துலில்லாஹ். ஒவ்வோர், ஆக்க முயற்சிக்குப் பின்னாலும் ஒரு பிரசவ வேதனை உண்டு என்பதை நான் நிதர்சனமாகக் கண்டுகொண்டேன்.

இறுதியாக, இந்நூலுக்கு சிறந்ததோர் அணிந்துரையை வழங்கிய ஜாமிஆ நளீமிய்யாவின் பிரதிப் பணிப்பாளர் உஸ்தாத் அஷ்ஷெய்க் ஏ.ஸி அகார் முஹம்மத் அவர்களுக்கும், இந்நூலில் சில திருத்தங்களையும் வழிகாட்டல்களையும் தந்துதவிய ஜாமிஆ நளீமிய்யா விரிவுரையாளர் அஷ்ஷெய்க் ஏ.பி.எம் இத்ரீஸ் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு எனது எழுத்து முயற்சிகளை நூலுருப்படுத்துவதில் என்றும் துணையாய் நிற்கின்ற சகநண்பன் எம்.எப்.எம். ஹுஸைன் அவர்களுக்கும், எனது அறிவுப் பயணத்தில் விழிவைத்து ஊக்கப்படுத்துகின்ற எனது பெற்றோர், சகோதர சகோதரிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிறைகள் அனைத்தும் அல்லாஹ்வைச் சாரும்; குறைகள் அனைத்தும் அடியேனுக்குரியதே.

இஸ்லாமிய சகோதரன்.
அஷ்கர் அரூஸ்
14.02.2008

# 01

# சிரமப் பணி

சுமார் ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஜமாலுத்தீன் எனும் ஷெய்க் தனது மாணவர்களோடு மத்தியாசியாவிலுள்ள காடுகளையும் மேடுகளையும் கரடு முரடான பாதைகளையும் உயர்ந்த மலைகளையும் கடந்து சென்றிருந்தார்... அவர்கள் வியாபாரத்தைத் தமது தொழிலாக எடுத்துக் கொண்டார்கள். எனினும், இதனூடாக உலக இலாபங்களைப் பெறுவது அவர்களது நோக்கமாக இருக்கவில்லை. அவர்கள் செல்வதெல் லாம் மார்க்கம் விதித்துள்ள இவ் அடிப்படைப் பணியை மேற்கொள்வதற்கே. எனினும், இப் பணியை மூடிமறைத்தவர்களாகத் தமது பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

பரந்த மத்தியாசியாவின் காடு மேடுகளையெல்லாம் கடந்து செல் வதற்கான தயார் நிலையில், இப்பிரயாணக் கூட்டம் தமது தாய்நாடான புஹாராவின் எல்லையை அடைந்ததும், ஷெய்க் ஜமாலுத்தீன் பயணத்தை நிறுத்தி மாணவர்களை நோக்கி,

“என் அருமைச் சகோதரர்களே! நாம் எமது நாட்டையும் எமது குடும்பத்தினர்களையும் விட்டுப் பிரிந்து வந்ததெல்லாம், எமது மார்க்கம் எமக்குப் பணித்திருக்கின்ற இப்பாரிய பணியை நிறைவேற்றுவதற்கே... அப்பணியை அல்லாஹ் “நீர் மக்களை உமதிரட்சகனின் பாதையின் பால்

ஹிக்மத்தைக் கொண்டும் அழகிய உபதேசத்தைக் கொண்டும் அழைப் பீராக!" எனக் கூறினார்.

தொடர்ந்த மௌனத்தின் பின் தனது சிந்தனையில் தோன்றிய அந்தக் கோர நினைவுகளால் பெருகிய கண்ணீர்த் துளிகளுக்கு மத்தியில் அவர் தனது பேச்சைத் தொடர்ந்தார்:

“நாம் எமது நாட்டை விட்டுப் பிரிந்து வந்ததெல்லாம், முஸ்லிம்களின் மண்டையோட்டில் பிரமிட்டுக்களை எழுப்பி, முஸ்லிம்களின் பிண மலைகளின் மேல் நின்றுகொண்டு, தங்கள் வீரத்தைப் பறைசாற்றிய அந்த மங்கோலியப் படையினரை எதிர்கொள்வதற்கே. அவர்களது படைகள் மலை உச்சியிலிருந்து விழும் பனித்துளிகளைப் போன்று எமது நாடுகளுள் நுழைந்தன. தமது பாதையில் தென்பட்ட அனைத்து முஸ்லிம் நாடுகளையும் ஆக்கிரமித்து, அவற்றில் இருந்த உயர் கலைகளையும் அரும் பொக்கிஷங் களையும் அழித்தொழித்தன. இதன் விளைவாக கம்பீரமாகக் காட்சியளித்த அந்நகரங்களின் பெருமைமிகு அரண்மனைகளும் செழிப்புமிகு தோட்டங் களும் பசுந்தரைகளும் வனாந்தரமாகவும், வெற்றுப் பாலைவனாமாகவும் பாழடைந்த சின்னங்களாகவும் மாறின.”



ஷெய்கினால் அழுகையை அடக்கிக் கொள்ள முடியவில்லை. கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் மழையாகப் பொழிந்தன. வடிந்த கண்ணீர்த் துளிகள் அவரது மென்மையான தாடியையும் நனைத்து விட்டன. எனினும், அவர் பேச முடியாதவராகவும், பேச நிர்ப்பந்திக்கப்பட்டவரா கவும் தனது தாழ்ந்த குரலில் தொடர்ந்தும் பேசினார்:

''அந்த மங்கோலியப் படையினர் தமது கொலை வெறித்தனங்களை யும் இரத்த ஓட்டத்தையும் 'ஹிராத்' நகரில் மாத்திரமென சுருக்கிக் கொள்ள வில்லை. அதனைத் தொடர்ந்து தமது நாசகாரச் செயல்களை தொடர்ந்து வரும் நகரங்களிலும் மேற்கொண்டார்கள் எந்தவொரு பாதுகாப்புத் தளத்தில் இருந்தாலும் மனிதனை வந்தடையும் மரணத்தை விட்டும் யாரெல்லாம் அஞ்சி நிலச்சுரங்கங்களிலுள்ள ஆழமான பதுங்கு குழிகளிலே பாதுகாப்புத் தேடிச் சென்றார்களோ அவர்களைத் தவிர அனைவரும் கொலை செய்யப்பட்டார்கள்...''

'ஹிராத்' நகரை விட்டும் மங்கோலியப் படைகள் வெளியேறிச் சென்ற பின் யாரெல்லாம் மரணத்தை விட்டும் தம்மைப் பாதுகாத்துக் கொண்டார்களோ, அத்தகையோர் பாழடைந்த சின்னங்களுக்கு மத்தியில் ஒன்றுகூடினார்கள். அவர்களது எண்ணிக்கை நாற்பதுக்கும் அதிகமானதாக இருக்கவில்லை. அவர்கள்தான் ஓர் இலட்சம் குடித்தொகையைக் கொண்ட அந்நகரத்தில் எஞ்சியவர்கள் என்பதை அறிந்தபோது துக்கத்தில் ஆழ்ந்தார்கள். அப்போது பாழடைந்திருந்த தமது நகரத்தின் கோரக் காட்சியைக் கண்டு அழுது புலம்பினார்கள்.''

அவர்களுள் ஒருவர்,

''உண்மைதான்! அறிஞர்களும் உலமாக்களும் நிறைந்ததெனப் புகழ்பெற்ற எமது நகரான 'புஹாரா'வுக்கு நடந்தவற்றை எம்மால் மறக்க முடியாது. அவை இன்னும் எம் நினைவுகளில் நீங்கா வண்ணம் இருக் கின்றன. அம் மங்கோலியப் படையினர்கள் புனிதமிகு பள்ளிவாயல்களை குதிரைகளைக் கட்டும் தொழுவங்களாக மாற்றினார்கள். குர்ஆன் பிரதி களைக் கிழித்து கால்நடைகளைக் கொண்டு அவற்றை மிதித்தார்கள்.

அவ்வாறே யாரெல்லாம் அவர்களது கொலையிலிருந்து தப்பினார்களோ அவர்களைச் சிறைபிடித்தார்கள். பின்னர், அந்நகரை எரித்து காற்று அடித்துச் செல்லும் சாம்பராக மாற்றினார்கள்..."

அழுகையை நிறுத்த முடியாத தன் சகோதரனின் பேச்சை மேலும் தொடர்ந்து செல்வதற்காகக் கண்ணீர் மல்கிய கண்களோடும், வீராவேசமிக்க தொனியிலும் இன்னொருவர்,

"எமது நகர் ஏனைய நகரங்களை விடவும் படுமோசமான நிலையிலேயே இருந்தது. எனினும், அறிஞர்களினதும் அவ்லியாக்களினதும் ஸாலிஹீன்களினதும் பிறப்பிடமாகவும் அறிவியல் கலையின் மையமாகவும் திகழ்ந்த ஸமர்க்கந்த், பல்ஹ் போன்ற நகரங்களில் அவர்கள் செய்த ஈவிரக்கமற்ற செயல்களைத்தான் எம்மால் மறக்க முடியுமா?..." என மங்கோலியர்களின் நாசகாரச் செயல்களை விளக்கிச் சென்றார்.

அவர்களுக்கு மத்தியில் பூரண அமைதி நிலைகொண்டது. இதனூடாக அவர்கள் அந்தக் கோர நிகழ்வுகளை தமது சிந்தனையில் ஒருமுறை மீட்டிப் பார்த்தார்கள். அனைத்தும் தமது கண்களுக்கு முன்னால் நடந்தேறியதைப் போன்று உணர்ந்தார்கள். அப்போது அவர்களால் பேச முடியவில்லை. கண்ணீர்ப் பிரளயம் அவர்களது குரல்களைத் தடுத்துக் கொண்டு தனது ஓசையை இவ்வாறு எழுப்பிக் கொண்டிருந்தது.

"நிச்சயமாக, இது மிகமோசமானதொரு சோதனை. இதனை நாம் கண்டுகொள்ளாதிருப்பதற்கு எமக்கு என்ன நடந்து விட்டது. நாம் ஒருபோதும் சரணடைய மாட்டோம். நாம் கண்ணிய மிக்க சமூகம்; நாம் மீண்டும் அவர்களை வெற்றி கொள்வோம்."

இம் மயான அமைதிக்கு மத்தியிலே சூடான பாத்திரத்திலுள்ள கொதிக்கின்ற நீரைப் போன்று அவர்களது ஆழ்மனது கோபத்தால் கொந்தளித்துக் கொண்டிருந்தது. கவலையால் எரிகின்ற இந்நெருப்புக் கிடங்கில் மேலும் பீப்பாய் எண்ணெய்களை ஊற்றுவதைப் போன்று ஷெய்க் ஜமாலுத்தீனின் வார்த்தைகளும் அமைந்திருந்தன.

இமாம் பஹ்ரி அவர்கள் மங்கோலியர்கள் பக்தாத் நகரை ஆக்கிர மித்துச் செய்த அசம்பாவிதங்களை உருவகிக்கும் முகமாக ஒரு வாசகத்தை எமக்குக் கூறுகிறார். எனினும், அவர் மங்கோலியர்களின் ஆட்சியின் கீழே வாழ்ந்தவர் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இதன் காரணமாக, அவர் கண்ட அனைத்து நிகழ்வுகளையும் அவரால் வர்ணிக்க முடியவில்லை. எனவே, அவர் இவ்வாறு தனது விவரணத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றார்:

"தொடர்ச்சியான கொலைகளையும் படுமோசமான கொள்ளை களையும், காட்டு மிராண்டித்தனமான சித்திரவதைகளையும் அவர்கள் மேற்கொண்டார்கள். அதனை செவிமடுப்பதற்கே மிகவும் வேதனையாக இருக்கின்றது. அதனை எவ்வாறு வர்ணிக்க முடியும்...!"(2)

ஷெய்க் தனது வார்த்தைகளைக் கூறி முடிப்பதற்குள், நிகழ்வுகளால் உள்ளம் கவலையுற்ற மாணவர்களுள் ஒருவர் மீண்டும் பக்தாத் நகரின் பழம் பெருமைகளை ஒருமுறை எண்ணி அங்கலாய்த்தார்:

"அன்று பக்தாத் உலகிலேயே மிகவும் முக்கியமான நகரம் மட்டு மல்ல, மிகவும் பிரபல்யமான நகரமும்கூட. உலகிலே அறிவைத் தேடியவர் கள் பக்தாத் நோக்கிப் பயணம் செய்தார்கள்... வணிகத்தில் உயர்ந்து நிற்க விரும்பியவர்கள், உலக மக்களுக்கெல்லாம் தாங்கள் உற்பத்தி செய்த பொருளை அறிமுகப்படுத்திட விரும்பியவர்கள் பக்தாத் நோக்கிப் பயணம் செய்தார் கள். உலகில் மிகவும் தரம்வாய்ந்த இலக்கியங்களின் உற்பத்தி நிலையமாக பக்தாத் இருந்தது... விஞ்ஞான வளர்ச்சியின் மையமாகவும் பக்தாதே திகழ்ந் தது..."

"பெருமைமிகு இந்த பக்தாத் நகரில்தான் உலகப் பிரசித்தம் பெற்ற ஆசாத் மருத்துவமனை இருந்தது. அதில் மருத்துவத் துறையில் புதிய சிகிச்சை முறைகளை முஸ்லிம்கள் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்த ஆசாத் மருத்துவமனை அனைத்து வசதிகளையும் கொண்டதாக அமைந்திருந்தது..."(3)

உலகுக்கு வழிகாட்டி அறிவியல் உட்பட அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிகண்ட பாரிய பக்தாத் நகரில் கொடுங்கோல் மங்கோலியர்கள்

மேற்கொண்ட அட்டூழியங்களை அவர்கள் பட்டியலிட்டார்கள். கிடைத்த சந்தர்ப்பத்தில் உள்ளத்திலே உதித்த அனைத்து நீங்கா நினைவுகளையும் சமர்ப்பிக்கும் நோக்கோடு ஷெய்க்,

"மங்கோலியப் படையினர்கள் தொடர்ச்சியாக நாற்பது நாட்கள் பக்தாத் மக்களைக் கொலைசெய்து, அவர்களது செல்வங்களைச் சூறையாடினார்கள். பின் பெருந்தொகை அறிஞர்களையும் இமாம் களையும் ஹாபிழ்களையும் கொலை செய்தார்கள். இதன் விளைவாக பள்ளிவாயல்களும் பாடசாலைகளும் நிறுவனங்களும் வெறிச்சோடிக் கிடந்தன. பின்னர் அந்நகர் வெற்றுத் தரையாக மாறியது. அதில் சொற்ப தொகையினரே எஞ்சியிருந்தார்கள்...[4]

"இவ்வாறு உலகில் மிகவும் அழகிய நகரமாக விளங்கிய பக்தாத் அழிந்து, பாழ்பட்டுக் காட்சியளித்தது. சடலங்கள் குன்றுகளைப் போல் குவித்து வைக்கப்பட்ட நிலையில் காட்சியளித்தன. அப்போது, பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட்டது. யாரெல்லாம் நிலத்துக்குக் கீழே உள்ள பண்டகசாலைகளிலும் களஞ்சியசாலைகளிலும் பதுங்குகுழிகளிலும் கப்ருஸ்தானங்களிலும் ஆழமான கிணறுகளிலும் பெரும் புற்றரைகளிலும் மரணித்தவர்களைப் போன்று அபயம் தேடிச் சென்றார்களோ, அவர்கள் அங்கிருந்து வெளியே வந்தார்கள். ஒருவர் மற்றவருக்கு அறிமுகமற்றவராகவே இருந்தார். தந்தை தன் மைந்தனைக் காணாதவராக, சகோதரன் தன் சகோ தரனைக் காணாதவராக அலைந்து திரிந்தார்கள். பின்னர், மாசுபடிந்த சூழலால் அவர்கள் அனைவரது உயிர்களையும் தொற்றுநோய் காவிச் சென்றது."

அனைவரும் மௌன வெள்ளத்தில் கண்ணீர் மழையால் மூச்சுத் திணறித் தத்தளிக்கின்ற நிலையில் ஷெய்க் ஜமாலுத்தீனின் வார்த்தைகள் மேலும் இப்பணியின் அவசியத்தையும் அவசரத்தையும் வலுப்படுத்து வதாய் அமைந்திருந்தன:

"அவர்கள் தங்கள் கொலைவெறித் தாக்குதல்களை இத்தோடு நிறுத்திக் கொண்டார்களா...? இல்லை, குக்கிராமங்களிலே புகுந்து ஏதுமறி யாத மக்களையும் கொன்று குவித்தார்கள். அவர்களது அநியாயமும்

அட்டூழியமும் அனைத்து எல்லைகளுக்கும் பரவிற்று. இவர்கள் அக்கம் பக்கத்து நிலப்பரப்புகளுக்கும் பாய்ந்தார்கள். நாடுகளைப் பிடிப்பவர்கள் அதனை ஆட்சி செய்வார்கள். அமைதியாக வாழ விரும்பும் மக்களுக்கு அனுமதியளிப்பார்கள். முடிந்தால் பாதுகாப்பும் வழங்குவார்கள். ஆனால், இவர்கள் வென்றவர்களைக் கொன்று அவர்களின் இரத்தத்தில் கால் நனைய நடந்து சென்றார்கள். ஈவிரக்கமற்ற இவர்களது வாள்கள் அனைத்துத் தரப்பு மக்களது கழுத்துக்களையும் பதம் பார்த்தன. இவர்கள் தாக்கிய வேகமும் குரூரமும் அவற்றைப் பார்த்தவர்களை மட்டுமல்ல, கேட்பவர்களையும் இன்னும் அவற்றைப் படிப்பவர்களையும் பதறச்செய்து விடும்..."

ஷெய்க் சிறிது மௌனமாக இருந்துவிட்டு

"எம்மை விட்டும் ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற யூப்ரடீஸ் நதி பக்தாத் நகருக்கும், அதன் மக்களுக்கும் தனது இரங்கல் செய்தியைத் தெரிவிப்பது போன்று காட்சியளித்தது... இந்நகரின் அரும் பெரும் அறிவியல் செழிப்பைக் கடந்த காலங்களில் கண்ணுற்ற இந்நதி தற் போது முழு மனித சமூகமும் அவற்றை இழந்து நிற்கும் சோக நிலைமை யைக் கண்டு தனது இரங்கல் செய்தியை தெரிவித்துக் கொண்டிருந்தது...

இம் மங்கோலியப் படையினர்கள் பக்தாத் நகரின் அரும் பெரும் நூல்களையும், அறிவியல் பொக்கிஷங்களையும் யூப்ரடீஸ் நதியில் எறிந்ததன் காரணமாக அந்நதி தன்னை நீண்ட நாட்களாக கறுப்பு மைகளால் தோய்த் துக் கொண்டது... வாய்பேசா இந் நதி கறுப்பு நிற அணிகலனைத் தொடர்ச் சியாக ஏழு நாட்கள் அணிந்து கொண்டு தனது ஆழ்ந்த கவலையைத் தெரி விப்பதைப் போன்று காட்சியளித்தது...

கேட்போரின் உள்ளத்தைச் சிதைவுறச் செய்யும் இச்சோக நிகழ் வைத் தெரிவிக்கக் கூடியவாறானதொரு பெருமூச்சை விட்டவராகத் தனது பேச்சைச் தொடர்ந்தார் ஷெய்க்:

"இஸ்லாமிய சமூகத்தைப் பீடித்த இக் கொடூர அழிவுகளை எழுதும் இஸ்லாமிய வரலாற்றாசிரியர்களின் பணிதான் எவ்வளவு சிரமமானது.

பெரும் நூலகங்களைக் கொண்டு புகழ்பூத்த 'மர்வு' நகரிலிருந்து உயிர் பிழைத்துத் தப்பியோடிய 'யாகூத்ஹமவீ' தனது ஆழ்ந்த கவலைகளையும் இக்கோர நிகழ்வுகள் தனது உள்ளத்தில் விட்டுச்சென்ற வடுக்களையும் இவ்வாறு தெரிவிக்கின்றார்:

'இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்... இந்நிகழ்வு களை எண்ணுவதாலே மனிதன் பலமிழந்து அவனது வாழ்க்கை சுக்குநூறா கின்றது. இன்று பிறந்த குழந்தை கூட முதிர்ச்சியடைகின்றது. உள்ளங்கள் இருளடைகின்றன. சிந்தனைகள் சிதைவுறுகின்றன.'

ஷெய்க் ஜமாலுத்தீனுக்கு இக்கோர நிகழ்வுகள் ஏற்படுத்திய கவலையின் உச்சநிலையைத் தொடர்ந்து எதுவும் கூற முடியாதாவராகத் தனது பேச்சை இவ்வாறு முடித்துக் கொள்ள எத்தனித்னார்:

''ஒவ்வொரு மனிதனும் இக்கோர நிகழ்வுகளுக்குச் செவியாய்க்கும் போது அல்லது அவற்றை அறிவிக்கும்போது இல்லை, அவற்றை நினைக்கும்போதே அவரது உடல் மயிர் சிலிர்க்காமல் இருக்க முடியாது...''

பிரபல்யமிக்க வரலாற்றாசிரியர் 'இப்னு அதீர்' அவர்கள் இந் நினைவுகளை வர்ணிக்கும்போது இவ்வுணர்வை அடைந்து கொண்டார்:

''பல ஆண்டுகளாக நான் இந்நிகழ்வுகளின் கொடூரத்தின் காரணமாக அவற்றைப் புறக்கணித்தவனாக அவற்றை நினைப்பதையே வெறுத்தவனாக இருந்தேன். அவற்றை எழுதுவது சம்பந்தமாக எவ்வித முடிவுக்கும் வராதவனாகவே இருந்தேன். இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் இரங்கல் செய்தியைத் தெரிவிப்பது யாருக்குத்தான் இலகுவானது. ஐயோ!? என் தாய் என்னைப் பெறாமலே இருந்திருக்கக் கூடாதா..? இவற்றுக்கு முன்னரே நான் இறந்து அனைத்தையும் மறந்திருக்கக் கூடாதா!?''

''நிச்சயமாக, இது வரலாறு கண்டிராத விசித்திரமானதொரு சோதனை. இதன் பாதிப்பு பொதுவாக முழு மனித சமூகத்துக்கும் குறிப்பாக, முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டது. எவரேனும் ஒருவர் அல்லாஹ் முதல் மனிதன்

ஆதமைப் படைத்தது முதல் இன்றுவரை இவ்வாறு சோதித்ததே இல்லை என்று கூறினால், அது உண்மைக்குப் புறம்பானதாக இருக்க மாட்டாது. நிச்சயமாக, வரலாறு இத்தகைய அல்லது இதைப் போன்ற எந்தவொரு நிகழ்வையும் கண்டதே இல்லை. வரலாற்றிலே நிகழ்ந்த பாரிய சோதனை யாகக் கூறப்படுவது 'பக்தன்சர்' பனூ இஸ்ரவேலர்களைக் கொன்று, புனித ஜெரூஸலத்தை அழித்த நிகழ்வாகும். ஆனால், அம் மங்கோலியப் பாதகர்கள் அழித்த நாடுகளும் அதில் காணப்பட்ட ஒவ்வொரு நகரமும் ஜெரூஸலத்தை விட பன்மடங்கு பெரியது. அது மாத்திரமின்றி, இஸ்ரவேலர்கள் இம் மாபெரும் சனத்தொகைக்கு ஒப்பிடக்கூடியவர்களா? அந்த மங்கோலியர் களால் அழிக்கப்பட்ட நகரங்களில் ஒரு நகரின் சனத்தொகை இஸ்ரவேலர் களின் எண்ணிக்கையை விடப் பன்மடங்காகக் காணப்பட்டது. உண்மையி லேயே வரலாறு இத்தகைய சேதத்தை கடந்த காலத்தில் மாத்திரமல்ல, இனி வரும் காலங்களிலும் காண்பது அசாத்தியமானதே...[6]

தமது ஆசான் உருவகப்படுத்திக் காட்டிய இத்தகைய பயங்கரமான நிலைமைகளுக்கு மத்தியில் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய பணியைப் பற்றி அவர் விளக்கக்கூடாதா..? என்ற ஆதங்கத்தின் அடையாளங்கள் அவர்களது வதனங்களிலே படிந்திருந்தன.

புவிப் பரப்பையே தன்னகத்தே கொண்டிருக்கின்ற இப்பாரிய பலமிக்க கொடூரமிகு படையினருக்கு முன்னால் சொற்பத் தொகையினரான இக்கூட்டம் சிலவேளை அவர்களது கைப்பிடிக்கும் அதிகமானவர்களாக இருக்க மாட்டார்கள். அவ்வாறே அவர்களிடத்தில் இவர்கள் தூசுக்குச் சமமானவர்கள்.

மாணவர்களது சிந்தனையில் தோன்றிய இத்தகைய எண்ணங்களை தனது தீச்சண்யப் பார்வையால் அறிந்து கொண்டார் ஷெய்க்.

''உண்மைதான், இப் பிரமாண்டமான படையினரை எமக்கு எதிர்கொள்ள முடியாதது என்பது மாத்திரமல்ல, எம்மைவிடப் பலமிக்க படையினரெல்லாம் இவர்களுக்கு முன்னிலையில் தோல்வி கண்டு விரண் டோடியுள்ளார்கள் என்பதும் உண்மையே. எனினும், நான் உங்களுக்கு

அறுதியிட்டு உறுதியாகக் கூறுகின்றேன், பக்தாதிலே அப்பாஸிய ஆட்சிப் படையினர்களுக்குச் செய்ய முடியாதவற்றை எமக்குச் செய்ய முடியும். ஏனெனில், நாம் எந்தச் சூழ்நிலையிலும் ஹிக்மத்தையும் மதியையும் பயன்படுத்தினால் எமக்கு வெற்றி ஈட்டித்தரும் ஓர் ஆயுதத்தை பெற்றிருக் கின்றோம். அந்த ஆயுதம்தான் 'இஸ்லாம்' என்ற ஏக ஆயுதம் என்பதனை உறுதியாக மனதில் நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்...”

எதிர்பாராத ஓர் ஆயுதத்தை அறிமுகப்படுத்திய இவ் வார்த்தைகள் அனைவரையும் திகைப்புறச் செய்தன. ஏனெனில், அன்று மங்கோலியர்கள் தமது கொலைவெறிச் செயல்களை கட்டவிழ்த்து விட்டது முஸ்லிம் நாடுகளி லேதான் என்பதும் அங்கு வாழ்ந்தவர்களும் முஸ்லிம்களாக இருந்தார்கள் என்பதும்தான் அவர்களது திகைப்புக்கு அடிப்படைக் காரணமாக இருந்தது.

மீண்டும் ஷெய்க் தொடர்ந்தார்:

“எனது இந்த வார்த்தைகளை நீங்கள் அந்நியமானவையாக நோக்க வேண்டாம். நான் இவற்றைத் தெளிவாக அறிந்து விளங்கிய நிலையில் விழிப்போடுதான் கூறுகின்றேன். மங்கோலியர்களுக்கு முஸ்லிம்களைத் தோற்கடிக்க முடிந்ததே அன்றி அவர்களால் இஸ்லாத்தைத் தோற்கடிக்க முடியவில்லை. அது ஒருபோதும் நடைபெறாது. அவர்கள் எவ்வளவுதான் அழிவுகளைச் செய்தாலும் சரியே...

மங்கோலியர்கள் முஸ்லிம் நாடுகளை ஆக்கிரமித்து வெற்றி கொண் டார்கள். ஏனெனில், அப்போது முஸ்லிம்கள் உண்மை முஸ்லிம்களாக இருக்கவில்லை. அவர்கள் உண்மை முஸ்லிம்களாக இருந்திருந்தால், அம் மங்கோ லியர்கள் தமது நாடுகளுக்குள் நுழைய முன்னரே தமது படைப் பலத்தைத் தயார்படுத்தியிருப்பார்கள்.

“நீங்கள் அவர்களோடு போர் புரிவதற்காக உங்களால் முடியுமான சக்திகளையும் போர்க் குதிரைகளையும் தயார்படுத்திக் கொள்ளுங்கள். இதனூடாக அல்லாஹ்வின் எதிரியையும் உமது எதிரியையும் அச்சுறுத் தக்கூடியதாக இருக்கும்.” (7)

அவ்வாறு அவர்கள் உண்மை முஸ்லிம்களாக இருந்திருந்தால் அந்த மங்கோலியப் படையினர் தமது நாடுகளில் நுழைய முன்னரே அவர்களிடம் சென்று போரிட்டிருப்பார்கள்...”

ஷெய்க் தனது உள்ளத்திலே எழுந்த சில கசப்பான உண்மைகளை வார்த்தைகளால் முன்வைக்க வெட்கித்தார். எனினும், உண்மை நிலையை சித்திரித்துக் காட்டுவதற்காகக் தனது வார்த்தைகளுக்கு மீண்டும் வடிவம் கொடுத்தார்.

‘‘அம்மங்கோலியர்கள் எமது நாடுகளை ஆக்கிரமித்தபோது, முஸ்லிம்கள் ஒழுக்கச் சீர்கேட்டிலும் ஊதாரித்தனத்திலும் மிதந்தார்கள்; மனோ இச்சைக்கும், அற்ப இன்பங்களுக்குப் பின்னாலும் அலைந்து திரிந்தார்கள்... இவை இஸ்லாத்தின் நிலைப்பாடாகுமா...?

“பக்தாத் கலீபாவின் தோல்வி இஸ்லாத்தின் தோல்வியென எவ்வாறு நாம் கூறலாம்...?

இஸ்லாத்தின் நகரம் எனக் கருதப்பட்ட பக்தாதில் கலீபாவின் இருப்பிடம் ஈரானியர்கள், பைசாந்தியர்கள் போன்றோரிடமிருந்த ஊதாரித்தனத்தையும் விஞ்சி நின்றது. சமையல் செய்து உணவைப் பரிமாறிடும் சாதாரண வேலையாட்கள் கூட செல்வச் செழிப்பில் மூழ்கிக் கிடந்தார்கள். தரையைத் துடைப்பவர்கள் அரண்மனைக்குள் அடிமைகளாக நுழைந்தவர்கள்தாம். எனினும், இவர்கள் உப்பரிகைகளைக் கட்டி ஒய்யாரமாக வாழ்ந்தார்கள்...

‘அலாவுத்தீன் தப்ரேசி’ என்ற அடிமையை ஆயிரம் தீனார் கொடுத்து வாங்கினார் கலீபா ஜாஹிர் அவர்கள். ஆனால், இவன் அரச பணியில் ஊழல் செய்து ஆண்டுதோறும் சேர்த்த சொத்தின் மதிப்பு மூவாயிரம் திர்ஹம்... பக்தாதில் இவன் கட்டிய வீடு ஊரார் வாய்பிளந்து வியந்து நிற்கும் அளவுக்கு மிகவும் பிரமிக்கத்தக்கதாக இருந்தது...

இவ்வாறு ‘முஜாஹிதீன்’, ‘அய்பக் அல்சலா’, ’அப்துல் கனி’ என்ற பெயர்களைக் கொண்ட அரண்மனைப் பணியாட்கள் தரணி நடுங்கும் அளவு ஆடம்பர வாழ்வில் மூழ்கிக் கிடந்தார்கள்... இப்படி ஆடம்பரத்திலும் ஊதாரித்தனத்திலும் ஊறிக் கிடந்த இவர்கள் கல்வியறிவற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

“அதே நேரத்தில், பக்தாதிலிருந்த மிகப் பெரிய கல்வி நிறுவனமான மத்ரஸதுல் முஸ்தான் ஜாரியர்வின் ஆசிரியர்களுக்கு பிச்சைக் காசுகள்தான் சம்பளமாகக் கொடுக்கப்பட்டன. கலீபாவின் அரண்மனையைச் சுத்தம் செய்பவன் ஐயாயிரம் தீனார்களைச் சம்பளமாக பெற்றுக் கொண்டிருக்கும்போது இவர்கள் யாசகர்களைப் போல் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இவை இஸ்லாத்தின் நிலைப்பாடா...?

அது மாத்திரமா... மன்னர் கலீபா முடிசூடிய நாள், பிறந்தநாள் இவையெல்லாம் தங்கள் ஊதாரித்தனத்தையும், உல்லாச வாழ்வையும் ஊருக்கெல்லாம் அறிவிக்கக் கிடைத்த பொன்னான வாய்ப்புக்களாகக் கருதினார்கள்... ஆட்சியிலிருந்தோரும், அடிமட்டத்து மக்களும் பொன்னைத் தண்ணீராய் தாரைவார்த்து களித்துக் கிடந்தார்கள்...

இப்படி உல்லாசத்தில் மதி மயங்கி நின்ற கலீபாவுக்கு கஃபாவுக்கான போர்வையைக் கூட அனுப்பி கைக்க நேரமில்லையாம். கஃபா 21 நாட்கள் திரையின்றிக் கிடந்தது[8] என்றால்...

இவை இஸ்லாத்தின் நிலைப்பாடாகுமா...?

அந்த அகோரச் சூழ்நிலையிலும் முஸ்லிம்களின் உண்மை நிலையை அறிந்து கொண்ட மாணவர்களுள் ஒருவர் ஷெய்கின் வார்த்தைகளுக்கு மேலும் வலுச் சேர்த்தார்.

“மங்கோலியர்களது பார்வை பக்தாதின் மீது வீழ்ந்தபோது பக்தாத் செல்வச் செழிப்பில் திகைத்துக் கிடந்தது. அல்லாஹ்வை மறந்த களியாட்

டங்களும் விரயங்களும் அவர்களை ஆட்கொண்டிருந்தன..

“பக்தாதின் பாதுகாப்புகளைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. பாவம் அவர்களுக்கு மகிழ்ந்திருக்கவே நேரம் போதவில்லை. இந்நிலையில், அவர்களுக்குப் போராடும் மனமுமில்லை.

“பிறந்த நாள், பெருநாள் என்று தங்கள் ஆடம்பரத்தை தலை விரிக்கத் தருணம் பார்த்துக் கிடந்தார்கள். பெருநாட்களில் ஊர்வலங்கள், அந்த ஊர்வலங்களில் வரும் களியாட்டங்களெல்லாம் முடிந்திட மாலை நேரம் ஆகிவிடுமாம். அந்தி சாய்ந்த பின்னரே பெருநாள் தொழுகையைத் தொழுவார்களாம்.

“கலீபா பதவி ஏற்ற நாள், அவர்களுக்குக் குழந்தை பிறந்த நாள் என்று நாட்களை காத்திருந்து கணித்து, கழித்துக் கிடந்த இவர்களால் அக்கம் பக்கத்து நாடுகளை அல்லது முஸ்லிம் ஆட்சியின் கீழிருந்த நிலப்பரப் புக்களை ஆக்கிரமித்து வருகின்ற மங்கோலியர்களையோ, அவர்களால் வரவிருக்கும் ஆபத்துக்களையோ கணித்திட இயலவில்லை.

“மங்கோலியர்கள் பக்தாதை நோக்கிப் பாய்கின்றார்கள் என்ற செய்தியைக் கேட்டவுடன்தான் அலறித் துடித்தார்கள் பக்தாத் முஸ்லிம்கள். குவித்து வைத்திருக்கும் செல்வங்களை அனுபவிக்க அவகாசம் இல்லாமல் போய்விடுமோ என ஆதங்கப்பட்டார்கள்...

“பக்தாதிற்குள் மங்கோலியர்கள் நுழைந்து விட்டார்கள் என்ற செய்தி கேள்விப்பட்டதும் பக்தாதில் வாழ்ந்த மக்கள் விசித்திரமானதொரு வழிமுறையைக் கையாண்டார்கள். தங்கள் கைகளிலிருந்த முத்துக்களையும் பவளங்களையும் விழுங்கி விட்டார்கள்...”(9)

இவை இஸ்லாத்தின் நிலைப்பாடாகுமா...?

“இந்த பக்தாத் நகரை மங்கோலியர்கள் சூழ்ந்து கொண்டபோது கலீபா என்ன செய்து கொண்டிருந்தார்.?” என ஆக்ரோஷத்தோடு தொடுக்

கப்பட்ட வினாவுக்கு ஷெய்க் ஜமாலுத்தீன் பதிலளிக்கிறார்:

"பக்தாதைச் சூழ மங்கோலியர்கள் முற்றுகையிட்ட வேளையில், கலீபா தனது கேளிக்கை அறையில் இருந்தவராக இவை எதிலுமே கரிசனை செலுத்தாதவராக இருந்தார். எந்தளவுக்கெனில், கலீபாவின் முன்னிலையில் நடனமாடிக் கொண்டிருந்த பாடகியொருத்தியை எதிர்த் தரப்பின் அம்புகள் பதம் பார்த்தன. அவள் அவ்விடமே இறந்து விட்டாள்.

வரலாற்றாசிரியர்கள் பக்தாதின் வீழ்ச்சியை இவ்வாறு கூறுவதனை நான் செவிமடுத்துள்ளேன்:

"மங்கோலியர்கள் கலீபாவின் அரண்மனையைச் சூழ்ந்து கொண்டு அம்புகளை நாலா புறங்களிலிருந்தும் எறிந்து கொண்டிருந்தார்கள். அப்போது, கலீபாவின் முன்னிலையில் நடனமாடி, கலீபாவை மகிழ்வூட்டிக் கொண்டிருந்த ஒரு பணிப் பெண்ணை யன்னலினூடாக வந்த அம்பு பதம் பார்த்தது..."(10)

சிறிய மௌனத்தின் பின் கவலை படிந்த தொனியில் மீண்டும் ஷெய்க் தனது பேச்சைத் தொடர்ந்தார்:

"பின்னர் பக்தாத் ஆக்கிரமிக்கப்பட்டு கைதியான கலீபாவுக்கு உணவுப் பொருட்களை வழங்கி வைத்தார்கள். அவற்றில், உண்ணும் தரத்தில் எதுவும் இருக்கவில்லை. முஸ்லிம்கள் எந்தப் பொருட்களைத் தங்களுடைய பாதுகாப்பைவிடப் பெரிதாகக் கருதுகின்றார்களோ, அப்பொருட்களையே ஒரு பொற் தட்டில் வைத்து கலீபாவுக்கு அனுப்பினார்கள்.

அப்போது கலீபா கேட்டாராம்:

"என்ன!... பசித்து நிற்கும் கைதிக்கு இப்படியொரு தட்டை அனுப்பியிருக்கின்றீர்களே..,?

அதற்குப் பதிலளித்த மங்கோலியத் தளபதி,

"ஆமாம்! உங்கள் பாதுகாப்பை விட இவைதானே உங்களுக்கு

முக்கியம் எனக் கருதினீர்கள். அவற்றையே உண்ணுங்கள். உங்கள் பாது காப்பைவிட பளபளக்கும் இவைதானே உங்களுக்கு முக்கியம். அவற்றை நான் தந்தால் மட்டும் ஏன் முகம் சுளிக்கின்றீர்கள்...''(11) எனக் கேட்டாராம்.

இப்படி அவர்கள் உலகைக் கட்டிப் பிடித்து வாழ்ந்ததை மங்கோ லியத் தளபதி சுட்டிக் காட்டியதாக வரலாறு கூறுகின்றது. இவை அனைத்தும் இஸ்லாத்தின் நிலைப்பாடாகுமா?...

“நிச்சயமாக! இஸ்லாம் தோற்காது. முஸ்லிம்களின் தோல்வியோ அல்லது கலீபாக்களின் தோல்வியோ இஸ்லாத்தின் தேல்வியாகாது. இஸ்லாத்தைப் பற்றிப் பிடித்தவரான வெற்றி வீரர் ‘குத்ஸ்’ ஐப் போன்ற தலை வர்கள் முஸ்லிம்களுக்குக் கிடைக்கப் பெறும்போது இஸ்லாமோ முஸ்லிம் களோ ஒருபோதும் தோற்க மாட்டார்கள்.

வெற்றி வீரர் குத்ஸூம், அவரது படையினரும் ‘ஐன் ஜாலூத்’ போராட்டத்தில் ‘இஸ்லாம்’ என்ற வீர முழக்கத்தோடு போரிட்டார்கள். இதன் விளைவாக, தமக்கும் பாரிய அச்சுறுத்தலாக இருந்த மங்கோலியப் படையினரின் ஆக்கிரமிப்புக்கு முற்றுகையிட்டார்கள்...

எனவே, இந்த மங்கோலியர்களை ‘இஸ்லாம்’ என்ற ஆயுதத்தால் மாத்திரமே வெற்றிகொள்ள முடியும். தற்போது நாம் தொடுக்க இருக்கும் போராட்டம் ஆயுதப் போராட்டமல்ல... அது சிந்தனைப் போராட்டம்...

‘‘எமக்கு முன்னர் பல தாஇகள், தலைவர்கள் இந்தப் பணியை மேற்கொள்ளச் சென்றுள்ளார்கள்... அவர்களது இம் முயற்சி எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது...

ஷெய்க் சற்று இளைப்பாறியவராக மௌனத்தைக் கையாண்டார். தொடர்ச்சியான தோல்விக்குப் பின்னர் மீண்டும், ஷெய்க் தூண்டுகின்ற இவ் அமைதியான தஃவாப் புரட்சியின் விளைவு தொடர்பாக மாணவர்களது சிந்தனையிலே தோன்றிய கேள்விகளைத் தொடுப்பதற்கான சந்தர்ப்பமாக இந்த அமைதியை அவர்கள் ஆக்கிக் கொண்டார்:

ஷெய்கின் மௌனத்தில் சில யதார்த்தங்களைத் தொட்டுக் காட்டுவதுனூடாக அவரது தீர்மானத்தை மாற்றலாம் எனும் நோக்கில் அவர்களுள் ஒருவர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

“நாம் தஃவாப் பணியை மேற்கொள்ள இருக்கின்ற ‘ஜகதாய’ சாம்ராஜ்ய அரசர்களில் முன்னோர் பலர் இஸ்லாத்தை ஏற்றுள்ளனர். எனினும், இவர்களது மதமாற்றம் எவ்வித பிரயோசனத்தையும் அளிக்கவில்லை. உதாரணமாக, இஸ்லாத்தின் பாசறையில் வளர்ந்த ‘பர்க்கான்’, தனது வாழ்வின் இறுதி நாட்களில் இஸ்லாத்தைத் தழுவிய ‘பர்ராக்கான்’ போன்றோர்களது மதமாற்றம் மங்கோலியர்களுக்கு மத்தியில் எவ்வித பயனையும் அளிக்கவில்லை. அத்தோடு இவர்கள் மரணித்தபோதும் இஸ்லாமிய சம்பிரதாய முறைப்படி அடக்கம் செய்யப்படவுமில்லை. மாறாக, மங்கோலியர்கள் கடைப்பிடித்த சிலை வணக்க சம்பிரதாயப்படியே அடக்கம் செய்யப்பட்டார்கள். பின்னர், இவர்களோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சொற்ப தொகையினரும் மீண்டும் சிலை வணக்கத்தை நோக்கியே திரும்பினார்கள்.

இவ்வாறே இஸ்லாத்தை தனது சமூகத்துக்கு மத்தியில் பரப்புவதற்காக அயராது முயற்சிகளை மேற்கொண்ட ‘தர்மாஷீன்’ ஆட்சியை விட்டும் துரத்தப்பட்டார்... இன்று இந்த ஜகதாய சாம்ராஜ்யம் பல குட்டி சாம்ராஜ்யங்களாகப் பிளவுபட்டுள்ளது. இன்னும் முஸ்லிம்கள் இங்கு துன்புறுத்தப்படுகின்றார்கள். (அவற்றில் மிகப் பெரிய சாம்ராஜ்யமே ‘காஷ்கர் சாம்ராஜ்யம் ஆகும்.)

பின்னர், தனது கருத்துக்களைத் தொடர்ந்து விளக்கிச் செல்ல முனையாது தனது சகோதரர்களுக்கும் இடமளித்து மௌனத்தைக் கையாண்டார்.

எமது முன்னோர்கள் இப்பணியில் கண்ட தோல்விக்கான காரணத்தைத் தேடும் முயற்சியிலேயே அனைவரும் தமது சிந்தனைகளைக் குவித்திருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொண்ட ஷெய்க் மீண்டும் தனது மௌனத்தை கிழித்துக்கொண்டு,

“எமது முன்னோர்கள் விட்ட தவறை நாம் அறிந்து கொண்டால் இப் பணியை எம்மால் கச்சிதமாக மேற்கொள்ள முடியும். அவர்களது தோல்வியின் இரகசியம் என்னவெனில், மன்னன் இஸ்லாத்தை ஏற்றிருந்த அதேவேளை, அவரின் தொண்டர்களான ஆளுனர்கள், படைத் தளபதிகள் உட்பட அவருக்கு நேரிய வழியைக் காட்டிக் கொடுத்து, கஷ்ட நஷ்டங் களின்போது அவருக்கு உதவி ஒத்தாசை வழங்கக்கூடிய எவரும் இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை.

நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

‘அல்லாஹ் ஒரு தலைவருக்கு நலவை நாடினால், அவருக்கு உண்மையானதோர் உதவியாளனை வழங்குவான். அவர் (தலைவர்) மறந்தால் நினைவூட்டுபவராகவும், நினைவூட்டினால் உதவிசெய்யக் கூடியவராகவும் இருப்பார். அவ்வாறே, அல்லாஹ் ஒரு தலைவருக்கு இதற்கு மாற்றமாக நாடினால், மோசமான நினைவாற்றலுள்ள உதவியாள னொருவனை வழங்குவான். நினைவுபடுத்தினால் உதவி, ஒத்தாசை செய்யாதவராகவும் இருப்பார்.” (12)

எனவேதான், மூஸா (அலை) தனது இரட்சகனிடம்,

‘‘என் இரட்சகனே! என் குடும்பத்திலிருந்து என் சகோதரன் ஹாரூனை எனக்கு உதவியாளனாக ஆக்கியருள்வாயாக! எனது விவகாரத் தில் அவரையும் இணைத்தருள்வாயாக”(13) எனப் பிரார்த்தித்தார்கள்.

“இதன் காரணமாக நாம் எமது தஃவாப் பிரசாரத்தில் மன்னனுக்கு முன்னால் ஆளுனர்கள், படைத் தளபதிகள் என்று யாருடனெல்லாம் தொடர்பு கொள்ள முடியுமோ அவர்கள் அனைவருக்கும் இச்சத்திய மார்க் கத்தை எத்திவைப்போம். இதனூடாக மன்னனோடு தொடர்பு கொள்வது இலகுவானதாக அமைந்துவிடும். அப்போது, எமது பணி கச்சிதமாகவும் எதிர்பார்க்கின்ற விளைவைத் தரக்கூடியதாகவும் அமையும், இன்ஷா அல்லாஹ்.

"அல்லாஹு அக்பர்" என்ற வீர முழக்கம் அனைவரினதும் நாவுகளி லிருந்து வீராவேசத்தோடு மேலெழுந்தது. இதற்கு மத்தியில் தூய பணிக்கான அடிப்படைகளை ஷெய்க் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க மறக்க வில்லை.

"இப்பணியை மேற்கொள்வதற்கு உங்களால் முடிந்த அதிகபட்ச முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்! இப்பாதையில் இருக்கும் காலமெல்லாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. உங்களது எண்ணத்தில் 'அல்லாஹ்வுக் காக' என்ற இஹ்லாஸை வரவழைத்துக் கொள்ளுங்கள்! நிச்சயமாக 'இஹ் லாஸ்' என்ற தூய எண்ணத்தின் அடிப்படையில் தோற்றம் பெறும் எந்தச் செயலையும் அல்லாஹ் இலகுபடுத்தி வைப்பான். மேலும், அனைத்து நிலைமைகளிலும் அல்லாஹ்வை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்! அல்லாஹ் வர்ணிக்கின்ற இத்தகைய முஃமின்களாக இருங்கள்:

"வியாபாரமோ, கொடுக்கல் வாங்கலோ இறைநினைவை விட்டும் மறக்கடிக்காத மனிதர்கள்..."[14] என்றும் உங்களது உள்ளங்களை நோக்குங் கள்; அல்லாஹ்வுடன் இருப்பதாக உணர்ந்து கொள்ளுங்கள்; அவன் உங்க ளோடு இருக்கின்றான் என்ற உணர்வை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

"நாம் கழுத்து நரம்பை விட அவனுக்கு நெருக்கமாக உள்ளோம்."[15]

எமது அனைத்துச் செயல்களினதும் கருப்பொருளாக, **"இறைவா நீதான் எனது இலக்கு; உனது திருப்தியே எனது வேண்டுகோள்"** என்றவாறு அமைத்துக் கொள்வோம்.

இப்போது நாம் எமது பயணத்தை அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு ஆரம்பிப்போம்.

ஷெய்க் ஜமாலுத்தீன் தனது பயணத்திலே தோழர்களை முந்திய வராக காஷ்கர் நகரை நோக்கி விரைந்தார்கள். இத்தகைய துணிச்சல் மிக்க அவரது வேகம் இறை பாதையிலே எதிர்கொள்ளும் எத்தகைய கஷ்டங்

களையும் பொருட்படுத்தாது துணிச்சலாக செயற்படுவதற்கான உயிரோட்ட மிக்கதொரு முன்மாதிரியைத் தனது தோழர்களுக்குத் தெரிவிப்பதைப் போன்று காட்சியளித்தது.

அவருக்குப் பின்னால், அவரது தோழர்கள் விரைந்து செல்லலானார் கள். எனினும், அவர்களில் எவரும் தமது தலைவரை முந்திச் செல்பவராக இருக்கவில்லை. ஏனெனில், இத்தகைய சிறிய விடயங்களிலும் தமது தலைவ ரோடு நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்குகளை அவர்கள் வழக்கப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

இப் பிரயாணக் கூட்டத்தினர் தொடர்ச்சியாகப் பல நாட்கள் நிறைவுறா பொறுமையுடனும், சளைக்காத உறுதியுடனும் காடு மேடுகளைக் கடந்து, மலைகளிலே ஏறி பயணத்தைத் தொடர்ந்தார்கள். சிறியதொரு ஓய்வைப் பெற்றாலும், அதனைத் தொடர்ந்து தமது பயணத்தைக் காலத்தோடு போட்டி போட்டுக்கொண்டு விரைந்தார்கள்.

# காஷ்கார் நகர் நுழைவாயிலில்... 02

17ம் நாள் சூரியன் மறைந்தவுடன் மிகத் தொலைவில் தென்பட்ட காஷ்கர் நகர் அண்மித்து விட்டதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். சந்தோசத்தால் அவர்கள் சுயநினைவையே இழக்கப் பார்த்தனர். இப்போது நீண்ட பயணத்தின் விளைவால் களைப்புற்ற கால்நடைகளுக்கு ஓய்வளிக்கும் நேரம் நெருங்கி விட்டதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். எனினும், ஷெய்ஹ் அவர்களுக்கு இன்றைய இரவு ஓய்வளிப்பாரா...? அல்லது அவர்களுக்கேற்பட்டுள்ள களைப்பைப் பற்றி கவனம் செலுத்தாது இறை பாதையில் தொடர்ந்தும் பணிக்கத் தூண்டுவாரா? என்பதனை அவர்கள் அறியாதவர்களாகவே இருந்தார்கள். எனினும், ஷெய்கின் எத்தகைய தீர்மானத்துக்கும் தம்மை சித்தப்படுத்திக் கொண்டார்கள்.

அவர்களது இத்தகைய எண்ணங்கள் நீடிக்கவில்லை; பிரயாணக் கூட்டம் நகரின் நுழைவாயிலை வந்தடைந்து விட்டது... ஷெய்க் தனது பயணத்தை நிறுத்தி விட்டதைக் கண்டுகொண்ட தோழர்களும் நின்றவர் களாக ஷெய்கின் உபதேசங்களுக்குச் செவிசாய்க்கத் தயாரானார்கள்.

ஷெய்க் மௌனம் என்ற சாவியினூடாக அவர்களது நாவுகளுக்குத் தாழிட்டு, அனைவரது கவனத்தையும் தன்னை நோக்கி ஒருமுகப்படுத் தினார். பின்னர், அவர்களது உள்ளங்களுக்குப் புத்துணர்வூட்டி அதிலே ஆழ்ந்த நம்பிக்கைகளைச் தூவிவிடக் கூடியதொரு புன்னகையை பரிமாறிக் கொண்டார். பின்னர்,



"நாம் இன்று சிலை வணங்கிகளின் நாட்டிலே இருக்கின்றோம். இவர்களது இதயங்களை விட்டும் இரக்கம் என்ற உணர்வு வேரோடு கிள்ளி எறியப்பட்டு விட்டது. அதற்கான எந்தவொரு அடையாளமும் இல்லை. சிலவேளை இவர்களது இதயங்கள் இரக்கம் என்றால் என்ன என்பதைக் கூட அறிய மாட்டா. நாம் வந்தடைந்திருக்கின்ற இந்நகரமே நான் கூறுகின்ற உண்மைக்கு மிகவும் சிறந்த எடுத்துக்காட்டு...!

எனவே, நாம் இப்பணியைக் கச்சிதமாக, சமயோசிதமாக மேற் கொள்ள வேண்டும். ஏனெனில், எமக்கு முன் இந்த நாட்டிலே தஃவாப் பணியை மேற்கொள்ள வந்த பெருந்தொகை தாஇகளும் அவர்களோடு இந்த சத்திய மார்க்கத்தை ஏற்றுக் கொண்டோரினதும் முடிவு- 'கொலை' அல்லது 'நாடு கடத்தல்' என்றவாறே அமைந்திருந்தது.

திடீரென ஷெய்கின் தோழர்களுள் ஒருவர் முஸ்லிம்கள் இத்தகைய நாடுகளிலே அனுபவித்த துன்பங்களை சித்திரிக்க எத்தனித்தார்.

“இஸ்லாத்தை ஏற்றோருக்கு செங்கிஸ்கான் செய்த கொடுமைகளைத் தான் எம்மால் மறக்க முடியுமா...!

தனது சாம்ராஜ்யத்துக்கென இவனால் இயற்றப்பட்ட சமூகவியல் சட்ட விதியொன்று, “யார் முஸ்லிம்களை அறுப்பதைப் போன்று (படுமோசமான முறையில்) மிருகங்களை அறுக்கின்றாரோ அவர் கொலை செய்யப்படுவார்” எனக் கூறுகின்றது.(16)

அவ்வாறே, இந்த சாம்ராஜ்யத்தின் ஸ்தாபகர் ஜகதாய மன்னன் கடுமையான சட்டங்களை இயற்றியதன் மூலம் முஸ்லிம்களைக் கொடு மைப்படுத்தினான். எந்தளவுக்கெனில், இச்சட்டங்கள் உணவுக்காக மிருகங் களை அறுப்பதோடு தொடர்பான மத அனுஷ்டானங்களையும் வுழூவைக் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளையும் பாதிக்கக்கூடிய தாய் இருந்தன.

இந்த மார்க்கத்தின் மீது அவன் கொண்ட கடுமையான வெறுப்பின் காரணமாக, அவனது முன்னிலையில் எவரேனும் ‘முஸ்லிம்’ என்ற வார்த் தையைக் கூட மொழிவதனை விரும்பாதவனாக இருந்தான்.

இதனூடாக ஷெய்க் ஜமாலுத்தீன் தனது தோழர்களின் வதனங் களை உற்றுநோக்கியவராக, தனது பார்வையை அங்குமிங்குமாகச் சுழற்றி னார். அவர்களது வதனங்களிலே கவலையுடனான கைசேதத்தின் படிவுகள் படர்ந்திருந்ததைக் கண்டுகொண்டார். இவர்களது உள்ளங்களில் நம்பிக் கையீனம் சுடர்விடத் தொடங்கியிருப்பதையும் உணர்ந்து கொண்டார். உடனே அவர்களோடு வார்த்தைகளால் சங்கமித்தார் ஷெய்க்.

“இந்த நகரின் நுழைவாயிலிலேயே உங்களைப் பல சோதனைகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. உங்களுக்கு முன் ‘குயூக்’ மன்னனின் அரசவைக்கு தஃவாப் பணியை மேற்கொள்வதற்காகச் சென்ற ஒரு தாஇக்கு நடந்த உண்மைச் சம்பவமொன்றை உங்களுக்குச் சுட்டிக் காட்டுவதனூடாக பிரயோசனமிக்கதொரு முன்மாதிரியை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.

ஷெய்க் சிறியதொரு மௌனத்தினூடாக இச்சம்பவத்தைத் தனது மனக் கண்முன்னே ஒன்றுசேர்த்துக் கொண்டார். பின் அழகிய முறையில் அதனை மாணவர்களுக்கு முன்வைத்தார்.

“பௌத்த மத குருமார்கள் முஸ்லிம்களைத் துன்புறுத்துமாறு ‘குயூக்’ மன்னனை தூண்டுபவர்களாக இருந்தார்கள். இந்த நாட்டிலே ‘நூருத்தீன் குவாரிஸ்மி’ என்றொரு இமாம் இருந்தார். சில மதச்சார்பற்றவர்களும் கிறிஸ்தவப் பாதிரிமார்களும் பௌத்த மதக் குருமார்களும் ‘குயூக்’ மன்னனிடம் சென்று, அந்த இமாமை அழைத்து தங்களோடு விவாதிக்க வேண்டும் அதில் அவர் இஸ்லாத்தின் சிறப்பையும் இறுதித் தூதர் நபி (ஸல்) அவர்களின் தூவத்துவத்தையும் உறுதிப்படுத்தி ஆதாரங்களை முன்வைக்க வேண்டும். அவ்வாறு அவரால் ஆதாரங்களை முன்வைக்க முடியா விட்டால் அவர் கொலை செய்யப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்கள். இதனை அரசன் ஏற்று, இமாமை வரவழைக்கத் தூதும் அனுப்பினான். நபி (ஸல்) அவர்களின் நபித்துவம் தொடர்பாகவும், அவரது வாழ்வியல் செயற்பாடுகள் ஏனைய நபிமார்களோடு ஒப்பிட்டும் விவாதம் பரபரப்பாகவும் கச்சிதமாகவும் நடந்தேறியது. இறுதியில் இமாமின் ஆதாரங்கள் உண்மைக்கு நெருக்கமானதாகவும், இவர்களது வாதங்கள் பலவீனமானதாகவும் இருப்பதைக் கண்டுகொண்டபோது, அவர்கள் வேறொரு வழிமுறையைக் கையாளாலானார்கள். அதாவது அந்த விரோதிகள் மன்னர் ‘குயூக்கான்’ இடம் இஸ்லாமிய முறைப்படி இமாம் தொழுகையை நிறைவேற்றிக் காட்டுமாறு வேண்டினார்கள். அவ்வாறே ‘குயூக்’ இந்த இமாமோடு இன்னொருவரையும் சேர்த்து இஸ்லாமிய முறைப்படி தொழுகையை நிறைவேற்றிக் காட்டுமாறு ஏவினான். இமாமும், அவரோடு தொழுத அடுத்த முஸ்லிமும் ஸுஜூதிலே சென்றபோது, மன்னன் ‘குயூக்’ அழைத்திருந்த சில பாதகர்கள் அவர்களை வேதனைப்படுத்தி, அவர்களது தலைகளில் அடித்தார்கள். அத்தோடு இழிவான செயல்களையும் செய் தார்கள். எனினும், இமாம் இவை எவற்றையும் பொருட்படுத்தாது, தொழு கையை நிறுத்தாதவராக மிகவும் பேணுதலோடு நிறைவேற்றி முடித்தார்கள். இவ்வாறு தொழுகையை முடித்தபின் வானத்தை அண்ணார்ந்து பார்த்து, ***“நீங்கள் உங்களது இரட்சகனிடம் பணிவாகவும் மன்றாடியும் பிரார்த் திப்பீர்களாக!”***[(17)] என்று கூறினார். பின் குயூக் மன்னிடம் அனுமதி கோரி

இமாம் வீட்டுக்குத் திரும்பினார்.[18]

ஷெய்க் மீண்டும் தனது பேச்சில் நிதானமிழக்காதவராக தன்னோடு இருந்தவர்களை உற்றுநோக்கிப் பேசினார்.

"இந்த மார்க்கத்தின் மீதான எதிர்ப்பும், பொறாமையும் எவ்வளவு தூரம் சென்றுவிட்டது என்பதனைப் பார்த்தீர்களா? இந்த இமாமின் தஃவா முறைமை ஹிக்மத்தைக் கொண்டதாகவும், அழகிய உபதேசத்தைக் கொண்டதாகவும் நீங்கள் காண்கிறீர்களா...? அவர்கள் அந்த இமாமின் மீது அத்துமீறிச் செயற்பட்டபோது அவரது வார்த்தைகள் இவ்வசனத்தையன்றி வேறு எதனையும் கூறவில்லை.

"நீங்கள் உங்கள் இரட்சகனிடம் பணிவாகவும் மன்றாடியும் பிரார்த்தியுங்கள்!"

இந்த வசனத்தின் இறுதியிலே மறைமுகமானதொரு விடயத்தை அவர் சுட்டிக்காட்டுகின்றார். இவ்வசனம், **"நிச்சயமாக, அல்லாஹ் அத்துமீறுபவர்களை விரும்ப மாட்டான்"** [19] என்று முடிவடைகின்றது.

பின்னர் அவர் மிகவும் ஒழுக்கமான முறையில், மோசமான எந்தவொரு வார்த்தையும் பிரயோகிக்காமல் திரும்பிச் சென்றுவிட்டார். இவ்வாறே நீங்களும் உங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்..."

முஸ்லிம்களுக்கு நடக்கின்ற இத்தகைய அநியாயங்களால் உணர்ச்சி வசப்பட்டவராகவும், ஆசானுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையில் எவ்வித குறையும் செய்யாதவராகவும் அவர்களுள் ஒருவர்,

"எனினும், நாமும் இந்த தாஇயின் செயலைப் போன்று நளினமாகவும் மென்மையாகவும் அவர்களோடு நடந்து கொள்வோமானால் அது இந்தச் சிலை வணங்கிகளுக்கு கட்டுப்பட்டு சரணடைவதைப் போன்று ஆகிவிடுமல்லவா...? அவ்வாறாயின், இது அல்குர்ஆன் கூறும் வழிகாட்டலை விட்டும் எம்மைத் தூரமானவர்களாக ஆக்கிவிடுமல்லவா...?

“(கண்ணியம் எனும்) இஸ்ஸத் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக் கும் முஃமின்களுக்கும் சொந்தமானது[20] என அல்லாஹ் கூறுகிறான்.

இந்த தாஇ நடந்து கொண்ட முறையில், அல்லாஹ் முஃமின்களுக்கு வழங்கிய ‘இஸ்ஸத்’ எங்கே...?

ஒரு முஃமின் இறை பாதையில் அர்ப்பணிக்கின்றவற்றில் மிகவும் உயர்ந்தது அவனது உயிர் என்பதில் சந்தேகமே இல்லை. ஏன் இத்தகைய நிலைமைகளில் அதனைத் தியாகம் செய்யாது கோழையாக இருக்க வேண்டும்...?

இந்தத் தயக்கம் அல்லது பின்னடைவு அல்லாஹ்வையும் அவனது தூதரையும் எதிர்க்கின்றவர்களை நேசிப்பதாக கருதப்பட முடியாதா? அவ்வாறாயின், இது ஈமானை விட்டும் தூரமானதாக இருக்காதா?

“நபியே அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்ட வர்கள், அல்லாஹ்வையும் அவனது தூதரையும் எதிர்க்கின்றவர்கள் அவர்களது பெற்றோராகவோ, பிள்ளைகளாகவோ, சகோதரர்களாகவோ, உறவினர்களாகவோ இருந்தாலும் அவர்களோடு நேசம் பாராட்டுவதை நீர் காணமாட்டீர்.”[21]

“யார் (தயங்கிப்) பின்வாங்குகின்றார்களோ, அவர்கள்தான் அநியாயக்காரர்கள்”[22] எனக் கூறி முடிக்கிறார்.

ஷெய்கின் விசாலமான அறிவாலும் பரந்த மனதாலும் இவ்விவ காரத்தை இலகுவாகக் கையாள்கின்றார்.

“மார்க்கச் சட்டத்தை மாத்திரம் அறிந்திருப்பது போதாது. அத்தோடு அச்சட்டத்தை நடைமுறைப்படுத்தப் பொருத்தமான கால சூழ்நிலையையும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

நாம் இந்த அநியாயக்கார நிராகரிப்பாளர்களை விட்டும் பின்வாங்

கவுமில்லை. ஒருபோதும் நாம் அவர்களை நேசித்தவர்களாக இருந்தது மில்லை; அவ்வாறு இருக்கவும் மாட்டோம்.

இவ்வாறு மென்மையாகவும் தாராளத் தன்மையோடும் நடந்து கொள்ளுமாறு உங்களுக்கு நான் கூறியதெல்லாம், நீங்கள் அவர்களை எதிர்க்கக்கூடிய எத்தகைய பௌதிக வளங்களுமற்றவர்களாகவே இருக் கின்றீர்கள் என்பதற்கே. அவ்வாறு நீங்கள் பலமிக்க ஆயுதங்களைக் கொண்ட வர்களாக இருந்தாலும், இதற்கு முன்னர் எத்தனையோ பயிற்றப்பட்ட பலமிக்க படைகள் இவர்களுக்கு முன்னிலையில் தோல்வியுற்ற நிலையில் உங்களால் என்னதான் செய்ய முடியும்...!!

நபி (ஸல்) அவர்கள் சில முஷ்ரிகீன்களது பாதுகாப்பை வேண்டிய அந்நாளில் அல்லாஹ்வால் வழங்கப்பட்ட கண்ணியத்தை மறந்தவர்களா கவா இருந்தார்கள்...? "நபி (ஸல்) அவர்கள் தாயிப் நகரிலிருந்து திரும்பிய போது 'அஹ்னஸ் இப்னு ஷுரைக்', ஸுஹைல் இப்னு அம்ர், முத்அம் இப்னு அதீ போன்றோரிடம் பாதுகாப்பு வேண்டினார்கள். இவர்கள் அனைவரும் முஷ்ரிக்குகளே...! இவர்களில் முதல் இருவரும் மறுத்து விட்டார்கள். முத்அம் இப்னு அதீ மாத்திரம் ஏற்றுக் கொண்டார். எனவே, நபிகளாருக்கு பாதுகாப்பளிக்க நபிகளார் கஃபாவை தவாப் செய்வதற்காக (முத்அம் தனது பிள்ளைகளோடு ஆயுதமேந்திய நிலையில்) வந்தார்கள். அப்போது சில முஷ்ரிக்கள் அவர்களிடம், "நீர் இத்தூதருக்குப் பாதுகாப் பளித்தவரா? அல்லது அவரைப் பின்பற்றுவோரா? எனக் கேட்டார்கள். அதற்கு முத்அம் "நான் அவருக்குப் பாதுகாப்பளித்திருக்கிறேன்" என்று கூறினார்.[23]

"சகோதரர்களே! நிச்சயமாக, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அல்லாஹ்வால் வழங்கப்பெற்ற இந்த கண்ணியத்தை மறந்தவர்களாக இருக்கவில்லை. மாறாக, எந்நிலையிலும் அந்த கண்ணியத் துக்கு சொந்தக்காரராகவே இருந்தார்கள். அதேவேளை, எவ்வித பலமும் சக்தியுமற்ற நிலையில் தன்னைக் குறைஷிக் காபிர்களின் பழிவாங்குதலுக்கு இரையாக்கிக் கொள்ளாதவராகவும் இருந்தார்கள். ஒவ்வொரு சூழ்நிலைக் கும் பொருத்தமானதொரு சட்டம் இருக்கின்றது. ஒவ்வொரு நிலை

மைக்கும் பொருத்தமானதொரு கருத்து இருக்கின்றது.

இதனைத்தான் சற்று முன்னர் நான் உங்களுக்குத் தெரிவித்தேன். சட்டத்தை அறிந்திருக்கும் அதேவேளை, அதனை நடைமுறைப்படுத்தப் பொருத்தமான கால, சூழ்நிலையையும் சரியாக அறிந்து கொண்டாலே எமது செயற்பாட்டின் விளைவைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறே, ஹுதைபிய்யா உடன்படிக்கையை நோக்குங்கள். ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது, இஸ்லாமிய தஃவாப் பிரச்சாரத்தைச் சூழ இருந்த சூழ்நிலைகள், மக்கா வெற்றியின்போது ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை ஏற்க வைத்தன. அத்தகைய நிபந்தனைகளை உங்களுக்குத் தொட்டுக் காட்டுவது மிகவும் பொருத்தமெனக் கருதுகின்றேன்.

1. ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இவ்வருடம் மக்காவில் நுழையக் கூடாது; அடுத்த வருடம் நுழையலாம்.

2. முஸ்லிம்களுக்கும் காபிர்களுக்கும் மத்தியல் 10 வருடங்களுக்குப் போர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

3. முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களோடு இணைந்து கொள்ள விரும்புவோர் அவரோடு உடன்படிக்கை செய்து இணைந்து கொள்ளலாம். அவ்வாறே குறைஷிகளோடு ஒப்பந்த உறவுகளை வைத்துக் கொள்ள விரும்புவோர் அவ்வாறு செய்துகொள்ளலாம்.

4. குறைஷிகளில் எவரேனும் தனது பொறுப்புதாரியின் அனுமதியின்றி இஸ்லாத்தை ஏற்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்தால், அவர் திருப்பி அனுப்பப்படுவார். அவ்வாறே, முஸ்லிம்களிலிருந்து எவரேனும் குறைஷிகளிடம் வந்தால், அவர் திருப்பி

அனுப்பப்பட மாட்டார்.[24]

முஸ்லிம்களைப் பொறுத்தவரை இந்த நிபந்தனைகளை ஏற்பது மிகவும் கஷ்டமானதாகவே இருந்தது. அவர்கள் கூறினார்கள்:

“ஸுப்ஹானல்லாஹ்.., எம்மை விட்டும் அவர்களிடம் ‘முர்தத்தாக’ செல்பவரை எம்மிடம் திருப்பி அனுப்பாத நிலையில், எவ்வாறு எம்மை நம்பி முஸ்லிமாக வந்தோரை நாம் அவர்களிடம் அனுப்புவது...?”

அவ்வாறே, இறை இல்லத்தைத் தரிசிக்காது திரும்பிச் செல்ல வேண்டும் என்ற முதலாவது நிபந்தனையைப் பொறுத்தவரையில், அது முஸ்லிம்களது உள்ளத்தில் பாரியதொரு பாதிப்பை ஏற்படுத்தியது. உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இந்நிபந்தனைகளையிட்டுக் கொதித்தெழுந்தார்.

“அல்லாஹ்வின் தூதரே! நாம் சத்தியத்திலல்லவா இருக்கின்றோம்..! அவ்வாறாயின், இந்த இழிவை நாம் எவ்வாறு ஏற்போம்...?”[25]

இவ்வாறு வெளித்தோற்றத்தில் முஸ்லிம்களுக்குப் பாதகமாகத் தென்பட்ட இந்த நிபந்தனைகள், உண்மையில் மாபெரும் வெற்றியாகவே அமைந்திருந்தது.

**“நிச்சயமாக நாம் உங்களுக்குத் தெளிவானதொரு வெற்றியை அருளினோம்”** என அல்லாஹ் கூறுகின்றான்.[26]

இங்கு மூன்றாவது நிபந்தனையை அவதானியுங்கள்.

“குறைஷிகள் அரேபியத் தீபகற்பத்திலே தங்களுக்கு இருந்த செல்வாக்கையும் மார்க்கத் தலைமைத்துவத்தையும் மறந்து விட்டார்கள். இப்போது, தன்னிலே மாத்திரம் கரிசனை செலுத்தியவர்களாக, ஏனைய மக்கள் அனைவரும் இந்த மார்க்கத்தில் நுழைந்தாலும் அதனைப் பொருட்படுத்தாது, அதிலே எவ்வித தலையீடும் செய்யாதிருப்பதாகவும் இந்

நிபந்தனை சுட்டிக்காட்டுகின்றது. இது குறைஷிகளுக்குத் தோல்வியா கவும் முஸ்லிம்களுக்கு தெளிவானதொரு வெற்றியாகவும் இல்லையா?.."

இரண்டாவது நிபந்தனையை எடுத்துக் கொள்ளுங்கள்.

முஸ்லிம்கள் என்றும் போராட்டத்தை ஆரம்பித்து வைக்கவில்லை. மாறாக, குறைஷிகளே போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். இதனையே, அல்லாஹ் **"அவர்களே முதலில் உங்களோடு போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள்**[27] எனக் கூறுகின்றான்.

எனினும், முஸ்லிம்கள் மேற்கொண்ட இராணுவப் புலனாய்வு நடவடிக்கைகளின் நோக்கம், குறைஷிகளின் வீண் பெருமையைத் தடுத்து, இஸ்லாத்தை வளரவிடாது தடுக்கும் முயற்சியை விட்டும் அவர்களை விலக்கி, தங்களோடு அவர்கள் சமத்துவமாகச் செயற்படவைக்க வேண்டும் என்பதே. இதனூடாகவே, இரு சாராரும் சுதந்திரமாகத் தமது செயற்பாடு களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்."

இந்தவகையில் இந்த நிபந்தனையும் முஸ்லிம்களுக்கான வெற்றியே..!

அவ்வாறே, முதலாம் நிபந்தனையை எடுத்துக் கொண்டாலும், இதுவும் குறைஷிகளுக்குத் தோல்வியே! ஏனெனில், அவர்களுக்கு இவ்வருடம் மாத்திரமே முஸ்லிம்களைத் தடுக்க முடியுமாக இருக்கும். அந்த வகையில், அவர்கள் இவ்வருடம் மாத்திரமே வெற்றி பெற்றார்கள்.

குறைஷிகள் இந்த மூன்று நிபந்தனைகளோடும் தமக்குச் சார்பாக ஒரேயொரு நிபந்தனையை மாத்திரமே பெற்றுக் கொண்டனர். அதுவே நான்காவது நிபந்தனை. எனினும், அந்த நிபந்தனையும் அற்பமானதே. முஸ்லிம்களுக்கு அதில் எத்தகைய பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. ஏனெனில், ஒருவன் உண்மையான முஸ்லிமாக இருக்கும் காலமெல்லாம் அவன் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் இஸ்லாத்தின் நகரத்தையும் விட்டுச் செல்ல மாட்டான். அவ்வாறே அவன் விட்டுச் சென்றால் அவன்

வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ மதம் மாறினாலேயே செல்வான். அவ்வாறு மதம் மாறுவோரின் பால் முஸ்லிம்களுக்கு எத்தகைய தேவையுமில்லை. அத்தகையோர் இஸ்லாமிய சமூகத்தில் இருப்பதைவிட இஸ்லாமிய சமூகத்தை விட்டும் விலகி இருப்பதே சிறந்ததாகும். அவ்வாறே, மக்காவாசிகளில் எவரேனும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் அவருக்கு மதீனாவுக்கு செல்ல முடியா விட்டாலும் தொடர்ந்தும் முஸ்லிமாக இருக்க முடியும். ஏனெனில், அல்லாஹ்வின் பூமி விசாலமானது. மதீனா அல்லாத வேறு பிரதேசங்களுக்குச் செல்லலாம். மதீனாவாசிகள் இஸ்லாத்தைப் பற்றி அறிந்திருக்காத நிலையில் முஸ்லிம்களுக்கு ஹபஷா மண் இடம் கொடுக் கவில்லையா.?[28]

இத்தகைய தெளிவான உடன்படிக்கையின் விளைவாக காபிர்கள் முஸ்லிம்களோடு இரண்டறக் கலந்து பழகலானார்கள். இதனூடாக இஸ்லாத்தின் ஒளி அவர்களது உள்ளங்களோடு சங்கமிக்கலானது. அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகின்றார்கள், "ஹுதைபியா உடன்படிக்கையை விட இஸ்லாத்தில் மகத்தானதொரு உடன்படிக்கை கிடையாது. ஆனால், மக்கள் இறைவனுக்கும் அவனது தூதருக்கும் இடையே உள்ள தொடர்பைக் காணத் தவறிவிட்டார்கள். அடியார்கள் அவசரப்படுகின்றார்கள். எனினும், அல்லாஹ் தான் நாடியதை நிறை வேற்றும் வரை அடியார்களின் அவசரத்துக்காக அவசரப்பட மாட் டான்."[29]

ஷெய்க் தனது தோழர்களது முகங்களிலே காட்சியளித்த வினாக்களை உற்றுநோக்கியவராக தனது பார்வையை அவ்வாறே சுழற்றிக் கொண்டிருந்தார். பின்னர்,

"உக்பா பின் முஈத் - அவன் மீது இறைசாபம் உண்டாவதாக! - நபி (ஸல்) அவர்கள் ஸுஜூதிலே இருக்கும்போது அன்னாரது புனிதமான கழுத்தை மிதிப்பவனாகவும், அதன் மேல் அழுகிய ஒட்டகக் குடல்களைப் போடுபவனாகவும் இருந்தான். அப்போது, அப்பள்ளிவாயலிலே இருந்த முஸ்லிம்கள் கூட அவனை எதிர்க்க முடியாத பலவீனர்களாக இருந்தார்கள். இதன் காரணமாக, அவற்றை எடுத்து எறியக்கூட சக்திவாய்ந்தவர்களாக

அவர்கள் இருக்கவில்லை. அப்போது, அன்னாரின் புதல்வி பாத்திமா (ரழி) வந்து அவற்றை எடுத்து வீசும்வரை நபிகளார் தொடர்ந்தும் ஸுஜுதிலேயே இருந்தார்கள்..,[30]

அவ்வாறே, "அபூ ஜஹ்லின் மனைவி" உம்மு ஜமீல் நபிகளார் போகும் பாதையில் அன்னாரை வேதனைப்படுத்துவதற்காக முற்களைத் தூவிவிட் டாள். அவ்வாறே, குறைஷிகள் சாதாரணதொரு மனிதருக்கும் பொருந்தாத பல்வேறுபட்ட பெயர்களைக் கொண்டு அவர்களை அழைத்தார்கள். "சூனி யக்காரன், பைத்தியக்காரன், குறிகாரன், பொய்யன்," என்பன அவற்றில் சில வாகும்.

அது மட்டுமா? அன்னார் மதீனா நோக்கி ஹிஜ்ரத் செல்ல இருந்த இரவில் அன்னாரைக் கொலை செய்யவும் திட்டம் தீட்டினார்கள். பல்வேறு கோத்திரங்களிலிருந்தும் பலமிக்க 40 இளைஞர்களை ஒன்றுசேர்த்து அன்னாரின் இரத்தத்தை ஓட்டி தங்களது கோத்திரங்களுக்கு மத்தியில் பகிர்ந்து கொள்வதாகவும் சூழ்ச்சி செய்தார்கள்.

இவை அனைத்தும் அவரது பலத்தை இம்மியளவும் குறைத்திட வில்லை. இவையனைத்தையும் அவர்கள் இறை பாதையில் திருப்தியோடு ஏற்றுக் கொண்டார்கள்... தாயிப் நகரில் 'ஸகீப்' கோத்திரச் சிறுவர்கள் ஒன்றுகூடி அன்னாரின் மேனியில் கற்களை எறிந்து, அன்னாரின் இரத்தத்தை ஓட்டியபோது, அன்னார் கூறிய வார்த்தைகளைப் பாருங்கள்..!

*"யா அல்லாஹ்! உன்னிடமே எனது பலவீனத்தையும் எளிமையை யும், மக்கள் முன் எனக்குள்ள இழிநிலையையும் முறையிடுகின்றேன்.!!*

*கருணையாளனே! எளியவர்களின் இரட்சகனே..!, நீதான் எனது இரட்சகன் என்னை யாரிடம் பொறுப்புச் சாட்டப்போகின்றாய்..? என்னை அச்சுறுத்துகின்றதொரு எதிரியிடமா? அல்லது எனது விவகாரத்தைப் பொறுப்பேற்கும் அன்னியனொருவரிடமா?!*

*நீ என் மீது கோபம் கொள்ளவில்லையெனில், எனக்கு எவ்விதக்*

*கவலையும் இல்லை. உனது உதவியே எனக்குப் போதுமானது...”*

*இருளை அகற்றி நேர்வழிகாட்டும் உன்னிடமே அடைக்கலம் தேடுகின்றேன். அதனூடாகவே, உலக மறுமை விவகாரங்கள் சீர்பெறுகின்றன. உனது கோபத்தை என் மீது இறக்கிவிடாதே!!*

*உன்னையன்றி வேறு சக்தியோ, பலமோ கிடையாது.’’*(31)

ஷெய்கின் குரல் தொண்டைக் குழியில் சிக்கித் தவித்தது. அழுகையுடன் அல்லாஹ்விடம் மன்றாடியவராக இவ்வார்த்தைகளை மீண்டும் மீண்டும் அவர் மொழிந்தார்.

மௌனம் அவர்களை அரவணைத்துக் கொண்டது. ஷெய்க் தனது பார்வையை அங்குமிங்குமாய் மாணவர்களை நோக்கித் திருப்பினார். அப்போது முட்கள் நிறைந்த இப்பாதையில் பயணிப்பதற்கான வேட்கையை அவர்களது கண்களிலே கண்டுகொண்டார்.

“நாம் தஃவாவை எத்திவைக்கும் இப்பணியில் எதிர்ப்படும் எவ்விதக் கஷ்டங்களையும் சகித்துக் கொள்வோம்” என்று அவர்களது நிலைமை கூறிக் கொண்டிருந்தது.

ஷெய்க் மீண்டும் பேசுவதற்கான சக்திகளை ஒன்றுத்திரட்டித் தனது பேச்சைத் தொடர்ந்தார்:

“உண்மையிலே இதுதான் ‘ஹிக்மத்’. இவ்வழிமுறையையே நாமும் கடைப்பிடிக்க வேண்டும். எமது சிந்தனைகளே எமது உணர்வுகளை ஆள வேண்டும். எமது உணர்வுகள் எம்மை வழிநடத்தக் கூடாது. அவை சிறந்த உணர்வுகளாக இருந்தாலும் சரியே! நிச்சயமாக, இதுவே ஹிக்மத் என்ற வழிமுறையாகும். முட்கள் நிறைந்த பாதையாகும்.

எதிபார்க்கப்படுகின்ற இலக்கை அடைந்து கொள்வதற்காகவும் இதற்கு முன் நீங்கள் எனக்கு உடன்படிக்கை செய்த, “இறைவா! நீதான் எனது இலக்கு; உனது திருப்தியே எனது வேண்டுகோள்” என்ற மையக்

கருவை நிறைவேற்றுவதற்காகவும் ஏற்படும் கஷ்டங்களை சகித்துக் கொள்வதற்கு நீங்கள் தயாரா..?

அனைவரும் ஒரே குரலில்,

"நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்" என்றனர்.

அவர்கள் அனைவர் சார்பாக அவர்களுள் ஒருவர்,

"நாம் இறை பாதையில் இருக்கும் காலமெல்லாம், எமக்கு ஏற்படும் எத்தகைய கஷ்டங்களையும் சகித்துக் கொள்ளத் தயாராகவே இருக்கின் றோம். அல்லாஹ்வுக்காக எமது உயிரையும் அர்ப்பணிப்பதாக நாம் உடன் படிக்கை செய்கிறோம். நாம் ஒருபோதும் அவ்வுடன்படிக்கையை மீற மாட் டோம். எமது உடலில் உயிர் உள்ளவரை எமது வாக்குறுதியை நிறை வேற்றுவதை விட்டும் ஒருபோதும் நாம் பின்வாங்க மாட்டோம்."

அப்போது ஷெய்க் கூறினார்:

"அவ்வாறாயின், அல்லாஹ்வின் பெயரால் நாம் புறப்படுவோம். நீங்கள் இந்த நகரிலே பாரசீகத்துக்கும் இந்தியாவுக்கும் மத்தியில் தொழிற்படுகின்ற வியாபாரக் கூட்டமாகவே நுழைகின்றீர்கள் என்பதனை மறந்துவிட வேண்டாம். எனவே, வழமையாக பிரயாணிகள் தங்குகின்ற சத்திரத்தை நோக்கி நாமும் புறப்படுவோம் வாருங்கள்."

பிரயாணக் கூட்டம் நகரின் நுழைவாயிலை விட்டும், நீண்ட பல தெருக்களைக் கடந்து பிரயாணிகளின் சத்திரத்தை நோக்கிச் சென்றடைந்தது.

அங்கே அவர்கள் தங்களது பிரயாணப் பொதிகளை இறக்கினார் கள். பின்னர், விருந்தாளிகள் தங்குகின்ற இடத்தை நோக்கி நகர்ந்தார்கள். அங்கிருந்த வியாபாரிகளுக்கு வந்தனங்களைத் தெரிவித்துக் கொண்டு வரவேற்பறையில் அமர்ந்து கொண்டார்கள். பின்னர், இராப் போஷ ணத்தை உண்பதற்காக அனைவரும் அமர்ந்தார்கள். எனினும், தங்களோடு

இருந்த ஏனையோரையும் சாப்பிடுவதற்காக அழைப்பதற்கு அவர்கள் மறக்கவில்லை. பின்னர் ஏனைய விருந்தாளிகளோடு சத்திரத்தின் முற்றத்தில் அளவளாவிக் கொண்டார்கள்.

ஷெய்கின் வார்த்தைகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்ததோடு அவர்களைத் திறந்த மனதோடு கவனமாகச் செவிமடுக்கவும் வைத்தன.

புதிய விருந்தாளிகள் தமது இராப் போஷணத்தை எடுத்து முடிந்தவுடனே ஷெய்க் ஜமாலுத்தீன் அவர்களிடம் காஷ்கர் நகரைப் பற்றியும் அதன் அழகைப் பற்றியும் பேச ஆரம்பித்தார்கள். பின்னர், அவர்கள் அறிந்திருப் பதற்கேற்ப அந்த நகரைப் பற்றியும் அதன் நிலவரங்கள், அதில் வாழும் மக்களில் இயல்புகள், அதன் தலைவர்களது நடவடிக்கைகள், அவர்களின் பெயர்கள், அவர்களுள் சிறந்தவர்கள் என்றவாறெல்லாம் பேச்சு படிப்படி யாகத் தொடர்ந்து சென்றது.

உரையாடல் முடிவடைவதற்குள் இரவின் முதற்பகுதி முடிவடைந்து விட்டது. அனைவரும் இமைகளுக்குச் சரணடைந்தவர்களாக நித்திரைக் காகச் சென்றார்கள். எனினும், ஷெய்க் இந்த அளவளாவலுக்கூடாகத் தனக் குத் தேவையான அனைத்துக் குறிப்புக்களையும் அடுத்த நாள் வேலைக்காக ஒழுங்குபடுத்திக் கொண்டார்.

அனைவரும் ஆழ்ந்த தூக்கத்திலும் கனவிலும் மூழ்கினார்கள்.

# தொடர் பயணம்... 03

பஜ்ரின் உதயத்தோடு ஷெய்கும் அவரது தோழர்களும் விழித் தெழுந்து எவ்வித சப்தமோ சலனமோ இன்றி விரைவாகத் தொழுகையை நிறைவேற்றினார்கள்.

இதமான காலைத் தென்றலைச் சுவாசித்த சிட்டுக்களின் கீச்சிடல் களோடு ஷெய்கும் தோழர்களும் சந்தையை நோக்கிப் புறப்பட்டார்கள். அங்கு பொருட்களை விற்பவர்களாகவும் வாங்குபவர்களாகவும் மக்க ளோடு சங்கமித்தார்கள். அப்போது, அவர்களைப் பற்றியும் அவர்களது இயல்புகள், ஆசைகள் என்பவற்றைப் பற்றியும் பேசிக் கொண்டார்கள்.

பின்னர், ஷெய்க் தலைவர்களுள் ஒருவரைச் சந்திக்கப் புறப்பட்டார். அனுமதி கோரி சிறந்த வந்தனங்களைத் தெரிவித்தவராக தலைவரிடம் நுழைந்தார்; அவரது கவனத்தை கவர்ந்திழுக்கக்கூடிய நல்லெண்ண

வார்த்தை ஜாலங்களைப் பரிமாற்றிக் கொண்டார்.

அவர்களிருவரும் கேட்போரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளக் கூடிய அழகிய நடத்தைகளையும் பண்பாடுகளையும் பற்றித் தொடர்ந்து பேசலானார்கள். இதிலிருந்து நபி (ஸல்) அவர்களின் பண்பாடுகளைப் பற்றியும் அதனடியாக மனிதனுக்குக் கிடைக்கும் உலக, மறுமை ஈடேற்றங்களைப் பற்றியும் பேச்சு தொடர்ந்து நகர்ந்தது. இன்னும் சொல்லக் கூடாதா? என்று ஆதங்கப்படுமளவுக்கு விளக்கத்தை அழகுற அமைத்துச் சென்றார் ஷெய்க்.

இறுதியில், அத்தலைவர் இந்த மார்க்கத்தில் நுழைவதற்கான தனது விருப்பத்தைத் தெரிவித்தார். எனினும், இச் செய்தி மன்னரைச் சென்றடைவதைப் பற்றிய தனது அச்சத்தை ஷெய்கும் தெரிவித்தார். ஏனெனில், இச்செய்தியை மன்னன் செவிமடுத்தால் அவனது முழுக் கோபமும் இத்தலைவர் மீது ஏற்பட்டுவிடும். சிலவேளை அவரை வேதனைப்படுத்தி கொலை செய்கின்ற அளவுக்கும் அவர் சென்று விடலாம்.

அப்போது, அவரது இஸ்லாத்தை மறைக்குமாறும், பொருத்தமான சந்தர்ப்பம் வரும்போது அதனை வெளிப்படுத்துமாறும் ஷெய்க் தெரிவித்த கருத்துக்கு மிகவும் வியந்து போனார் அத்தலைவர்.

ஷெய்க், அத்தலைவரிடமிருந்து திரும்பி இறைவனுக்கு நன்றி செலுத்தியவராக மகிழ்ச்சிக் களிப்பில் படைத் தளபதியொருவரை நாடியவராக தனது பணியைத் தொடர்ந்தார். இவரும் இஸ்லாத்தை ஏற்ற பின்னர், அதை மறைக்குமாறும் ஷெய்க் வேண்டிக் கொண்டார். பின் இவரை விட்டுவிட்டு இன்னொருவரை நாடியவராக ஷெய்க் தொடர்ந்தார்.

இவ்வாறே, நாட்கள் கடந்தன. இஸ்லாத்தின் பால் பல தலைவர்களும் படைத் தளபதிகளும் கவரப்பட்டார்கள். எனினும், மன்னன் துக்ளக் தைமூரின் அதிகாரத்துக்கு முன்னால் எதுவும் செய்ய முடியாத சிறியதொரு கூட்டமாகவே அவர்கள் காணப்பட்டார்கள்.

# சிறை வாசலில்... 04

உஷ்ணமானதொரு அந்தி மாலைப் பொழுதிலே காஷ்கர் நகரின் ஒரு வனாந்தரத்தினுள் மனிதர்களது பார்வைகளை விட்டும் தூரமான ஓர் இடத்தில் தமது பிரச்சாரத்தின் விளைவையும் அதன் முன்னேற்றத்தைப் பற்றியும் ஷெய்க் தனது தோழர்களோடு பரிமாறிக் கொண்டிருந்தார். அப்பொழுது, தொலை தூரத்தில் புழுதிகள் மேலெழுந்த வண்ணம், இவர்களை நோக்கி பெரும் படை பட்டாளமொன்று வந்துகொண்டிருப் பதை அடையாளப்படுத்திக் கொண்டிருந்தன.

ஷெய்க் தோழர்களை அவசரமாக காஷ்கர் நகரை நோக்கி வியா பார நோக்கமாக அந்நகருக்குச் செல்கின்றவர்களைப் போல் விரையுமாறு பணித்தார்.

விரைவாகவே புழுதிகள் விலகி அது ஒரு படைப்பட்டாளம் என தெளிவாகப் பறைசாற்றிக் கொண்டிருந்தன. அதன் முன்னே கம்பீரமா னதொரு குதிரை அதிலே தங்கத்திலான சேனம், அக்குதிரையின் கழுத்திலே பெறுமதியான ஆபரணங்களும் கொழுவப்பட்டிருந்தன. அதன் மீது

பெருமையோடு வீரமிக்கதொரு தளபதி; அவனைச் சூழ பலமிக்க படை வீரர்கள்; அவனது கட்டளையின் பேரிலே இவர்கள் விரைந்து கொண்டிருக் கின்றார்கள்.

இந்தப் பட்டாளம் ஷெய்கையும் தோழர்களையும் மிகவும் அண்மித்து விட்டது. உடனே அத்தளபதி கடும் சினத்தை வெளிப்படுத்தக் கூடியவாறான சமிக்ஞையை தன்னைச் சூழவுள்ளவர்களை நோக்கி விடுத்தான். உடனே, அவர்கள் ஷெய்கையும் தோழர்களையும் பலவந்த மாகவும் பலாத்காரமாகவும் இழுத்துச் சென்றார்கள்.



இவ்வாறு, கைதுசெய்யப்பட்டோர் தங்களுக்கு முன்னே சினம் கொண்டு நிற்கும் படைத் தளபதிதான் காஷ்கர் மன்னன் 'துக்லக் தைமூர் கான்' என்பதை அறிந்து கொண்டபோது என்ன ஆச்சரியம் அனைவரும் வியந்துபோனார்கள். அனைவரது கரங்களுக்கும் கால்களுக்கும் விலங்கிடு மாறு மன்னன் கட்டளை பிறப்பித்தான். தமது இரகசியப் பணியை மன்னன் அறிந்து கொண்டான் என்ற பயம் இவர்களை ஆக்கிரமித்துக் கொண்டது.

நிச்சயமாக இவர்கள் மரணத்தைக் கண்டு அஞ்சவில்லை. இறை பாதையில் மரணிப்பதே இவர்களது ஆசை. எனினும், இவர்கள் சுமந்து வந்த இப்பணியின் விளைவைப் பற்றி சிந்திக்கலானார்கள். கடும் கஷ்டத்தோடும் பொறுமையோடும் நிர்மாணிக்க முயற்சித்த இக்கட்டிடம் துகள்களாக்கப் பட்டுவிடுமோ என அஞ்சினார்கள்.

மன்னன் கைதிகளைத் தன்முன்னே ஆஜராகுமாறு பணித்தான். அவர்களில் ஒவ்வொரும் விலங்கு கிடப்பட்ட நிலையிலேயே கொண்டு வரப்பட்டார்கள். ஒன்று கால்களையும் கரங்களையும் சேர்த்து இடப்பட்டுள்ள விலங்கு அடுத்தது மன்னன், தன்னை அழிப்பதற்கான சதிகாரச் செயல்களை இவர்கள் செய்துவிட்டார்கள் என்று எண்ணக் கூடும் என்ற விலங்கு.

அனைவரும் மன்னனது முன்னிலையில் நின்றார்கள். மன்னன் கடும் சினத்தோடு,

''இந்தப் பூமியிலே நாம் மாத்திரமே வேட்டையாடுவதனை வழக்கப்படுத்திக் கொண்டுள்ளோம். எங்களுக்கு மாத்திரம் பிரத்தியேக மான இந்தப் பூமியில், சாதாரண பொது மக்களாகிய நீங்கள் எவ்வாறு நுழை வீர்கள்'' எனக் கர்ஜித்தான்.

இவ்வினா தன்னளவில் பெரும் கண்டிப்பைக் கொண்டிருந்தாலும், ஷெய்கின் உள்ளத்தில் கடும் வரட்சியுற்ற நாவுக்கு குளிர் நீர் பருகக் கிடைப்பதைப் போன்று இருந்தது.

ஷெய்க் மகிழ்ச்சியுற்றார். எனினும், கவலைகளும் தொடர்ந்திருந்தன... ஆனால், அவரைப் பீடித்த அச்சங்கள் சுக்குநூறாகின.

மன்னனது கோபம் தங்களது தஃவாவைப் பற்றி அறிந்தாலோ, அதன் விளைவுகளைப் பற்றிய அச்சத்திலோ அல்ல. மாறாக, அவன் தனக்கென வேட்டையாடுவதற்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு எல்லைக்குள் நாம் நுழைந்து விட்டதாலே என்பதனை ஷெய்க் அறிந்து கொண்டார்.

உடனே, சினங்கொண்ட அரசனை நோக்கி தாழ்ந்த குரலில்..

''நாங்கள் இந்த நாட்டுக்குப் புதியவர்கள். தடை விதிக்கப்பட்ட பூமியிலேதான் இருக்கின்றோம் என்பதனை நாம் அறியோம்'' என்றார்.

"நீங்கள் எங்கிருந்து வந்திருக்கின்றீர்கள்?"

"புஹாராவிலிருந்து"

"(வெறுப்போடு) பாரசீகத்திலிருந்தா?"

"ஆம்"

முஸ்லிம்கள் மீது வெறுப்புக் கொண்ட மன்னன்,

"பாரசீகனை விட நாய் மிகவும் பெறுமதியானது" என இகழ்ந்துரைத் தான்.

எனினும், ஷெய்க் இந்த உரையாடலினூடாக அனைத்து விடயங் களையும் பல கோணங்களில் நோக்கலானார். மன்னனைச் சந்திக்கக் கிடைத் திருக்கும் இச்சந்தர்ப்பம் மீண்டுமொருமுறை கிடைக்காது என்பதனை அறிந்து கொண்டார். எனவே, மன்னன் சத்தியத்தை செவிமடுக்க முடியாத நிலையிலிருந்தாலும்கூட இச்சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாதெனத் தீர்மானித்தார்.

தன்னை உற்சாகப்படுத்திக் கொண்டு, வீரமிக்க தொனியில் மன்ன னின் வார்த்தைகளுக்குப் பதிலளித்தார்.

"உண்மைதான். நாம் சத்திய மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளா விட் டால் நாய் எம்மைவிட மிகவும் பெறுமதியானது!!"

மன்னன் துக்ளக் தைமூரின் இதயத்தில் இத்தகைய வீரமிக்க வார்த்தைகள் இடி விழுவதைப்போல் வீழ்ந்தன. உடனே, அவரை சிறைப் படுத்துமாறு கட்டளை பிறப்பித்த மன்னன், தனது வேட்டையை முடித்துக் கொண்டு அவரைச் சந்திப்பதாகக் கூறிச் சென்றான்.

இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக இதற்குமுன் மேற்கொண்ட அனைத்து

செயற்பாடுகளுக்கும் நிகரானதொரு வெற்றியைச் சாதித்து விட்டதாக ஷெய்க் உணர்ந்தார். இப்போது, மன்னனுக்கும் ஷெய்குக்கும் மத்தியில் 'சத்திய மார்க்கத்தைப்' பற்றிய கருத்துப் பரிமாற்றத்துக்கான களம் திறந்ததாக அமையப் பெற்றது.

ஷெய்க் இத்தகைய உரையாடலுக்காக எவ்வளவு ஆசை கொண்டார்!

இஸ்லாத்தை அழகுற விளக்கக் கிடைத்தால் நிச்சயம் இஸ்லாமே வெற்றிகொள்ளும். அதை எதுவும் மிகைக்க முடியாது. ஏனெனில், இஸ்லாம் அறிவியல் மார்க்கம்; சத்திய மார்க்கம்.

இஸ்லாம் வெற்றி கொண்ட உள்ளங்கள்தான் எத்தனை! சமகாலத் துக்கும் எதிர்காலத்துக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருத்தமான மார்க்கம் இஸ்லாம். எத்தகைய வரலாற்றையும் அறியாத மனிதர்கள் கூட வரலாறு மற வாத தலைவர்களாகவும் உத்தமர்களாகவும் மாற்றிய பெருமை இஸ்லாத்திற்கே உரிய சிறப்பம்சமாகும்.

இதுவே வெற்றி மார்க்கம். இதற்கு நிகராக எந்தவொரு கொள்கை யோ கோட்பாடோ இல்லை.

ஷெய்க் நீண்ட நேரமாக ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தார். மன்னனுடனான இச் சந்திப்பையிட்டு உள்ளத்திலே சந்தோஷக் களிப்பை உணர்ந்து கொண்டார். அதேவேளை, ஷெய்கின் தோழர்கள் இச்சந்திப் பினூடாக அவர் மன்னனது கொலைக்குட்படுவாரோ என அஞ்சினார்கள்.

# மன்னனின் முன்னிலையில்... 05

சூரியன் தன் பிரிவைப் பற்றி எச்சரிப்பதற்காக தன் செந்நிறக் கதிர்களை அனுப்பி உலகிற்குப் பிரியாவிடையளித்தது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் காரிருள் படரத் தொடங்கியது. அமைதி தன் இறகுகளை நகரத்தின் மீது பரப்பிக் கொண்டிருந்தது. சிறைப்படுத்தப்பட்ட கைதிகளின் உணர்வுகள் அதிகரித்துக் கொண்டே சென்றன. காஷ்கர் நகரிலே தமது எதிர்பார்ப்புக்கள் சுக்குநூறாகியதைத் தொடர்ந்து படுதோல்வியை உணர்ந்தவர்களாக, 'தமது முடிவு என்ன?' என்பதைக் கூட அறியாதவர்களாக அவர்கள் இருந்தார்கள்.

மயான அமைதியைக் கிழித்துக் கொண்டு காலடி ஓசைகள் அவர்களது சிறைச்சாலையை அண்மித்துக் கொண்டிருந்தன. இதயங்கள் கதிகலங்கின. பயத்தினால் உடல் நடுநடுங்கியது. எனினும், ஷெய்கின் உள்ளம் எந்த மாற்றமுமின்றி பொறுமையோடு உறுதியாக இருந்தது.

காவலர்கள் மூடியிருந்த கதவைத் திறந்தனர். ஷெய்க் காவலர்களால்

கூட்டிச் செல்லப்பட்டார்.

எவ்வித சளைப்புமின்றி துணிச்சலான எட்டுக்களை வைத்து ஷெய்க் விரையலானார். காலத்தோடு போட்டிபோடுவதைப் போன்று எட்டுக்கள் நகர்ந்தன. ஏனெனில், இது அவரது எதிர்பார்ப்பு நிறைவேறும் பொன்னான வாய்ப்பு.



ஷெய்க் மன்னனின் முன்னிலையில் விலங்கிடப்பட்டவராக, பலமற்று தனிமையாக, பாதுகாப்போ துணையோ இன்றி ஆஜர்படுத்தப் பட்டார். ஷெய்கின் உணர்வுகள் இவற்றுக்கு மாற்றமாகவே அமைந்திருந் தன. அவர் பலமிக்க வல்ல அல்லாஹ்விடமிருந்து பெற்றுக் கொண்ட பலத் தையும் கண்ணியத்தையும் உணர்ந்து கொண்டார். அழிவிலிருந்து பாது காக்க இஸ்லாம் என்ற சத்திய மார்க்கமே உற்ற துணை என்பதனையும் உணர்ந்து கொண்டார்.

'அந்தச் சாதாரண பாரசீகனை மரணத்துக்கு அஞ்சாது, மன்னனுக்கு முன்னிலையில் சூளுரைக்கக்கூடிய மாவீரனாக மாற்றியது, இந்த சத்திய மார்க்கமா?!'

அவ்வாறாயின், இந்த சத்திய மார்க்கத்தில் நுழைவோரை அது உண்மையான வீரர்களாக ஆக்குவது ஏன்?! அவ்வாறு, சத்திய மார்க்கம்

என்னதான் சொல்கிறது?!"

மன்னன் ஷெய்கோடு தனிமையை அடைந்தவுடனே, தனது சிந்தனையில் படர்ந்திருந்த சத்திய மார்க்கத்தைப் பற்றிய வினாவைத் தொடுத்தான். அவ்வாறு இந்த மார்க்கத்தில் என்னதான் இருக்கின்றது! என வினாக்களைத் தொடர்ந்தான்.

ஷெய்க் தர்க்க ரீதியாகவும் அறிவுக்கு எட்டக்கூடியவாறும் இஸ்லாத்தின் போதனைகளையும் வழிகாட்டல்களையும் துணிச்சலோடும் மார்க்கப் பெருமிதத்தோடும் எத்திவைத்தார். மன்னனின் இதயம் எரிந்து மெழுகு உருகுவதைப் போன்று உருகிற்று.

ஆரோக்கியமான சிந்தனையோடு உறவாடக்கூடிய இஸ்லாத்தை அழகிய கவர்ச்சிமிகு ஆடையாக சித்திரித்தார். மேலும், பகுத்தறிவு அல்லாஹ்வால் கொடுக்கப் பெற்றதொரு கொடை, அதனைக் கொண்டு மனிதன் நேரான பாதையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மாறாக, அதனை தேக்கமடையச் செய்து, மூதாதையர்களை அவ்வாறே பின்பற்றக் கூடாது என்ற ஷெய்கின் வார்த்தைகள் இவ் அல்குர்ஆன் வசனத்தைப் பறை சாற்றுவதைப் போன்று இருந்தன.

**''அவர்கள் கூறுகின்றார்கள். நிச்சயமாக நாங்கள், எங்கள் மூதாதையர்கள் ஒரு மார்க்கத்தில் இருக்கக் கண்டோம் நாமும் அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்கின்றோம்."** [32]

தொடர்ந்தும்,

"இந்த சத்திய மார்க்கம்தான் ஒவ்வொரு மனிதனதும் ஆழ்மனதோடு இயைந்து செல்லக்கூடிய (பித்ரா) இயல்பு மார்க்கமாகும்.

**''அல்லாஹ் மனிதர்களை இறை இயல்பிலேயே படைத்தான்.''** [33]

மன்னன் இம் மார்க்கப் போதனைகளை ஆச்சரியக் கண்கொண்டு நோக்கிக் கொண்டிருக்கையில் ஷெய்க் அல்லாஹ்வின் ஞானத்தையும் அழகிய திட்டமிடலையும் உற்றுநோக்குமாறு மனிதனை வேண்டுகின்ற அல்குர்ஆன் வசனங்கள் சிலவற்றை ஓதிக் காட்டினார்.

**"நிச்சயமாக வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும், இரவு பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு உறுதியான அத்தாட்சிகள் இருக்கின்றன."**(34)

**"அவன்தான் வானங்களையும் பூமியையும் ஓர் ஒழுங்கமைப் பில் படைத்தான்..."**(33)

பின்னர், ஷெய்க் இவ்வசனங்களுக்கு சூரியனைச் சூழவே புவி சுற்றுகின்றது என்ற கண்டுபிடிப்பை மையமாக வைத்து விளக்கமளித்தார்.

ஷெய்க் ஜமாலுத்தீன் அல்குர்ஆனின் போதனைகளுக்கும் அறிவியல் கண்டுபிடிப்புக்களுக்கும் மத்தியில் இருக்கின்ற பொருத்தப் பாட்டை விளக்கி முடிவதற்குள் மிகவும் கூர்ந்து மௌனமாக செவிமடுத்துக் கொண்டிருக்கின்ற மன்னனின் முகத்தில் நிரம்பி வழிந்த சந்தோசத்தின் அடையாளங்களைக் கண்டுகொண்டார். தொடர்ந்தும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியவராக ஷெய்க் தனது கருத்துக்களை விளக்கினார்.

இத்தகைய இறை வல்லமைக்கு முன்னால் தமது பலத்தாலும் அதிகாரத்தாலும் பெருமையடித்தவர்களுக்கு அவனால் இறக்கப்பட்ட தண்டனைகளையும் விளக்கிச் சென்றார்.

பின்னர், கீழ்வரும் வசனங்களால் தன் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

**"உங்களுக்கு முன்னரும் பல சமூகங்கள் எமது அத்தாட்சிகளைப் பொய்ப்பித்தனர். எனவே, நீங்கள் பூமியில் பரந்து சென்று அத்தகைய பொய்யர்களின் முடிவு என்னவாயிற்று என்பதனைப் பாருங்கள். நிச்சய மாக, இந்தக் குர்ஆன் மக்களுக்கு சத்தியத்தைத் தெளிவாக விளக்கக்கூடிய**

**தாகவும், இறைவனை அஞ்சுவோருக்கு நேர்வழி காட்டக்கூடியதாகவும், நல்லுபதேசமாகவும் இருக்கின்றது."** [36]

**"நீங்கள் பூமியில் பரந்து சென்று, எமது அத்தாட்சிகளைப் பொய்ப்பித்தவர்களின் முடிவு என்னவாயிற்று என்பதனைப் பாருங்கள்."**[36]

**"அவர்கள் பூமியில் சென்று இவற்றைப் பார்க்கவில்லையா? அவ்வாறு பார்ப்பார்களாயின் சிந்திக்கக்கூடிய உள்ளங்களும் நல்லுபதேசத்தை செவிமடுக்கக்கூடிய செவிகளும் அவர்களுக்கு உண்டாகியிருக்கும். நிச்சயமாக, அவர்களுடைய பார்வைகள் குருடாகவில்லை. மாறாக, அவர்களது இதயங்களே குருடாகி விட்டன."**[36]

*ஷெய்க் ஜமாலுத்தீன் ஆழ்ந்த கவனத்தோடு செவிமடுக்கின்ற மன்னனை உற்றுநோக்கினார். அவனது முகத்தில் குர்ஆனிய வசனங்களை செவிமடுத்ததால் ஏற்பட்ட தாக்கங்கள் தென்பட்டன. உடனே, ஷெய்க் முன்னைய சமூகங்களுக்கு ஏற்பட்ட அத்தகைய தண்டனைகளுக்கான காரணம் இறைவனுக்கு மாறுசெய்து, அவனைப் பொய்ப்பித்தமையே என்பதனை வலுப்படுத்திக் கூறினார். பின்னர் கீழ்வரும் வசனத்தை ஓதிக் காட்டினார்:*

**"மேலும் அவ்வூர் வாசிகள் அல்லாஹ்வை ஈமான் கொண்டு, அவனுக்கு அஞ்சினால் நாம் அவர்களுக்கு வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் அருட்கொடைகளைத் திறந்து கொடுத்திருப்போம். எனினும், அவர்கள் தேடிக் கொண்டதன் விளைவாகவே, நாம் அவர்களைத் தண்டித்தோம்."** [39]

*ஷெய்க் ஜமாலுத்தீன் சற்று நேரம் மௌனமாக இருந்தார். இதனூடாக மன்னனின் உள்ளத்திலுள்ளவற்றை வெளிப்படுத்த அவகாசம் வழங்கினார். எனினும், மன்னன் சிந்திக்காது இந்த சத்திய மார்க்கத்தில் நுழைவது பற்றிய தனது கருத்தை வெளிப்படுத்த விரும்பவில்லை.*

*ஷெய்ஹ் தன்னுள் இவ்வசனங்களை நினைவுபடுத்திக் கொண்டார்.*

**"இஸ்லாத்தில் நிர்ப்பந்தமில்லை. நேர்வழி, வழிகேட்டி லிருந்து (பிரித்துத்) தெளிவாக்கப்பட்டு விட்டது."**[40]

*தொடர்ந்தும் பூரண அமைதி நிலவியது. மன்னன் இந்த மார்க்கத் தைப் பற்றி சிந்தித்தவனாகவே இருந்தான்:*

*"நிச்சயமாக இது பகுத்தறிவு ஏற்கின்ற நடைமுறைக்குப் பொருத் தமான மார்க்கம்; மனிதனுக்கு விமோசனத்தையும் சந்தோஷத்தையும் வழங்கும் மார்க்கம்; மனித ஆன்மாவை அதன் இயல்பிலேயே (பித்ரா) விட்டுவிட்டால் அது அன்புகொண்டு இளைப்பாறுகின்ற மார்க்கம்.!!*

*பகுத்தறிவு கொடுக்கப்பெற்ற மனிதன் சிலைகளையோ அல்லது தம்மைப் போன்று உண்டு, உறங்குகின்ற மனிதனையோ கடவுளாக ஏற்றுக் கொள்வதற்கு அவனுக்கு என்ன நடந்து விட்டது...!*

*நிச்சயமாக இந்தச் சிலைகள் எவ்விதப் பயனையோ தீங்கையோ விளைவிக்க முடியாத கற்கள்; அது மட்டுமா...? அவை தமக்கே ஒரு பிரயோசனத்தை ஈட்டிக் கொள்ளவோ, அல்லது ஒரு தீங்கை விட்டு தம்மைத் தடுத்துக் கொள்ளவோ முடியாதவை; அவற்றை மனிதன் எப்படி வணங்க முடியும்? எவ்வாறு அகிலங்களைப் படைத்து, அதிலே மனிதனை உயர்ந்த சிருஷ்டியாகப் படைத்து, போஷித்து, பராமரித்து வருகின்ற ஏக இரட் சகனை மறந்து வாழ முடியும்?*

*உண்மையிலே இந்த மார்க்கம்தான் சத்திய மார்க்கம்; இந்த சத்தியப் பாதையை விட்டும் மனிதன் விலகிச் செல்லும்போதே அவனது கௌரவம் அழுக்கடைகின்றது."*

*மன்னனது உடலை ஆட்கொண்ட சிறியதொரு நடுக்கத்தின் வெளிப்பாடுகள் தென்பட்டன. எனினும், மன்னன் தனது உள்ளத்தோடு தொடர்ந்தும் உரையாடலானான்.*

''இந்த மார்க்கத்தைப் பற்றி எதுவும் அறியாத ஆளுநர்கள், தலைவர்கள் என்னைப் பற்றி என்ன கூறுவார்கள்?

அப்போது, அவர்களுக்கு முன்னிலையில் எனது நிலைப்பாடு சங்கடமாக இருக்கும் அல்லவா?

சிலவேளை, எனக்கு முன்னர் இஸ்லாத்தை ஏற்ற மன்னர்களுக்கு நடந்ததைப் போன்று என்னையும் ஆட்சியிலிருந்து துரத்திவிட முயற் சிப்பார்களே..?'' மன்னர் 'துக்ளக் தைமூர்கான்' தன்னைத் தானே வினவிக் கொண்டார்.

"எனினும் இந்த ஷெய்க் எத்திவைத்த சந்தேகமற்ற உண்மைகளை நான் விட்டுவிடுவதா? தெளிவான பகற்பொழுதில் கண்ட சூரியனைப் போன்ற இந்த யதார்த்தங்களைக் காணாதது போல் நடிப்பதா...?

நிச்சயமாக, எனது அனைத்துப் படைத் தலைவர்களும் என்னை விரும்புகிறார்கள். எனக்காக தங்களையே அர்பணிக்கத் தயாரானவர்களாக இருக்கின்றார்கள். ஏன், நான் அவர்களுக்கு இஸ்லாத்தை எத்திவைத்து சத்திய மார்க்கத்தின் பால் அழைக்கக் கூடாது?''

காஷ்கர் நகரிலுள்ள அவரது சாம்ராஜ்யம், அவரது பாட்டன் ஜகதாய மன்னன் நிறுவிய பாரிய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியே. காலப் போக்கில் அது பல சாம்ராஜ்யங்களாகப் பிளவுபட்டது. சிறு சிறு குட்டி சாம்ராஜ்யங்கள் தோற்றம் பெற்றன. அவற்றில் மிகப் பெரியதுதான் மன்னன் 'துக்ளக் தைமூர்' ஆள்கின்ற காஷ்கர் சாம்ராஜ்யம். மன்னன் 'துக்ளக் தைமூர்' நீண்ட நாட்களாக இவ் அனைத்து சாம்ராஜ்யங்களையும் தனது ஆளுகையின் கீழ் ஒன்றுபடுத்த வேண்டுமென கனவு கண்டு கொண்டிருந்தார். இதன் காரணமாக, இந்த மார்க்கத்தில் நுழைந்தால் தனது உள்ளத்தில் இருக்கின்ற கலையாத கனவை நிறைவேற்ற முடியாது போய்விடுமோ என அஞ்சினார்.

எனினும், இந்த மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற

உறுதியான தீர்மானம், தான் கண்ட கனவுகளுக்கு முன்னால் ஆட்டம் காண வில்லை. அவற்றையெல்லாம் தனது பாதத்துக்குக் கீழே தூக்கி எறிந்தார். எனினும், அவரது உள்ளம் திருப்தி காண்கின்றதொரு புதிய சிந்தனையோடு இந்த மார்க்கத்தில் நுழைவதற்கு உறுதியானதொரு தீர்மானத்தை எடுத்தார்.

இரு சாராருக்கு மத்தியிலும் நிலவிய மௌனத்தினூடாக இரு வரினதும் பார்வைகள் சங்கமித்தன. ஷெய்க் தனது உள்ளம் திருப்தியடை வதற்காக வேண்டி, மன்னனின் நிலைப்பாட்டை அறிய மிகவும் அவாவுற் றார். எனினும், ஷெய்க் இக்கணப் பொழுதுகளில் உள்ளத்தால் அல்லாஹ் விடம் மன்னனுக்காகப் பிரார்த்தித்தவராகவே இருந்தார்.

மன்னன் 'துக்ளக் தைமூர்கான்' தனது உறுதியான தீர்மானத்தைத் தெரிவித்தவராக ஷெய்கை நோக்கி,

''கண்ணியமிக்க ஷெய்க்...! சத்திய மார்க்கத்தைப் பற்றி நீங்கள் கூறியவற்றிலிருந்து பல யதார்த்தங்களை அறிந்து கொண்டேன். இந்த மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள நான் விரும்புகிறேன்.

இந்த சத்திய மார்க்கத்துக்காக எனது ஆட்சி, அதிகாரம், வாழ்வு அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராகவே உள்ளேன்.

எனினும், இந்த மார்க்கத்தின் நலனுக்காக எனது மூதாதையர்களின் பிளவுற்ற அனைத்து நாடுகளையும் கொண்ட ஐகதாய சாம்ராஜ்யத்தை நிறுவிய பின்னர், இந்த மார்க்கத்தை நான் தழுவியதைப் பற்றி பகிரங்கப்படுத் துவது மிகவும் சிறந்ததெனக் கருதுகின்றேன். அப்போது, எனது பிரவேச மானது மக்கள் மத்தியில் பாரிய தாக்கமாகவும் அதிகம் பிரயோசனமான தாகவும் இருக்கும்'' எனக் கூறினார்.

ஷெய்கின் உள்ளம் மகிழ்ச்சிக் களிப்பில் குதூகலித்தது. மன்னனது ஆழ்ந்த சிந்தனையையும் தூரநோக்கையும் கண்டு ஷெய்க் வியந்து போனார்.

மன்னனைப் போற்றினார்; மன்னனது கருத்தில் உடன்பட்டார்.

தனது மூதாதையர்களின் பாரிய சாம்ராஜ்யத்தை நிறுவும் மன்னனின் முயற்சி யதார்த்தமாகும்போது தான் திரும்பி வருவதாக வாக்களித்தார் ஷெய்க்.

அரசவையை விட்டு அவசரமாக வெளியேற இருக்கின்ற ஷெய்கி டம் மன்னன் வார்த்தைகளால் விரைந்தான்.

''கொஞ்சம் தாமதியுங்கள்! சிறையிலே இருக்கின்ற உங்களது தோழர்களை மறந்து விட்டீர்களா?

“ஓ... அவர்களை மாத்திரமல்ல, என்னையே மறந்து நிற்கின்றேன்.”

மன்னன் கைகளைத் தட்டினான். பணியாளர்கள் அவர் முன்னே விரைந்தனர். ஷெய்கின் தோழர்களை சங்கையோடு அழைத்து வருமாறு கட்டளை பிறப்பித்தான்.

# மன்னனின் சதி! 06

காவலர்கள் சிறைவாசலை நோக்கி திறப்புக்களோடு விரைந்தார் கள். ஷெய்கோடு சென்ற காவலர்கள், ஷெய்கின்றி திரும்புவதைக் கண்ணுற்ற சிறைக் கைதிகளான ஷெய்கின் தோழர்களுக்கு அச்சம் மெய் சிலிர்க்க வைத்தது. அவர்களது உள்ளங்களை ஆக்கிரமித்திருந்த "தங்களது கதி என்னவோ...? என்ற ஐயங்களுக்கு தெளிவு காணும் நேரம் வந்து விட்டது என்பதை உணர்ந்து கொண்டார்கள். அவ்வாறே, இந்தக் காவலர்கள் தங்களை மீண்டும் மீள முடியாத ஓர் இடத்தை நோக்கிக் கூட்டிச் செல்லவே வந்திருக்கின்றார்கள். அவ் இடத்துக்கே ஷெய்க் போயிருக்கின்றார் என்றவாறு அவர்கள் கற்பனைப் பள்ளத்தாக்கில் அலைந்து திரிந்தார்கள்.

எனினும், காவலர்கள் அவர்கள் மீது வைத்திருந்த மதிப்பும் கண்ணி யமும் அவர்களைப் பீடித்த கவலைகளைத் தணிக்கும் முயற்சியில் சிறிதளவும் பங்கு வகிக்கவில்லை. ஏனெனில், அது அரசனது மோசடியும் தந்திரமுமே. இதனூடாக மோசமானதொரு வேதனை காத்திருக்கின்றது என்றே எண்ணி னார்கள்.

எனினும், உள்ளத்திலிருந்த உறுதியான ஈமான் இவ் அச்சத்தை படிப் படியாக எதிர்கொண்டது. அனைவரும் அல்லாஹ்வின் மீது பொறுப்புச் சாட்டியவர்களாக அவனை நினைவுகூர்ந்தார்கள். ஆரம்பத்தில் ஷெய்கிடம் வாக்களித்த இவ்வார்த்தைகளை அடிக்கடி மீட்டிக் கொண்டார்கள்.

**''இறைவா! நீதான் எனது இலக்கு. உனது திருப்தியே எனது வேண்டுகோள்.'**

*இவ்வாறு, தம்மை அல்லாஹ்வுக்காக விற்றுவிட்டோம் என்பதனையும் நினைவுபடுத்திக் கொண்டார்கள். எனவே, பயங்கரமான இந்நிலையையிட்டு பொறுமையோடு இருந்தார்கள். தாம் எதிர்பார்த்திருக்கின்ற மோசமான முடிவை நோக்கி பின்வாங்காதவர்களாக உறுதியான பலமான எட்டுக்களால் நடை போட்டார்கள்.*

*தங்களுக்கு முன்னால் இருக்கின்ற மரணத்தைக் கண்டு அவர்கள் அஞ்சவில்லை. மரணம் முஃமினின் அவா; சுவனத்துக்கும் நிரந்தர வாழ்வுக்குமான நல்லடியார்களின் பாதை.*

*ஷெய்குடைய பாதையிலேயே இவர்களும் செல்லா விட்டால் வாழ்ந்துதான் என்ன பயன்!?*

*அனைவரும் அரசவையை நோக்கிக் கொண்டு செல்லப்பட்டார்கள். பலமான உள்ளத்துடனும் உறுதியான துணிவோடும் அரசனது முன்னிலையில் நுழைந்தார்கள்.*

*என்ன ஆச்சரியம்!*

*ஷெய்க் இன்னும் உயிருடனே இருக்கின்றார். அது மாத்திரமா, மன்னனது வலப்புறத்தில் சங்கைப்படுத்தப்பட்டவராகவும் அமர்ந்திருக்கிறார்.*

*சொற்ப நேரம் அனைவரும் கற்களால் சிலைகளாய் மாறினார்கள். அனைவரையும் தனக்கு அருகாமையில் வந்து அமருமாறு மன்னன் விடுத்த சங்கையான கட்டளையை செவிமடுத்தபோது அவர்கள் வியந்து போனார்கள்.*

*உடனே, தமது பயத்தையெல்லாம் ஒருபுறம் வைத்துவிட்டு மன்னனை வாழ்த்தினார்கள். அவனது முன்னிலையில் அமர்ந்து கொண்டு சுதந்திரக் காற்றை சுவாசித்தார்கள். அத்தோடு வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டார்கள்.*

# மீளும் பாதையில் கார் மேகங்கள் 07

அதிகாலையிலேயே, தமது இரை தேடும் முயற்சியில் இதமான தென்றலை சுவாசித்து புவிக் கோளத்தில் உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் பிரசவிக்க வரும் சுட்டெரிக்காத சூரிய ஒளிக் கதிர்களில் இன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கும் சிறு குருவிகளின் கீச்சிடலோடும், பனித் துளிகள் நீராடிய மலர் மொட்டுக்களின் விழிப்போடும், மன்னனதும் சில அமைச்சர்களினதும் இதயங்களில் சத்திய மார்க்கத்தை விதைத்துவிட்டு, அவ்விதை மொட்டாக வளர்ந்து, பூப் பூத்து அதன் நறுமண வாசனையை மக்கள் நுகர்ந்து, சாம்ராஜ்யம் முழுவதும் சத்திய மார்க்கத்தின்பாலான அழைப்போசை ஒலிக்கும் வரை, அதனைப் பேணிப் பாதுகாக்குமாறு வல்ல இறைவனிடம் வேண்டியவராக ஷெய்க் தனது தோழர்களோடு காஷ்கர் நகரை விட்டும் புறப்பட்டார்.

இக் கூட்டம் காடு மேடுகளையெல்லாம் கடந்து தனது தாய் நாட்டை நோக்கிப் புறப்பட்டது. பிரகாசமான எதிர்பார்ப்புக்கள் அவர்களின் இதயங்களில் வேரூன்றியிருந்தன. அழகிய கனவுகள் அவர்களைக் களிப்புறச் செய்தன.

திடீரென, ஷெய்க் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிப்போனார். அவ்வேளை அவரது தோழர்கள் தீர்க்க முடியாத விடுகதைகளைக் கண்டு கொண்டதைப் போல் குழம்பிப் போனார்கள்.

மன்னன் துக்ளக் தைமூர்கானுடன் மேற்கொண்ட உடன்படிக் கையைப் பற்றி ஷெய்க் சிந்திக்கலானார். அவர்களது உடன்படிக்கையைப் பலப்படுத்தக் கூடியவாறு தன்னால் என்ன செய்யலாம்? தற்போது தனது பணி என்ன? இதற்கு ஷெய்க் தன் முன்னே அல்லாஹ்விடம் மன்றாடிப் பிரார்த்திக்கும் ஒரேயொரு வழியையன்றி வேறு எதனையும் கண்டுகொள்ள வில்லை.

ஷெய்கின் தோழர்களைப் பொறுத்தவரையில் மன்னனது நிலைப்பாட்டில் ஏற்பட்ட சடுதியான திடீர் மாற்றம் அவர்களது சிந்தனை களை ஓரளவே ஆட்கொண்டிருந்தது. ஏனெனில் மன்னன் இஸ்லாத்தை ஏற்றிருந்தால் அதனை அவர் பகிரங்கப்படுத்தியிருப்பார். எனினும், அவ்வாறு நிகழவில்லை.

அதேவேளை, மன்னன் இஸ்லாத்தை ஏற்ற நிகழ்வை இரகசியமாக வைத்துக் கொண்டதைப் பற்றியோ ஷெய்க் அவர்களுக்கு ஏதும் அறிவிக்க வில்லை.

ஷெய்க் மன்னனோடு செய்துகொண்ட உடன்படிக்கை விவ காரத்தை தனது ஆழ்மனதில் அமானிதமாக வைத்து, அது கெட்டுவிடாதிருக்க அதனைச் சூழ மறைப்பு எனும் திரையுமிட்டு, அதனை இரகசியமாகப் பேணிவந்தார். இதன் காரணமாக ஷெய்கின் தோழர்கள் மன்னன் துக்ளக் தைமூர் கான் தங்களோடு நடந்து கொண்ட அழகிய முறைக்கான காரணங்களைத் தேடும் முயற்சியில் குழம்பிப் போனார்கள். அது மாத்திரமின்றி, மன்னனுக்காக ஷெய்க் வேண்டிய பிரார்த்தனையை செவியுற்றபோது குழப்பம் இன்னும் அதிகரித்தது.

இக் கூட்டம் சொந்த நகரான புஹாராவை நோக்கி மேற்குத் திசை யாக நகர்ந்தது. அவர்கள் தங்களது நகரை நெருங்க நெருங்க உள்ளத்தில்

மறைந்திருந்த குடும்பப் பாசமும் பிள்ளைகளின் மீதான அன்பும் மேலெழுந்தன.

புஹாரா நகரைச் சென்றடையும் வரையில் புகைந்து கொண்டிருந்த இப்பாசம் நகரை அடைந்ததும் சுடர் விட்டுப் பிரகாசித்தது. அனைவரும் பொறுமையை இழந்து விட்டார்கள். இப்பொழுது வீடு செல்வதற்கு ஷெய்கின் அனுமதியை ஆசையோடு எதிர்பார்த்திருந்தார்கள்.

எதிர்பார்த்திருந்த வார்த்தையை அவர்கள் செவிமடுத்தபோது அவர்கள் ஒவ்வொருவரும் ஷெய்குக்கு பிரியாவிடையளித்தவர்களாக தங்களது வீடுகளை நோக்கி விரைந்தார்கள். கஷ்டங்களுக்குப் பின் மீண்டும் அவர்கள் தங்களது பிள்ளைகளையும் குடும்பத்தினரையும் சந்திக்கக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கினார்கள்.

# துயர வானில்... 08

பாதையில் சுமையான எட்டுக்களை சுமந்தவராக ஷெய்க் வீட்டை நோக்கி நடந்தார். உள்ளத்தில் கவலைக்கு மேல் கவலைகளை நிரப்பிய ஆழமானதொரு சிந்தனை அவரது மென்மையான நடையைக் கூட தடுத்துக் கொண்டிருந்தது.

''துக்ளக் தைமூர்கான் தனது உடன்படிக்கைக்கு விசுவாசமாக நடப்பாரா? அதனை உண்மையிலேயே நிறைவேற்றுவாரா.?

- அவ்வாறு, அவர் உண்மையிலே விசுவாசமாக நடப்பார் என்றிருந் தாலும் அந்த எண்ணம் அவருக்குத் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்.?

- அது எவ்வாறு இருந்தாலும், தனது மூதாதையர்களின் சாம்ராஜ் யத்தை நிறுவும் அவரது கனவு நிறைவேறும் என்பதற்கோ எவ்வித உத்தரவா தமும் இல்லையே.!

இத்தகைய அனைத்து உணர்வுகளுக்கும் ஐயங்களுக்கும் ஏக தீர்வாக இரகசியமாக அல்லாஹ்விடத்தில் மன்றாடுவது என முடிவெடுத்தார் ஷெய்க் ஜமாலுத்தீன்.

*"எனதிறைவனே! நீ எனது இரகசியத்தையும் பரகசியத்தையும் அறிகின்றாய்! என்னைப் பற்றி என்னை விடவும் மிகவும் அறிந்தவன் நீயே!*
*நான் பட்ட கஷ்டங்களை நீ அறிவாய்!*
*எனக்கு நேர்ந்த அபாயங்களை நீ அறிவாய்!*
*இவையனைத்தும் உனக்காகவே!*
*உனது மார்க்கத்தை மேலோங்கச் செய்யவே!*
*உனது மார்க்கத்துக்கு உதவி செய்!*
*ஜமாலுத்தீனுக்கல்ல!*
*இரக்க தயாளனே!*
*வானங்களின் இரட்சகனே!*
*உனது மார்க்கப் பிரசாரத்தை சுமக்க நான் பூரண தகுதிவாய்ந்தவனல்ல... நான் உன்பால் தேவையுடையவனாக இருக்கின்றேன்!*
*உனது ரஹ்மத்தை எதிர்பார்க்கின்றேன்!*
*உள்ளங்களை மாற்றக்கூடியவனே!*
*எமது உள்ளங்களை உனது மாரர்க்கத்தில் ஸ்திரப்படுத்துவாயாக!*
*ஒரு சமிக்ஞையினாலேயே அனைத்தையும் மாற்றக்கூடியவனே!*
*உனது சட்டம் நிலைபெற அவருக்கு உதவி செய்வாயாக!*
*இறைவா! இதுவே எனது எதிர்பார்ப்பு! இதுவே எனது கோரிக்கை! நீதான் கூறியிருக்கின்றாய். உனது வார்த்தை உண்மையானதே...*

*"என்னிடம் பிரார்த்தியுங்கள், நான் உங்களுக்குப் பதிலளிக் கின்றேன்."(42)*

*தைமூர்கானின் உள்ளத்தை உனது மார்க்கத்தில் ஸ்திரப்படுத்துவாயாக...!*

*உனது நேரான பாதையை அவருக்குக் காட்டுவாயாக...!*
*உனது வழிகாட்டலை வழங்குவாயாக...!*
*பிரார்த்தனைகளை அங்கீகரிப்பவனே...!*
*அடியார்களின் இரட்சகனே...!*

இவ்வாறு பிரார்த்தித்தவராக பாதைவழியே சென்று கொண்டிருந்த ஷெய்க் 'தான் பள்ளிவாயலை நெருங்கிவிட்டதை உணர்ந்து கொண்டார். தூய்மையான அழைப்பாளர்களான முஃமின்களால் நிரம்பி வழிந்த அப் பள்ளிவாசலைக் கண்ணுற்ற ஷெய்கின் முகம் பிரகாசித்தது.

ஷெய்க் பள்ளியினுள் நுழைந்து நிதானமாக இரண்டு ரக்அத்து களைத் தொழுதார். பின்னர் தன் சகோதரர்களை நோக்கித் திரும்பினார். அனைவரும் ஷெய்கின் ஸலாத்தை எதிர்பார்த்தபோது, சந்தோஷத்தால் குதூகலித்தவர்களாக அதற்குப் பதிலளித்தார்கள். ஷெய்கின் வருகையை முன்னிட்ட சந்தோஷத்துக்கும் வாழ்த்துக்கும் ஷெய்க் அவர்களுக்கு நன்றி செலுத்தினார். உடனே, அதிர்ஷ்டவசப் பயணத்தையும் அதனூடாக அடைந்து கொண்ட பிரமாண்டமான விளைவைப் பற்றியுமான சிறியதொரு விளக்கத்தை அவர்களது நிலைமை வேண்டி நின்றது.

ஷெய்க் தனது பயணத்தினூடாக அடைந்து கொண்ட விளைவைப் பற்றி அவர்களுக்கு என்ன கூறுவது என சிந்தித்தவராக இருந்தார்.

அவர் உண்மையைக் கூறி விடுவாரா? அவருக்கும் மன்னன் துக்ளக் தைமூருக்கும் மத்தியிலுள்ள இரகசியத்தை வெளிப்படுத்துவாரா? அவ்வாறு வெளிப்படுத்தினால் அவரது முயற்சிகளின் விளைவு பாழ்பட்டு விடுமே...! எதிர்பார்க்கின்ற இஸ்லாமிய சுபிட்சம் பெரும் அபாயத்துக்குட்பட்டு விடுமே!

ஷெய்க் அந்த இரகசியத்தை வெளிப்படுத்துவதில்லை என தனக்குள் உறுதிபூண்டார். தன்னோடு இப் பணியை மேற்கொள்ளச் சென்ற சகோதரர்கள் கூட இதனைப் பற்றிய உண்மையை அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள். இவர்கள் கண்டதெல்லாம் மன்னன் தங்களை மன்னித்து

கண்ணியப்படுத்தினான்; சிலவேளை மன்னன் இந்த மார்க்கத்தின் பால் கவரப்பட்டிருக்கலாம் என்பதே. ஆனால், மன்னன் தனது மூதாதையர்களின் சாம்ராஜ்யத்தை நிறுவிய பின்னர், இந்த மார்க்கத்தைப் பகிரங்கப்படுத்து வான் என்ற உடன்படிக்கையைப் பற்றி அவர்கள் சிந்திக்கவே இல்லை என்ப தனை விட அவ்வாறான எண்ணமும் கூட அவர்களது சிந்தனையில் தோன்றி யிருக்கவில்லை.

ஷெய்க் தொடர்ந்தும் சிந்தித்தவராக, தனது உள்ளத்தோடு உரையா டினார்.

“நான் ஈட்டிக் கொண்ட வெற்றியைப் பற்றி பேசவில்லையாயின், எதனைப் பற்றி பேசுவது? பாதையில் கண்ட காட்சிகளைப் பற்றிப் பேசுவதா அல்லது எதிர்கொண்ட அசௌகரியங்களைப் பற்றிப் பேசுவதா அல்லது அரசனும் அவனது படையினரும் எம்மை சங்கைப்படுத்தியதைப் பற்றி பேசுவதா?

நிச்சயமாக, நாம் இவற்றுக்காகச் செல்லவில்லை. இவற்றைப் பற்றி நான் பேசினால் இந்த முஃமின்களிடத்தில் அதனைவிடப் பெரியதொரு தோல்வி இருக்கவே இருக்காது.

அவ்வாறாயின், எதைப் பற்றிப் பேசுவது!”

ஷெய்க் பேசுவதைவிட மௌனத்தையே மேன்மையாகக் கருதினார். அவ்வாறு அதனைப் பேசிப் பாழ்படுத்தி இஸ்லாத்தின் வளர்ச்சியை குன்றச் செய்வதைவிட அவ்வாறே அதனை மறைத்து வைப்பதை மேலாகக் கருதினார்.

இரவின் அமைதியோடு ஷெய்கின் மௌனமும் நீடித்தது. அங்கே, அவர்கள் அமைதி என்ற போர்வையை கிழித்துச் செல்கின்றதோர் அசைவை உணர்ந்து கொண்டார்கள். அதனை உற்று நோக்கினார்கள். ஷெய்க் மஜ்லிஸை விட்டும் எழுந்து திரும்பிச் செல்லத் தயாராகின்றதைக் கண்டார்கள். உடனே, அனைவரும் எழுந்து நின்றார்கள். கடுமையான

பிரயாணக் களைப்பின் காரணமாக அல்லாஹ் அவருக்கு பலத்தையும் ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டுமென பிரார்த்தித்து அவருக்குப் பிரியாவிடையளித்தார்கள்.

அவர்கள், தாம் ஷெய்கை கஷ்டப்படுத்திவிட்டதாகவே உணர்ந் தார்கள். எனவே, ஒவ்வொருவரும் தன்னைத்தானே கண்டித்தவர்களாக கைசே சேதப்பட்டார்கள்.

ஷெய்க் குழப்பநிலையில் வீடு திரும்பினார். தனது முகத்தில் கவலையின் ரேகைகள் தென்பட்டபோதிலும் தனது குடும்பத்தினருக்காக செயற்கையாக உருவகித்த புன்னகைகூட அவருக்குப் பிரயோசனமளிக்க வில்லை.

மகன் ரஷீதுத்தீன் தனது தந்தையின் நிலைமையைச் சரியாக அறிந்து கொண்டார். அவரை அண்மித்து, அவருக்கு ஓய்வளிக்கக்கூடிய வசதிகளைத் தயார்படுத்திக் கொடுத்தார்.

நீண்ட நாட்களாக இழந்த ஓய்வில் கொஞ்சத்தையேனும் அடைந்து கொள்வதற்காகவும் அசௌகரியமான பிரயாணக் காலத்தில் இழந்த இனிய கனவுகளுக்குப் பின் இப்பொழுது நித்திரையின் சுவையை அனுபவிப்பதற் காகவும் வழிப்பறிக் கொள்ளையர்களின் அச்சுறுத்தல்கள், பாதைப் பயங்கரங்கள் என்பவற்றையெல்லாம் தனது எண்ணத்திலிருந்து அகற்றி, இத்தகைய இடையூறுகளை விட்டும் நீங்கிய நீண்டதொரு தூக்கத்ினூடாக தனது விழிகளுக்கு ஓய்வளிப்பதற்காகவும் ஷெய்க் படுக்கை விரிப்பை நோக்கித் தஞ்சம் புகுந்தார்.

எனினும், இவற்றில் எதனையும் அவர் அடைந்து கொள்ளவில்லை. கண்ணிலிருந்த சிறுதூக்கமும் பறந்தது. விரிப்பில் நித்திரையின்றி நீண்ட நேரமாகப் புரண்டு தத்தளித்தார்.

மன்னன் துக்ளக் தைமூருக்கும் தனக்கும் மத்தியில் நிகழ்ந்த உடன்படிக்கையைப் பற்றிச் சிந்தித்த நிலையில் தூக்கம் எவ்வாறு அவரை

ஆட்கொள்ளும்?!

அதனை இரகசியமாகவே வைப்பதா அல்லது தனக்கு மிகவும் நெருக்கமான சிலருக்கு அதனைப் பற்றித் தெரிவிப்பதா என்பதில் அவர் குழம்பிப் போனார்.

இறுதியில், அதனைத் தனக்குள் இரகசியமாக வைத்துக் கொள்வதே சிறந்தது எனத் தீர்மானித்தார்.

இஸ்லாத்தின் நிலைப்பாடும் இரகசியம் பரப்பப்படக் கூடாது என்பதே; இருவரைக் கடந்த அனைத்து இரகசியங்களும் பரகசியமே!

அவரது உள்ளத்தின் எழுந்த உறுதியான இத்தீர்மானம் இரகசியத்தை மறைப்பதற்கும், அதனை தனது நெருங்கிய ஆருயிர் நண்பனுக்குத் தெரிவிப்பதற்கும் மத்தியில் நிகழ்ந்த பயங்கர உள்ளப் போராட்டத்தின் விளைவே!

எனினும், மனிதனுக்கு நிகழக்கூடிய மரண சிந்தனைகள் ஷெய்கின் உள்ளத்திலும் தோன்றவே, அவ்வாறு தனக்கும் ஏற்பட்டால் தன்னோடு சேர்த்து அந்த இரகசியமும் புதைக்கப்பட்டு விடுமோ! அது இரகசியம் என்ற வரையறையை விட்டும் வெளிச் செல்லாதோ? என்றெல்லாம் அஞ்சினார். அதேவேளை, துக்ளக் தைமூர்கானின் வாக்கு நிறைவேற்றப் படுவது, அதனை ஞாபகப்படுத்தி அவரது உறுதியை உயிர்ப்பிப்பதிலேயே தங்கி இருக்கின்றது. அவ்வாறு அழகிய முறையில் அதனை எத்திவைக்க முடியாது போனாலும், இந்த உடன்படிக்கை ஏட்டுச் சுரக்காயாக மாத்திர மின்றி, எவ்வித அடையாளமுமற்ற, காற்றில் தூவிய வார்த்தையாகவே இருக்கும் என்ற சிந்தனைகள் ஷெய்கின் மனதுக்குள் ஊசலாடின.

ஷெய்க் தனது உள்ளத்தில் நீண்டதொரு போராட்டத்தை நிகழ்த்தியவராகவே நாட்களைக் கழித்தார். இறுதியாக தனக்கும், தனது உள்ளத்துக்கும் மத்தியில் நிகழ்ந்த பாரிய போராட்டத்துக்கோர் உறுதியான முடிவு கட்டினார். அதனை எவருக்கும் அறிவிக்காமல் தனது திட்டத்தை செயல்படுத்தினார்.

# பாதையின் இயல்பு 09

ஷெய்க் தனது இலக்கை அடிக்கடி மீட்டிப் பார்த்தவராக, அயராத முயற்சியோடும் சளைக்காத உறுதியோடும் மூன்று வருடங்களைக் கழித்தார். இதற்கு மத்தியில் அவர் காஷ்கர் நகரிலிருந்து வெறும் கையோடு திரும்பியதை பொறாமைக்காரர்கள் அவரைக் கேலிக்கும் பரிகசிப்புக்கும் உட்படுத்தியது மாத்திரமின்றி, தஃவாப் பாதையில் செல்வோரை என்றும் பின்தொடரக்கூடிய அனைத்து விதமான ஏச்சுக்கும் பேச்சுக்கும் அவரை உட்படுத்தினார்கள். இவையனைத்தும், ஷெய்க் கடும் கஷ்டங்களை எதிர்கொண்டு மேற்கொண்ட தஃவாப் பிரச்சாரத்தினூடாக பெரும் தொகை மங்கோலியர்களை இந்த மார்க்கத்தில் நுழையவைத்து வெற்றியாளராகவே திரும்புவார் என்ற பொறாமைக்காரர்களின் எதிபார்ப்புக்களில் எதனையும் இதுவரை அவர்கள் செவிமடுக்காமையினாலேயாகும்.

எனினும், தஃவாப் பாதையின் இயல்பை நன்கு அறிந்திருந்த ஷெய்க் இவற்றில் எதனையும் பொருட்படுத்தவில்லை. அனைத்து விடயங்களையும் அல்லாஹ்விடமே பொறுப்புச் சாட்டினார்.

தஃவாவின் விளைவைப் பற்றி, அதன் இயல்பைப் பற்றி அறிந்திருந்த

ஷெய்க் அல்லாஹ் தன் தூதருக்குக் கூறிய ஆறுதல் வார்த்தைகளைக் கொண்டு தன்னையும் தேற்றிக் கொண்டார்.

***''நபியே! அவர்கள் ஈமான் கொள்ளவில்லை என்ற கவலை யால் நீங்கள் உங்களை அழித்துக் கொள்ள வேண்டாம். நிச்சயமாக, அவர்கள் செய்கின்றவற்றை அல்லாஹ் மிகவும் அறிந்தவனாக இருக் கின்றான்.''***(43)

***''நபியே! அவர்களுக்கு நேர்வழியைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு உமக்கில்லை. நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியவர் களுக்கு நேர்வழி காட்டுகிறான்.''***(44)

இறுதித் தூதரின் தஃவா வாழ்வில் இருந்த அழகிய முன்மாதிரிகள் ஷெய்கின் தஃவாவின் விளைவுகள் வீணடிக்கப்படாதிருக்க உறுதுணை யாய் இருந்தன.

***''அல்லாஹ்வின் தூதரின் வாழ்வில் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது.''***(45)

# மரணத்தின் விளிம்பில்... 10

நாட்கள் வேகமாகக் கடந்தன. ஷெய்க் தனது உடலில் கொஞ்சம் கொஞ்சமாக பலவீனம் ஊடுருவதை உணர்ந்து கொண்டார். தனது தஃவாவின் விளைவுகளைப் பற்றி சிந்திக்கின்ற அதேவேளை, ஆன்மிகப் பாசறையில் தனது மகன் ரஷீதுத்தீனை வார்த்தெடுப்பதற்கும் அவர் தவறியிருக்கவில்லை.

புஹாரா நகரின் ஷெய்க்மார்களிடமும் அறிஞர்களிடமும் தனது அறிவைப் பெற்றுக் கொண்ட அவ் இளைஞன், தனது தந்தையின் பாசறையில் ஆன்மிக வழிகாட்டலையும் பெற்றுக் கொண்டான். இறை ஞானத்தில் தன்னை என்றும் நனைத்துக் கொண்டார். “நீ அல்லாஹ்வை காண்பதைப் போன்று அவனை வணங்கு, நீ அவனைக் காணாவிட்டாலும் அவன் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்” எனும் “இஹ்ஸான்” தரத்தை அவர் அடைந்திருந்தார்.

ஷெய்கின் உடற்பலம் கொஞ்சம் கொஞ்சமாக நலிவுறத் தொடங்கியது. இனம் இனத்தைச் சாரும் என்பதைப் போல, மண்ணினாலான உடல்

மண்ணில் சங்கமிக்க அவாவுற்றது. வாழ்ந்த காலம் நீண்டது என்ற சுமைக்கும், அது தந்த சுமைகளையும் சோதனைகளையும் சுமக்க முடியாத பலவீனத்துக்கும் மத்தியில் எஞ்சியிருக்கும் சொற்ப காலத்திலும் தனது இலக்கை நோக்கிய பார்வையை என்றும் கைவிடாதவராகவே அவர் இருந்தார். தான் உயிரோடு இருக்கும் காலத்திலேயே தான் காண அவாவுறு கின்ற அந்தக் கனவு நிறைவேறி விட்டது என்கின்ற செய்தியை எதிர்பார்த்த வராக காஷ்கர் நகரிலிருந்து வருகின்ற அனைத்து விவகாரங்களுக்கும் தனது செவிப்புலன்களை இரையாக்குபவராகவே இருந்தார்.

என்றாலும், காஷ்கர் நகரிலிருந்து வந்த செய்திகள் அனைத்தும் அவரது தாகத்தைத் தீர்ப்பதாகத் தெரியவில்லை. அவற்றுள் சாதாரண உள்நாட்டு வெற்றிகளும் அடங்கியிருந்தன. பெரும்பாலும், ஷெய்க் தனது இராக் காலங்களை இறை வணக்கத்திலேயே கழித்தார். ‘தஹஜ்ஜுத்’ வேளையில் மன்னன் துக்ளக் தைமூர் கானுடைய வெற்றிக்காக அல்லாஹ் விடம் மன்றாடிப் பிரார்த்தனை புரிந்தார்.

இவ்வாறு காஷ்கர் நகரிலிருந்து வந்தடைந்த செய்திகள் அவரது எதிர்பார்ப்பை நிறைவேற்றாதிருந்தபோதும் அவரது எதிர்பார்ப்பின் மீதான நம்பிக்கையை சற்றேனும் அவற்றால் குறைத்திட முடியவில்லை.

ஷெய்க் மூன்று வருடங்கள் தன் பார்வையை காஷ்கர் நகரத்தை நோக்கி இணைத்தவராகவே கழித்தார். எனினும், இந்த எதிர்பார்ப்பு எவ்வித பயனையும் அளிக்கவில்லை.

ஷெய்க் தனது வாழ்வின் இறுதித் தறுவாயை அடைந்து விட்டார். அவரது தோழர்களும் மாணவர்களும் குடும்பத்தினரும் அவரைச் சூழ நிற்கின்றார்கள்.

ஷெய்க் தனது ‘அஜல்’ கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி விட்டது என்பதனை உணர்ந்து கொண்டார்.

தனது மாபெரும் எதிர்பார்ப்பு பெரும் அழிவுக்கு உட்படப்

போவதை எண்ணிக் கடும் கவலையடைந்தார். பொறுமையோடு இருந்தார். தன்னைச் சூழ இருக்கின்ற அனைவரையும் திரும்பிச் செல்லுமாறு தனது மகனிடம் வேண்டினார்.

ஷெய்க் தனது மகனோடு மாத்திரம் தனிமையாக இருந்தார். தனக்கும் துக்ளக் தைமூர்கானுக்கும் மத்தியிலுள்ள உடன்படிக்கையையும் அனைத்து இரகசியங்களையும் தன் மகனுக்குத் தெரிவித்தார்.

தைமூர்கானின் விவகாரங்களைத் தொடர்ந்து கண்காணித்து வருமாறும், அவர் எதிரிகளை வெற்றிகொண்டு அவரது சாம்ராஜ்யத்தை ஒன்றுசேர்த்து விட்டால், அவரிடம் சென்று அவரது உடன்படிக்கையை நினைவுபடுத்தி, அவரது வாக்குறுதியை நிறைவேற்றும்படி வேண்டுமாறும் ஷெய்க் மகனுக்கு உபதேசித்தார்.

பின்னர், ஷெய்க் சுருக்கமான வார்த்தைகளால் தனது வஸிய்யத்தை மேலும் உறுதிப்படுத்தினார்.

“மகனே! நான் உனக்குக் கூறப் போகின்றவற்றை மிகவும் கூர்ந்து அவதானி! அதனைப் பேணிப் பாதுகாத்துக் கொள்! அதிலே உனது கவனத்தைச் செலுத்து.!”

பின்னர் மெல்லிய மெதுவான குரலில்,

‘‘இன்ஷா அல்லாஹ் துக்ளக் தைமூர்கான் என்றோ ஒருநாள் மாபெரும் அரசனாக மாறுவார். அப்போது நீ அவரிடம் சென்று எனது ஸலாத்தை அவருக்கு எத்திவைக்க மறந்துவிடாதே! அவர் எனக்களித்த வாக்குறுதியை அவருக்கு நினைவுபடுத்தவும் பயப்படாதே!”

பின்னர், ஷெய்க் வானத்தை நோக்கி தன் பார்வையை திருப்பிய வராக,

‘‘யா அல்லாஹ்! நான் அமானிதத்தை நிறைவேற்றி விட்டேன்...

*உனது தூதை எத்திவைத்து விட்டேன்... உனது மார்க்கத்தின் வெற்றிக்காக என்னால் முடியுமான முயற்சிகளை செலவழித்திருக்கின்றேன். இதற்கு நீயே சாட்சி... நீயே சாட்சி...!!"*

ஷெய்கின் வார்த்தைகளை குரல்வளை தடுத்துக் கொண்டிருந்தது. ஷெய்க் பேசுவதற்கு சக்தியற்றவராகவே இருந்தார்.

அப்பொழுது, அவரது இரு உதடுகளும்
"அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ்
வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்" என
மொழிந்தன.

ஷெய்க் எவ்வித அசைவுமின்றி புன்னகை பூத்தவராக, தனது பணியில் திருப்தி கண்டவராக, இறை பாதையில் தன்னால் முடிந்தளவு முயற்சிகளையும் நேரங்களையும் அர்ப்பணித்த முன்மாதிரிமிக்க முஸ்லிமாக உலகை விட்டும் பிரிந்தார்.

**"அல்லாஹ் எந்தவோர் ஆத்மாவுக்கும் அதன் சக்திக்கு அதிகமாக பொறுப்புக்களைச் சுமத்த மாட்டான்."**[46]

**"எல்லா ஆத்மாக்களும் மரணத்தை சுவைத்தே தீரும்."**[47]

அல்லாஹ் அவரைப் பொருந்திக் கொள்வானாக! அவனது மேலான சுவனத்தை அவருக்கு வழங்குவானாக!

"திருப்தி கொண்ட ஆத்மாவே! நீ திருப்தியடைந்த நிலையிலும் உன்னை (உனதிரட்சகன்) திருப்தி கொண்ட நிலையிலும் உனது இரட்சகனின் பால் மீள்வாயாக! நீ எனது நல்லடியார்களோடு சேர்ந்து கொள்வாயாக! மேலும், எனது சுனத்தில் பிரவேசிப்பாயாக"[48] என்ற வசனத்தின்படி அவரது ஆன்மா உலகை விட்டும் பிரிந்து இறைவனது உயர்ந்த அந்தஸ்த்தை நோக்கிப் பறந்தது.

உடல் ஆடாது, அசையாது, உறுப்புக்கள் மௌனமாய் இருக்க ஷெய்க் அமைதியாய் படுக்கை விரிப்பில் ஓய்வுபெற்றார். இன்று இந்த மனித ஆன்மாவின் பெறுமதிதான் என்ன!

மகன் தந்தையின் உடலை அசைத்துப் பார்த்தார்; அது எவ்வித செயற்பாடுமற்ற சடலமாக இருப்பதை உணர்ந்தார்.

கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் வடிந்தன.

ஒன்று மகனை விட்டுப் பிரிந்த தந்தைக்காக... அடுத்தது ஈமானியப் பாசறையில் பயிற்றுவித்த ஷெய்கின் பிரிவுக்காக மாணவன் விட்ட கண்ணீர்... இரண்டாம் கண்ணீர்த் துளி முதலாம் கண்ணீர்த் துளியை விட ஷெய்கை அதிகம் சொந்தம் கொண்டாடியது...!

எனினும், அழுது என்ன பயன்? ஷெய்கும் இவ்வாறு அவரைப் பயிற்றுக்கவில்லையே...! உடனே, ஷெய்கின் இறுதிச் சடங்குகளை நிறை வேற்றினார்.

ஷெய்க் ரஷீதுத்தீன் தனது தந்தையின் இலட்சியங்களை அவரது பாதையிலே சென்று நிறைவேற்றுவதற்காகவும் குறிப்பாக, அவர் மரணப் படுக்கையில் இருந்தபோது அமானிதமாய் ஒப்படைத்த இரகசியத்தை நிறை வேற்றுவதற்காகவும் உறுதிபூண்டார்.

நாட்கள் விரைவாகவே நகர்ந்தன. ஷெய்க் ரஷீதுத்தீனின் பார்வை காஷ்கர் நகரை நோக்கியே இருந்தது. அவரது உள்ளம் காணாத ஒரு நபரைப் பற்றியும் சொற்ப நிமிடங்கள் செவிமடுத்த ஓர் இடத்தைப் பற்றியதுமான சிந்தனையில் மூழ்கியிருந்தது. என்றுமே அவரது உள்ளம் துக்ளக் தைமூர் கானுடனும் காஷ்கர் நகருடனுமே இணைந்திருந்ததால் அங்கிருந்து வந்து போகின்றவர்களோடு அதனை பற்றிய வினவுவதிலேயே அவரது சகவாசம் அமைந்திருந்தது.

இவற்றுக்கு மத்தியிலும் தந்தையின் பயிற்றுவிப்பால் பெற்றதோர் ஆயுதத்தைக் கைவிடாதவராகவே ஷெய்க் ரஷீதுத்தீன் இருந்தார். அதுவே துஆ. தினமும் அல்லாஹ்விடம் மன்றாடிப் பிரார்த்திப்பவராகவே அவர் இருந்தார்.

# எதிர்பார்த்த விளைவு... 11

தனது மூதாதையர்களின் சாம்ராஜ்யத்தை விட்டும் பிரிந்த குட்டி சாம்ராஜ்யங்களோடு மன்னன் துக்ளக் தைமூர்கான் தொடுத்த போர் மக்கள் மத்தியில் பேசுபொருளாக மாறியது. அப்போர் வெற்றிகள் நாடுவிட்டு நாடு கடந்து, மன்னன் தனது இலக்கை அடைந்து விட்டான் என்ற செய்தியும் ஷெய்க் ரஷீதுத்தீனின் செவிகளை எட்டியது. அப்போது அவர் அடைந்த சந்தோஷம் மன்னனது வெற்றிக் களிப்பையே தோற்கடிக்கக்கூடியதாய் இருந்தது.

மகிழ்ச்சி ஷெய்கின் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டது. உடனே அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவராக ஸுஜூதில் வீழ்ந்தார். தான் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் வாய்த்ததையிட்டு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார். தற்போது செயற்படுவதற்கான நேரம் வந்துவிட்டது என்பதனை அவர் அறிந்து கொண்டார்.

காடு மேடுகளைக் கடந்து மலைகளில் ஏறி ஷெய்க் ரஷீதுத்தீன் தொடர்ந்த பயணத்தில் தனது தந்தை எதிர்கொண்ட பிரயாண அசௌகரி யங்களை மாத்திரம் எண்ணுவதற்குள் கண்ணீர் அவரது தாடியை நனைத்து விட்டது. இதனூடாக இறை பாதையில் ஏற்படும் அனைத்துக் கஷ்டங் களையும் எதிர்கொள்ளத் தன் தந்தையை முன்னுதாரணமாகக் கொண்டு பொறுமையோடு வெற்றியின் பால் வீறுநடை போட்டார் ஷெய்க் ரஷீதுத் தீன்.

ஒரு நாள்... மாலைப் பொழுது... சூரியன் தனது செந்நிறக் கதிர்களை இளம் தென்றலோடு வீசிக் கொண்டிருந்தவேளை, ஷெய்க் ரஷீதுத்தீன் இவை தன்னை வரவேற்று, தனது பயணத்தில் ஏற்படும் அனைத்துத் தடை களையும் தாண்டுவதற்குத் தன்னை மேலும் தூண்டுவதைப் போல் காட்சி யளிப்பதாகக் கற்பனை செய்தார். திடீரென வானம் கருமையை அணிகல னாகக் கொண்டதை கண்ணுற்ற ஷெய்க், ஆழ்ந்த கவலை கொண்டார். ஏனெனில், இந்த மார்க்கத்தை மேலோங்கச் செய்யத் தனது தந்தை செல வழித்த முயற்சிகளின் விளைவைக் கண்டுகழிக்க, அவர் இல்லையே என்ற கவலையை அது பறைசாற்றியதைப் போன்று இருந்தது!

காஷ்கர் நகர் தூரவானில் காட்சியளித்ததைக் கண்ணுற்ற ஷெய்கின் நாவு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதில் நனைந்திருந்தது. இதற்கு முன் சந்தித்திராத மனிதர்களைச் சந்திக்கும் தறுவாயில், அவரது உள்ளம் வித்தியாசமானதொரு களிப்பை உணர்ந்து கொண்டது. நிச்சயமாக, அவரது சந்தோசம் இந்த மார்க்கத்துக்குப் பணிவிடை செய்வதற்கான சந்தர்ப்பத்தை அல்லாஹ் அவருக்கு வழங்கி அவரை கௌரவித்தான் என்பதற்காகவே.

ஷெய்க் தனது பணியைக் கச்சிதமாக செய்து முடிக்கும் பாதையில் தன்னையே அல்லாஹ்வுக்கு அர்ப்பணித்தவராக அந்நகரில் நுழைந்தார். இவ்வசனத்தை அவர் என்றும் நினைவுபடுத்திக் கொண்டார்:

***''நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களிடமிருந்து அவர்களது உயிர்களையும் உடைமைகளையும் அவர்களுக்கு சுவனத்தைத் தருவ தாகக் கூறி வாங்கிக் கொண்டான்.''***[49]

# கனவா? கானல் நீரா? 12

சூரியன் அந்நகருக்குப் பிரியாவிடை அளித்துக் கொண்டிருந்தது. ஷெய்க் தனது உள்ளத்தில் நிறைந்திருந்த பாரிய எதிர்பார்ப்புக்களுடன் அந்நகரில் நுழைந்தார். மன்னனின் மாளிகைக்குச் சென்று, அவரோடு தொடர்பு கொண்டு, சத்திய மார்க்கத்தை எத்திவைத்து, இந்த மார்க்கத்தின் வெற்றிக் களிப்போடு திரும்புதல் என்ற அளவை விட இப்பணி அதிகமாக இருக்காது என்பதே ஷெய்கின் எண்ணம்.

எனினும், அவர் காஷ்கர் நகரில் தங்கியிருந்த சொற்ப நாட்களே இப்பணி மிகவும் சிரமமானது என்பதை அவருக்கு உணர்த்தின. அவர் கட்டிய எதிர்பார்ப்புக்கள் அடங்கிய விசாலமான கோட்டை சிலவேளை கானல் நீராகவே இருக்கும் என்பதை அவை உணர்த்தின. **"அதனை தாகித்தவன் நீர் என்றே எண்ணுவான். ஆனால் அதனருகே சென்றால் அங்கே எதனையுமே கண்டு கொள்ள மாட்டான்."**[50]

மன்னனின் கூடாரத்தை நோக்கிச் சென்று மன்னனைப் பல முறை சந்திக்க முயற்சித்தார் ஷெய்க். எனினும், அவரது முயற்சிகள் படு தோல்வியிலேயே முடிவுற்றன. இத்தகைய வல்லமை மிக்க மன்னனுக்கு முன்னால் சாதாரண அந்நிய நாட்டவர் ஒருவர் எத்தகைய முயற்சிகளை

மேற்கொண்டாலும் அவனுக்கு முன்னால் நிற்பது எவருக்குத்தான் சாத்தியமாக இருக்கும்! பாதுகாவலர்கள் இவரது விருப்பத்தை அடைந்து கொள்ளத் தடையாகவே இருந்தார்கள்.

இவரைப் பல தடவைகள் திருப்பியனுப்பினார்கள்; இறுதியாக மிகவும் படுமோசமான முறையில் விரட்டினார்கள்.

ஷெய்க் கவலையடைந்த நிலையில் நம்பிக்கையீனத்தோடு வீரப் போராட்டம் புரிந்தவராக மீண்டார்.

எனினும், தந்தை மரணப் படுக்கையில் இருந்தபோது கூறிய வார்த் தைகள் அவரது நினைவலைகளில் ஒலித்துக் கொண்டிருந்தன.

"துக்ளக் தைமூர்கான் என்றோ ஒருநாள் மாபெரும் அரசனாக மாறுவான். அப்போது நீ அவரிடம் சென்று எனது ஸலாத்தை அவருக்கு எத்திவைக்க மறந்து விடாதே! அவர் எனக்களித்த வாக்குறுதியை அவருக்கு நினைவுபடுத்தவும் பயப்படாதே!"

அவரது உள்ளத்திலே வீரமும் துணிச்சலும் கொதித்துக் கொண்டி ருந்தன. மீண்டும் சளைக்காத உறுதியோடு,

"நான் போக வேண்டும்; எத்தகைய சூழ்நிலையிலும் மன்னனைச் சந்திக்க வேண்டும்; எனது தந்தையின் ஸலாத்தை எத்தி வைக்க வேண்டும்; என் தந்தையோடு அவர் செய்த உடன்படிக்கையை நினைவுபடுத்த வேண் டும்!" என வேட்கை கொண்டார்.

எனினும், காலத்தோடு மௌனித்தவராக மீண்டும்,

"என்ன செய்ய... எனது விருப்பத்தை அடைந்து கொள்ள அவர்கள் என்னைத் தடுக்கிறார்களே! நான் இவ்வாறே ஆயுள் முழுவதும் இருந்தாலும் எனது இலக்கை அடைந்து கொள்ள முடியும் என்று நான் நினைக்கவில்லை.

அவ்வாறாயின், என்ன செய்ய... எனது தந்தையின் வஸிய்யத்தை நிறைவேற்றவும் வேண்டுமே...!!"

ஷெய்க் ரஷீதுத்தீன் தொடர்ந்தும் சிந்தித்தவராகவே இருந்தார்... பின்னர்.

"இல்லை... இவ்வழியைத் தவிர வேறு வழியே இல்லை.

இந்தப் பிரமாண்டமான பணிக்கு முன்னால் இத்தகைய கஷ்டங்களும் அர்ப்பணங்களும் அற்பமானதே" எனக் கூறிக் கொண்டார்.

ஷெய்க் தன்னைச் சூழ அங்குமிங்கும் நோக்கலானார். அது வானத்தில் ஓர் இடத்தைத் தேடியதைப் போன்று இருந்தது.

மன்னனின் கூடாரத்திற்கு அருகாமையில் உயர்ந்ததோர் இடத்தைக் கண்டு கொண்டார். மனிதர்கள் உறங்கும் வரையில் அவர் காத்திருந்தார்.

இருள் தனது போர்வையைக் கொண்டு நகரைச் சூழ்ந்து கொண்டது. மனித நடமாட்டம் ஏதுமில்லாத அமைதியான அவ்வேளையில் ஷெய்க் உயர்ந்த இடத்தை நோக்கி ஏறினார். நகரத்தை கண்முன்னே கண்டு கொண்டார். அதனுடைய செயற்பாடுகள் தணித்திருந்தன. அதன் ஒளிவிளக்குகள் அணைந்திருந்தன. அது முழு நகருமே ஆழ்ந்த கனவில் மூழ்கியிருக்கின்ற வேளை.

அருகாமையிலுள்ள மன்னனின் கூடாரம் உறக்கத்தில் இளைப்பாறிக் கொண்டிருந்தது. கூடாரத்தின் வாயிலில் காவலர்கள் நடக்கும் மெல்லிய ஓசையைத் தவிர எவ்வித ஓசையையும் அங்கே செவிமடுக்க முடியவில்லை.

ஷெய்க் வானத்தை நோக்கிப் பார்த்தார். அங்கே நட்சத்திரங்கள் இரவு நடுநிசியையும் தாண்டிவிட்டது என்பதை சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தன.

இருளுடனான அளவு சப்தத்தை உயர்த்தியவராக,

“அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்... அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ்... அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ்... அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூ லுல்லாஹ்... அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்...”

அதான் ஒலித்து முடிவதற்குள் காவலர்கள் அவரை இழுத்து, நிலத்தில் போட்டு, மிக மோசமாகத் தாக்கினார்கள். அவை அவர்களது கடுமையான கோபத்தை வெளிப்படுத்தின.

‘தமது பணியில் அசட்டை செய்து விட்டோம்’ என்ற உணர்வுகளோடு காவலர்கள் ஒவ்வொருவரும் தமது கோபத்தை ஷெய்கின் மீது வெளிப்ப டுத்திக் கொண்டிருந்தார்கள்.

மன்னன் தைமூர்கானின் தூதர்கள் வந்தார்கள். காவலர்கள் ஒவ்வொ ருவரும் தமது கோபத்தை ஷெய்கின் மீது வீசிக் கொண்டிருந்தனர்.

தூதுவர்கள் ஷெய்கைக் கூட்டிச் சென்றனர். நெருப்பை விடக் கடுமையான சூடாகக் காட்சியளித்த மன்னன் தனது மொத்தக் கோபத்தை யும் தீர்த்துக் கொள்ளக் காத்திருந்தான். காவலர்கள் ஷெய்கோடு அறையினுள் நுழைந்தார்கள். கோபத்தால் மன்னனின் கண்களில் தீச்சுவாலைகள் எரிந்து கொண்டிருந்தன.

எனினும், ஷெய்க் ரஷீதுத்தீன் எதையும் பொருட்படுத்தாதவராக அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடினார். உறுதியான மனநிலையோடு நிலைமையை எதிர்கொண்டார்.

இத்தகைய நிலைமைக்கு தன்னைத்தானே உட்படுத்திக் கொண்ட பின் ஏன் பயப்பட வேண்டும்?

கடும் சினத்தோடு மன்னன் தனது தூக்கத்தை சீர்குலைத்தமைக்கான

காரணத்தை வேண்டினான். உடனே, ஷெய்க் இந்த வினாவுக்கான பதிலைக் கூற மன்னனைத் தனிமையில் சந்திக்க வேண்டுமென பதிலளித்தார். ஏனெனில், அவரிடம் முக்கியமானதொரு விடயத்தை எத்திவைக்க வேண்டும் என வேண்டிக் கொண்டார்.

உடனே, மன்னனின் சிறியதொரு சிமிட்டலினூடாக அனைத்துத் தூதுவர்களும் பணியாட்களும் விரைவாக வெளியேறினார்கள்.

ஷெய்க் ரஷீதுத்தீன் மன்னன் தைமூர்கானை நோக்கி நெருங்கிய வராக தனது தூதை எத்திவைத்தார்.

ஷெய்கின் வார்த்தைகளைச் செவிமடுத்தபோது மன்னனின் கோபம் படிப்படியாகத் தணிய ஆரம்பித்தது.

அத்தோடு முன்னால் நிற்பது ஷெய்க் ஜமாலுத்தீனின் மகன் என்பதனை அறிந்து கொண்டபோது, மன்னனின் கோபம் மகிழ்ச்சியாக மாறியது.

மன்னன் துக்ளக் தைமூர் தனக்கும், ஷெய்க் ஜமாலுத்தீனுக்கும் மத்தியில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் நடந்த நிகழ்வுகளையும் அன்றைய தினம் தான் கண்ட கனவுகளையும் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

மௌனத்தைத் தொடர்ந்து மன்னன்,

"உண்மைதான்... நான் எனது மூதாதையர்களின் சாம்ராஜ்யத்தை மீட்டிக் கொண்ட நாளிலிருந்தே இதைப் பற்றி சிந்தித்துக் கொண்டே இருக்கிறேன்.

எனினும், எனக்கு வாக்களித்த அந்த மனிதன் இன்னும் வரவில்லை. ஆனால், இப்போது நீங்கள் வந்திருக்கின்றீர்கள்."

மன்னன் துக்ளக் தைமூர்கான் சொற்ப வேளை தலையைக் கீழே

போட்டார். பல விடயங்கள் அவரது சிந்தனையை ஊடறுத்தன.

எனினும், உறுதிபூண்ட தீர்மானத்தோடு எழுந்தார்.
"அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ்
வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹ்"

இப்போதிலிருந்தே, மன்னன் முஸ்லிமாகி விட்டார். இஸ்லாம் என்ற ஒளியின் பிரகாசத்தால் நிராகரிப்பு எனும் இருள்கள் அழிந்தன.

**"சத்தியம் நிலைபெற்றது; அசத்தியம் அழிந்து விட்டது. நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும்."**(51) எனக் கூறி முடித்தார்.

ஷெய்க் ரஷீதுத்தீனின் முகம் பிரகாசித்தது... தன் கண் முன்னால் நிகழ்பவற்றை அவரால் நம்ப முடியவில்லை.

தனது தந்தையின் ஆசையை நிறைவேற்றி, இஸ்லாத்தை கண்ணியப்படுத்திய அல்லாஹ்வுக்கு ஸுஜூது செய்து கண்ணீர் விட்டவராக நன்றி செலுத்தினார்.

எனினும், மன்னனின் ஆழ்ந்த சிந்தனையால் குழப்பமுற்ற ஷெய்க் ரஷீதுத்தீன், அதற்கான காரணத்தை வினவலானார். மன்னனது பதில் மேலும் சந்தோசத்தை ஊட்டியது.

மன்னன் தனது ஆளுநர்களும் படைத் தளபதிகளும் இஸ்லாத்தின் பால் திருப்தி கொள்வதற்கான வெற்றிகரமானதொரு வழிமுறையைப் பற்றித் தான் சிந்தித்திருக்கின்றார் என்பதனை ஷெய்க் அறிந்து கொண்டார்.

உடனே மன்னர் அனைத்து ஆளுநர்களும் படைத் தளபதிகளும் தன்னைச் சந்திக்க வேண்டுமென தூதனுப்பினார்.

அன்றைய காலைப் பொழுதில், ஷெய்க் ரஷீதுத்தீன் மன்னனுக்கு அருகாமையில் வீற்றிருந்த நிலையில் ஆளுநர்களினதும் தலைவர்களினதும்

வருகையை எதிர்பார்த்திருந்தார்.

ஆரம்பமாக நுழைந்தவர் ஆளுநர் துலிக் (TULIK). அப்போது மன்னன், “நான் இஸ்லாத்தை சிறந்த மார்க்கமாகத் தேர்ந்தெடுத்து விட்டேன். ஏன் நீங்களும் இஸ்லாத்தில் நுழையக் கூடாது?” எனக் கேட்டார்.

சிரித்தவராக... சந்தோசத்தோடு துலிக்...

“நான் மூன்று வருடங்களுக்கு முன்பே காஷ்கர் நகரில் ஒரு ஷெய்கி னூடாக இஸ்லாத்தை ஏற்று முஸ்லிமாகி விட்டேன். எனினும், உங்களுக்குப் பயந்து அதனை நான் பகிரங்கப்படுத்தவில்லை.!

உடனே, மன்னன் எழுந்து அவரைக் கட்டித் தழுவினார்.

ஷெய்க் ரஷீதுத்தீன் மகிழ்வுற்றதோடு, தனது தந்தையின் தூரநோக் குடனான செயற்பாடுகளைக் கண்டு வியப்புற்றார்.

இவ்வாறு இஸ்லாம் ஏனையோர்களுக்கும் எத்திவைக்கப்பட்டது. அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஒருவரைத் தவிர. அவன்தான் ஜராஸ் (JARAS).

# போர்க்களத்தில்... 13

அவன் (ஜராஸ்) இந்த மார்க்கத்தை ஏற்க மறுத்து விட்டான். உடற் பலத்துக் கான போராட்டமொன்று அவனது அடிமைக்கும் ஷெய்குக்கும் மத்தியில் நிகழ வேண்டும் என்பதே அவனது மறுப்புக்குக் காரணம்.

மெல்லிய உடலும் மென்மையான தோற்றமும் கொண்ட ஷெய்குக்கும் ஆஜானபாகுவான உடலமைப்புக் கொண்ட அடிமைக்கும் இடையில் போராட்டம்! இந்த வேண்டுகோள் அனைவரினதும் உள்ளங் களைக் கதிகலங்கச் செய்தது.

ஷெய்க் அவனது சவாலை ஏற்றுக் கொள்வதாகப் பிரகடனப்படுத் தினார். பின்னர் ஆளுனர் ஜராஸை நோக்கி,

''நான் அவரை வெற்றி கொள்ளவில்லையென்றால் உங்களை இஸ்லாத்தில் நுழையுமாறு வேண்டவே மாட்டேன். இந்த மார்க்கத்தின் அருளால் மங்கோலியர்களுக்கு கண்ணியம் கிடைக்க வேண்டுமென அல்லாஹ் நாடினால் இந்த மனிதனை வெற்றி கொள்ளத் தேவையான

பலத்தை அல்லாஹ் எனக்குத் தருவான் என்பதில் சந்தேகமே இல்லை!!" என்றார்.

அனைவரும் திகைப்புற்றனர். ஷெய்க் தன்னையே ஒரு பிரச்சினையில் சிக்கவைத்துக் கொண்டார். தெளிவான பகற்பொழுதில் காணும் சூரியனைப் போன்று ஷெய்குக்குத் தோல்வி கிட்டும் என்பதே அனைவரது திகைப்புக்கும் காரணம்.!

மன்னரும், அவரோடு இஸ்லாத்தை ஏற்றவர்களும் இந்தப் போராட்டத்தை விட்டும் ஷெய்கை திசைதிருப்ப முனைந்தனர். எனினும், அவர் தனது தீர்மானத்தில் உறுதியாகவே இருந்தார். தனது பூரண தயார் நிலையை வெளிப்படுத்தினார். என்றாலும், ஒரு சின்ன நிபந்தனையை நிறைவேற்றித் தருமாறு மன்னனைக் கோரினார்.

மன்னரும் ஏனையோரும் பெருமூச்சு விட்டவர்களாக இந்த நிபந்தனையினூடாக ஷெய்க் தான் மாட்டிக் கொண்ட இப்பிரச் சினையைத் தீர்த்துக் கொள்ள வழிபிறக்கும் என எதிர்பார்த்தார்கள். உடனே, அந்த நிபந்தனையைப் பற்றி வினவலானார்கள்.

ஆனால், பதில் மேலும் திகைப்பூட்டக்கூடியதாய் இருந்தது. அந்த நிபந்தனை, இந்தப் போராட்டம் பெரியதொரு மைதானத்தில் நடைபெற வேண்டும். இதனை நேரடியாகக் கண்டுகழிக்க அனைத்து மக்களும் அழைக் கப்பட வேண்டும் என்பதாக இருந்தது.

மன்னர் கவலையுற்றார்; அவர் எவ்வித விடையும் பகரவில்லை. இந்தப் போராட்டத்தைத் தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்த பின் அது நடைபெற வேண்டும் என்பது தவிர்க்க முடியாததாக மாறிவிட்டதை மன்னர் உணர்ந்து கொண்டார்.

இரு தரப்பினரும் குறித்ததொரு நேரத்தை முன்மொழிந்தார்கள். மன்னர் குடிமக்களுக்கு இதனைப் பற்றி அறிவித்தார். இதனைக் கண்டு களிப்பதற்கு அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

மெல்லிய பலவீனமான தோற்றமுடைய ஷெய்க் ரஷீதுத்தீன் இத்தகைய போராட்டத்தையோ, அதன் கலைகளைப் பற்றியோ ஏதும் அறியாதவர். சிலவேளை அவரிடமிருக்கின்ற பொறுமை, சகிப்புத்தன்மை போன்ற பண்புகளின் காரணமாக அவரது வாழ்வில் எந்தவொரு மனிதனுடனும் பிரச்சினைப்படாதவராகவே அவர் இருந்திருப்பார்.

ஆனால், ஆளுநர் ஜராஸின் பணியாளரைப் பொறுத்தவரையில், அனைவரும் அவனது வீரத்தையும் வன்மையையும் நன்கறிவார்கள். அவன் பலத்தையும் பிரமாண்டமான உடலைக் கொண்டவனாகவும் இருந்தான். அவனோடு போரிடுகின்றவர்களுக்குச் செய்கின்ற படுமோசமான கொடுமைகளின் காரணமாக மக்கள் அவனது பெயரைக்கூட செவிமடுப்பதை வெறுத்தனர்.

எனினும், எவராலும் அப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. குறிப்பாக, ஷெய்கும் சவாலை ஏற்றுக் கொள்வதில் காட்டிய உறுதி அப்போராட்டத்தை நிறுத்துவதற்கான அனைத்து வழிமுறைகளையும் தகர்த்து விட்டது.

நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக போராட்டக் களத்தைச் சூழ ஒன்றுகூடினர்.

போர்க் களத்துக்கு அருகாமையில் உள்ள ஆசனங்களில் மன்னனும் ஆளுநர்களும் அமர்ந்திருந்தனர்.

முஃமின்கள் இறை பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

ஷெய்கின் சில ஆதரவாளர்களான படைத் தளபதிகளுக்கு ஒரு சிந்தனை தோன்றியது. அது போர்க்களத்தில் நுழைந்து இந்த பலமிக்க வீரனைச் சாய்ப்பதுவே. எனினும், இது போராட்ட ஒழுங்குகளை மீறுவதாகவும் மக்களின் பார்வையில் மன்னிக்க முடியாத குற்றமாகவும் கருதப்படுவ

தால் இவ்வழியையும் கைவிட்டார்கள்.

போர்க்களத்தின் ஒரு முனையில் பலமிகு வீரன் துள்ளிக் குதித்த வனாக நின்றான். அவனது முகத்திலே தீராத வெறியின் அடையாளங்கள் மிளிர்ந்தன. பயங்கர மிருகத்தைப் போன்று அவன் கர்ஜித்தான். அதற்கு ஏற்றாற்போல் அவனது நெஞ்சும் கழுத்தும் அசைபோட்டன.

ஷெய்க் இன்னொரு முனையில் மெதுவாகவும் சாந்தமாகவும் வழமையான, நிதானமான நடையோடு வந்து கொண்டிருந்தார்.

பார்வையாளர்கள் சரிநிகரற்ற இரு தரப்புக்களின் மோதலையிட்டு கைசேதப்பட்டனர். அவர்களில் அதிகமானோர் இப் போராட்டம் நடை பெறக் கூடாதென்றே விரும்பினார்கள். எனினும், அது அனைவரினதும் எண்ணத்துக்கு அப்பால் சாத்தியமாக இருக்கவில்லை.

போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக முரசறையப்பட்டது.

பலமிக்க பணியாளன் தனது வீரத்தில் நம்பிக்கை வைத்தவனாக எவற்றிலும் கரிசனை செலுத்தாது முன்னேறிக் கொண்டிருந்தான். அதேவேளை, ஷெய்க் தனது இரட்சகனின் பலத்தில் நம்பிக்கை வைத்தவராகவும் இறை உதவியை மனதுக்குள் வேண்டியவராகவும்,

> "இறைவா! நான் எனது பலத்தை விட்டுவிட்டு, உனது பலத்திலும்
> சக்தியிலும் சார்ந்திருக்கிறேன்;
> இறைவா உனக்காகவே போர் புரிகின்றேன்;
> உனது மார்க்கத்துக்கு வெற்றியளித்து விடு..." என இறைஞ்சிக்
> கொண்டிருந்தார்.

போராட்டம் ஆரம்பித்தது. சொற்ப வேளையில், ஷெய்க் எதிரியின் நெஞ்சின் மீது பலமானதோர் அடியைப் போட்டார். உடனே, அவன் மயக்கமுற்றுக் கீழே வீழ்ந்து விட்டான்!!

அனைவரும் திகைப்புற்றனர். தமது இருப்பிடங்களை விட்டும்

எழுந்து ஷெய்கை வாழ்த்தி துணிவூட்டலானார்கள்.

பெரும்பாலானோரின் திகைப்புக்குக் காரணம், கீழே வீழ்த்தப்பட்ட அந்த வீரன் அவன் தன்னை கீழே வீழ்த்தப்பட்ட நிலையில் கண்டு கொண் டான். இவ்வாறு, இதற்கு முன் அவன் தன்னைக் கண்டதே இல்லை என்பதே!

வெளித் தோற்றத்தில் காயமுறாத அவ்வீரன் மீண்டும் எழுந்து, தனது பெருமையைக் காயப்படுத்திய ஷெய்கைப் பழிவாங்கத் தயாரானான்.

ஒரு முறை தன்னை அசைத்தவனாக, கர்ஜிக்கலானான்.
மக்கள் தமது மூச்சுக்களை அடைத்துக் கொண்டவர்களாக
நடக்கின்றவற்றை அவதானித்தவர்களாகவே இருந்தார்கள்.

உடனே, அந்தப் பலமிக்க வீரன் ஷெய்கின் பாதத்தடியில் வீழ்ந்தவனாக ஈமான் கொண்டான். பின் உயர்ந்த தொனியில்.

“அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ்...
வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்...”

போர்க்களமே ஒருமுறை குலுங்கியது.
அனைத்து மக்களும் ஏக தொனியில்,
“அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்... நஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்... வநஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்...” என முழங்கினார்கள்.

160000 மக்களின் உணர்வுகள் புதுத்தெம்பு பெற்றன. அனைவரும் இஸ்லாத்தில் நுழைந்தார்கள்.

மன்னனின் வியப்பையோ வர்ணிக்க முடியவில்லை. இஸ்லாம் என்ற ஒளி, நிராகரிப்பு என்ற இருளை நீக்கி பிரகாசமளித்தது. அன்றிலிருந்து இஸ்லாம் மார்க்கம் ஜகதாய சாம்ராஜ்ய மன்னனின் ஆளுகைக்குக் கீழிருந்த

அனைத்துப் பிரதேச மக்களினதும் மார்க்கமாக மாறியது.

முஸ்லிம்கள் படுமோசமான முறையில் தோற்கடிக்கப்பட்டாலும் இஸ்லாத்தின் எதிரிகள் கொண்டிருக்கின்ற அழிவுதரும் நாசகார பலத்தை விடவும், அவர்களை வெற்றி கொள்ளக்கூடிய பெரும் பலத்தை இஸ்லாம் கொண்டிருக்கின்றது என்பதை நிறுவியதில் ஷெய்க் ஜமாலுத்தீனின் பங்கு அளப்பரியது.

ஷெய்க் ஜமாலுத்தீனோடு ஆரம்ப முறையாக இந்த சிந்தனைப் படையெடுப்பை மேற்கொண்ட அவரது தோழர்களுக்கும் செய்தி எத்தி வைக்கப்பட்டது. எனினும், அவர்கள் இந்த இரகசியத்தை விளங்கிக் கொள்ளவில்லை. மகிழ்ச்சிக் களிப்பில் மூழ்கினார்கள். எனினும் ஷெய்க் ரஷீதுத்தீனூடாக அல்லாஹ் நிறைவேற்றிக் கொடுத்த இவ்வெற்றியில் அவர் களினதும் பாரியதொரு பங்களிப்பு இருந்ததென்பதை மறுக்க முடியாது.

மகிழ்ச்சி அவர்களை அரவணைத்துக் கொண்டது. அவர்கள் ஒவ்வொருவரும் வெற்றி தன்னூடாக நடந்ததைப் போன்ற உணர்வைப் பெற்றுக் கொண்டார்கள். ஏனெனில், அனைவரும் ஒரே நோக்கத்திற்காக செயற்பட்டவர்கள். யாரினூடாக அந்த வெற்றி கிடைக்க வேண்டும் என்பது அவர்களுக்கு முக்கியமாக இருக்கவில்லை. ஏனெனில், அவர்கள் ஒவ்வொரு வரும் தூய எண்ணத்தோடு இறை பாதையில் ஏற்படும் அனைத்துக் கஷ்டங் களையும் பொறுத்துக் கொண்டு, தன்னை விடவும் பிறரையே மேன்மை யாகக் கருதினார்கள். அவர்களுக்கு முக்கியம் இந்த மார்க்கத்தின் வெற்றியே.

இதோ, இன்று இவர்கள் பலமும் அதிகாரமுமிக்க மங்கோலியர் களை நிராயுதபாணியாக இஸ்லாத்தைக் கொண்டு வெற்றி கொண்டார்கள். அரசியல் முனையில் முஸ்லிம்கள் பின்நின்ற இடங்களிலெல்லாம் இஸ்லாம் தன் ஆத்ம பலத்தால் வென்றது. எந்த நிலையிலும் இஸ்லாத்திற்கே வெற்றி. இஸ்லாத்தை அழிக்க வந்தவர்கள் இன்று இஸ்லாத்தின் காவலர்களாக மாறிவிட்டார்கள். ஆக்கிரமித்த சமூகம் ஆக்கிரமிக்கப்பட்ட சமூகத்தின் மார்க்கத்தைத் தழுவிய வரலாற்றுப் பெருமை என்றும் இஸ்லாத்துக்கே!

# முடிவுரை

## இஸ்லாத்தின் வல்லமை

அதோ, அன்று முஸ்லிம்களின் மண்டை ஓடுகளிலும், பிணக் குவியல்கள் மீதும் நடந்த மங்கோலியர்கள் இன்று இஸ்லாத்திற்காக வாழ்ந்து, அதற்காக தம் உயிரை அர்ப்பணம் செய்கிறார்கள்.

(மங்கோலிய) முஸ்லிம்கள் ரஷ்யாவின் "ஜார்" மன்னர்களின் ஆட்சியில் இஸ்லாத்தை விட்டுவிடும்படி பணிக்கப்பட்டார்கள். அப்போது ஈமானை இழக்க மாட்டோம் என உறுதியாக நின்றார்கள் அவர்கள். அதன் பின்னர் வந்த ரஷ்ய ஆட்சியாளர்கள் அவர்களுக்கு சொந்த நாடொன்று இல்லை என ஆக்கினார்கள் அவர்கள் நாடின்றி அலைந்தார்கள். ஆனாலும் ஈமானின்றி அலையவில்லை. ஈமானை இழக்கவில்லை; அத்தனை துன்பங்களையும் சகித்துக் கொண்டார்கள்.

வரலாற்றின் பிந்திய கால கட்டங்களில் அவர்கள் விசித்திரமானதொரு சித்திரவதையைச் சந்தித்தார்கள். எப்படித் தெரியுமா?

புகை வண்டி கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. அதில் சரக்கு ஏற்றிடும் பெட்டியில் அந்த முஸ்லிம்கள் ஏற்றப்பட்டனர். ஒரு சரக்கு ரெயில் பெட்டியில் 20 பேர் பயணம் செய்யலாம் என்றால் அதில் 100 பேர் ஏற்றப்பட்டனர். காற்றுப்புக முடியாமல் அந்தச் சரக்குப் பெட்டிகள் மூடப்பட்டன. முஸ்லிம் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்ற பாரபட்சமின்றி அனைவரும் இப்படியே அடைக்கப்பட்டனர்.

சில கிலோ மீற்றர்கள் சென்றவுடன் பெட்டிகள் திறந்து பார்க்கப்படும். சில முஸ்லிம்கள் இறந்திருப்பார்கள். அவர்கள் இழுத்துக் கீழே தள்ளப்படுவார்.

மீண்டும் பயணம்,

மீண்டும் இதே நிலை.

ஆனாலும் அவர்கள் ஈமானை இழக்கவில்லை. ஈமானில் உறுதியாக நின்றார்கள். மரணத்தைக் கண்டு அஞ்சவில்லை.

முஸ்லிம்களை மூர்க்கத்தனமாக தாக்கியவர்கள் இஸ்லாத்தை ஏற்று அதற்காக உயிர்த் தியாகம் செய்த வரலாற்றில் மங்கோலியர்களும் இணைகின்றார்கள்.[52]

ஜஸாகல்லாஹு ஹைரா

# உசாத்துணைகள்


1. தழுவல்: அத்தீனுல் ஹக் – முஹம்மத் ஹஸன் ஹிம்ஸி

2. அத்தஃவா இலல் இஸ்லாம் – ஸேர் தோமஸ் ஆர்னல்ட்

3. தாரீகுல் இஸ்லாமி அஸ்ஸியாஸி – ஹஸன் இப்ராஹீம் ஹஸன்

4. தாரீஹ் இப்னில் அஸீர் – இப்னு அஸீர்

5. நூருல் யகீன் – முஹம்மத் ஹில்ரி பெக்

6. அல்இஸ்லாம் லுஹூருஹு வன்திஷாருஹு பில் ஆலம் – ஹாமித் அப்துல் காதர்

7. அல்கர்னுல் ஹாமிஸ் ஆஷர அல்ஹிஜ்ரிய்யுல் ஜதீத் – அபுல் ஹஸன் அலி நத்வி

8. அர்ரஹீகுல் மஹ்தூம் – ஸபிய்யுர் ரஹ்மான் முபாரக் பூரி

9. இஸ்லாம் எப்படி பரவியது? – ஸெய்யித் இப்றாஹீம்

10. விடியல் வெள்ளி சஞ்சிகை (ஜுலை–2003– இலக்கியச் சோலை வெளியீடு – இந்தியா

# அடிக்குறிப்பு

(01) அந்நஹ்ல் –125
(02) தாரீகுல் இஸ்லாமி அஸ்ஸியாஸி -V-3: P-109
(03) Glimpses of world History : by - Jawaharlal Nehru: P151
(04) தாரீகுல் இஸ்லாமி அஸ்ஸியாஸி : V-3: P160
(05) தாரீகுல் இஸ்லாமி அஸ்ஸியாஸி : V-4, P-146
(06) தாரீகுல் இப்னில் அஸீர் : V-12: p-243-244
(07) அல்அன்பால் – 60
(08) Saviours of Islamic Spirit, by abul Hasan Nadvi: P:288-289
(09) விடியல் வெள்ளி – ஜுலை 2003 P - 21
(10) அல்பிதாயா வன்நிஹாயா : V-13 - P:200
(11) விடியல் வெள்ளி – ஜுலை 2003 P:22
(12) அறிவிப்பாளர்: ஆஇஷா (றழி) அபூதாவூத், பைஹகி
(13) சூறா தாஹா – 32,33
(14) சூறா அந்நூர் – 37
(15) சூறா காப் – 15
(16) தாரீகுல் இஸ்லாமி அஸ்ஸியாஸி V-4, P-127
(17) சூறா அல்அஃராப் – 55
(18) அத் தஃவா இலல் இஸ்லாம் – P:257
(19) சூறா அல்அஃராப் – 55
(20) சூறா அல்முனாபிகூன் – 8
(21) சூறா அல்முஜாதலா – 22
(22) சூறா அல்மும்தஹினா – 9
(23) நூருல் யகீன் : P - 103
(24) நூருல் யகீன் : P - 276
(25) நூருல் யகீன் : P - 103
(26) சூறா அல் பத்ஹ் : 01
(27) சூறா அத் தவ்பா – 13
(28) அர்ரஹீகுல் மஹ்தூம் – ஸபிய்யுர் ரஹ்மான் முபாரக் பூரி

(29) நூருல் யகீன் – 281
(30) நூருல் யகீன் – 62
(31) நூருல் யகீன் – 100
(32) அஸ்ஸுஹ்ரூப் – 22
(33) சூறா அர்ரூம் – 30
(34) சூறா ஆலஇம்ரான் – 190
(35) சூறா அல்அன்ஆம் – 73
(36) சூறா ஆலுஇம்ரான் – 137
(37) சூறா அல்அன்ஆம் – 11
(38) சூறா அல்ஹஜ் – 46
(39) சூறா அல்அஃராப் – 96
(40) சூறா அல்பகரா – 255
(41) சூறா அல்கஃப் – 29
(42) சூறா அல்காபிர் – 60
(43) சூறா பாதிர் – 8
(44) சூறா அல்பகரா – 272
(45) சூறா அல்அஹ்ஸாப் –21
(46) சூறா அல்பகரா –286
(47) சூறா அல்அன் கபூத் –57
(48) சூறா அல்பஜ்ர் – 27,30
(49) சூறா அத்தவ்பா – 111
(50) சூறா அந்நூர் – 39
(51) சூறா அல்இஸ்ரா – 81
(52) விடியல் வெள்ளி – ஜுலை 2003 : P-26

வெற்றி கொள்ளப்பட்டோர் எப்பொழுதும் வெற்றி கொண்டோரைப் பின்பற்றுவர். எந்தவொரு சமூகமும் தம்மை வெற்றி கொண்ட சமூகத்தை, அதன் மதத்தை, கலாச்சாரத்தை, பழக்க வழக்கங்களை ஏற்று பின்பற்றி வந்திருப்பதைக் காண முடிகின்றது. ஆயினும், இந்த வரலாற்று உண்மை ஒரு முறை பொய்ப்பிக்கப்பட்டது. அவ்வாறு குறித்த வரலாற்றுத் தத்துவத்தைப் பொய்ப்பித்த பெருமைக்குரியவர்கள் முஸ்லிம்களே. பல இலட்சம் முஸ்லிம்களைக் கொன்றொழித்து முஸ்லிம் சாம்ராஜ்யத்தைத் தமதாக்கிக் கொண்ட மங்கோலிய - தாத்தாரியர் இஸ்லாத்தைத் தழுவியதோடு அதன் காவலர்களாகவும் மாறினர். இது மனித இன வரலாற்றில் நடந்த ஓர் அதிசயமாகவே கருதப்படுகின்றது. இஸ்லாத்தின் பரம எதிரிகளாக விளங்கிய இவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பின்னணி என்ன? இவர்கள் இஸ்லாத்தைத் தழுவுவதற்குக் காரணமாக அமைந்தோர் யார்? இது இன்று வரை ஒரு மர்மமாகவே இருந்து வருகின்றது. மங்கோலியர் இஸ்லாத்தைத் தழுவிய பின்னணி பற்றிய முடிவான உண்மைகளை வரலாற்றில் கண்டு கொள்ள முடியாதுள்ளது.

இந்நிலையில், மங்கோலியர் இஸ்லாத்தைத் தழுவிய பின்னணியை எளிமையாக விளக்கும் ஒரு நூல் எமது கரங்களுக்குக் கிடைத்துள்ளது. முஹம்மத் ஹஸன் ஹப்லி எழுதிய 'அக்கீதுல் ஹக்' எனும் நூலைத் தழுவி இது எழுதப்பட்டுள்ளது. எவ்வாறு மங்கோலியர் இஸ்லாத்தை ஏற்றதற்குப் பின்னணியில் வரலாறு சரியாகக் கண்டு கொள்ளாத சில தாஇகள் இருந்திருக்கின்றார்கள் என்பதை இந்நூல் உணர்ச்சிபூர்வமாக விளக்குகின்றது.

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத்

இஸ்லாமிக் புக் ஹவுஸ்

Rs. 350.00

WWW.ibh.lk